

Registered as a News Paper in Sri Lanka
දිනමුරසු වාරමලර්
பக்கம் 24 ரூபா 30.00
செப்ரெம்பம் 17 - 23, 2015

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 1135

# புறக்கணிப்புக்களும் புதிய சிந்தனைகளும்




## அதிகாரிகளின் இழுபறியில் அகப்படும் மக்கள்

## தேசிய அரசும் தேறிய கட்சிகளும்





## கிரீஸ் என்றொரு அடிமை!

## கண் திருஷ்டி

நல்ல எண்ணங்கள், நற்சக்திகளின் விளைவுகளைவிட தீய சக்திகளின், பொறாமை எண்ணங்களின் தாக்குதல் அதிகரிக்கும் போது அந்த சக்திகளின் தீவிரத்தைப் பொறுத்து விபத்துகள், உயிருக்கு ஆபத்து ஏற்படுதல்போன்ற துன்பங்கள் ஏற்படுகின்றன. எனவே எந்தளவிற்குப் புண்ணியசக்தியை பெருக்கிக்கொள்கிறோமோ அந்தளவிற்கு பொறாமை எண்ணங்களிலிருந்தும் அதன்விளைவாக ஏற்படும் திருஷ்டி தோஷங்களிலிருந்தும் நம்மையும் நம்முடைய உடைமைகளையும் நாம் காப்பாற்றிக்கொள்ள முடியும். பொறாமை ஏற்படுவதற்கு மூலகாரணமாக இருப்பது கண்தானே. அதனால் திருஷ்டி ஏற்படும்போது அது எந்தவித காரணத்தால் ஏற்பட்டாலும் அதை கண் திருஷ்டி என்றே வகைப்படுத்துகிறோம்.

கண்களால் தூண்டப்பட்ட மனது பக்குவம் அடையாத நிலையில் இருக்கும்போது அது பொறாமை எண்ணமாக வடிவெடுத்து மற்றவர்களைத் தாக்குகிறது. அதனால் ஏற்படும் விளைவுகள் கொடியதோ அந்தளவிற்கு பொறாமைகொண்டவர்களின் புண்ணியசக்திகள் கரைந்துவிடும் என்பதை உணர்ந்துகொள்வது அவசியம்.

## இறைவனின் அன்பு

ஹில்லல் என்கிற மிகச்சிறந்த யூதப்போதகரிடம் ஒருவர், ஒரே நிமிடத்தில், எனக்கு திருச்சட்டம் முழுவதையும் கற்றுக்கொடுக்க முடியுமா? என்று கேட்டாராம். அதற்கு ஹில்லல், "எதை நீ வெறுக்கிறாயோ, அதை நீ மற்றவருக்குச் செய்யாதே. இதுதான் திருச்சட்டம். மற்றவை அனைத்துமே வெறும் விளக்கவுரைதான்" அவர் பதிலளித்தாராம்.

அதையே சற்று மாற்றிச்சொன்னால், நம்மை நாம் நேசிப்பதுபோல, மற்றவர்களையும் நாம் நேசிக்கவேண்டும். அன்பு செய்வதற்கு நாம் மற்றவர்களை உதாரணமாகக் கொள்ளக்கூடாது. ஏனென்றால், மனிதர்களை நாம் உதாரணமாக எடுத்துக்கொண்டால், அவர்கள் அன்பு செய்கிறபோதுதான், அவர்கள் அன்பு செய்வதைப்போலத்தான் நாமும் அன்பு செய்வோம்.

அந்த அன்புதான் நமக்கு வழிகாட்டியாக இருக்கவேண்டும். அத்தகைய அன்பை நமது வாழ்வில் நாம் காட்டுவதற்கு இந்த நற்செய்தி அழைப்புவிடுக்கிறது. இந்த உலகத்தில் வாழுகிற நாம், நம்மை அன்பு செய்கிறவர்களை மட்டும் அன்பு செய்கிறோம். நம்மை வெறுக்கிறவர்களை நாமும் வெறுக்கிறோம்.

இது உலகக் கண்ணோட்டம். ஆனால், இந்த உலகக் கண்ணோட்டத்தைத் தாண்டி நாம் மற்றவர்களை அன்பு செய்ய முயல்வதற்கு அழைக்கப்படுகிறோம். அதற்கான முயற்சியை எடுப்போம்.

## அல்லாஹ்விடமிருந்து முதல் 'வஹி'

ஒரு நாள் அல்லாஹ்வின் கட்டளையின் பிரகாரம் அண்ணல் நபி முன் ஜிப்ரீல் (அலை) அவர்கள் தோன்றி ஒதுவீராக என்றார்கள். அதற்கவர்கள் எனக்கு ஓதத் தெரியாது என்றார்கள். மீண்டும் ஜிப்ரீல்(அலை) அவர்கள் ஒதுவீராகக் எனக் கேட்க அப்போதும் அவர்கள் அதே பதிலையே சொன்னார்கள். மூன்றாவது முறையாக அண்ணல் நபியை ஜிப்ரீல் (அலை) அவர்கள் கட்டியணைத்து ஓதுவீராக எனக் கூற அதற்கு அவர்கள் எனக்கு ஓதத் தெரியாது எனச் சொன்னார்கள்.

இறை தூதரிடம் இப்போதும் ஜிப்ரீல் (அலை) அவர்கள் நபியே யாவையும் படைத்த உமதிறைவனின் நதிருநாமத்தால் அவனது கட்டளைகள் அடங்கிய அல்கர் ஆணை நீர் ஓதுவீராக அவன் மனிதனை 'அலக்' கிலிருந்து படைத்தான். நபியே பின்னும் நீர் ஓதும் உதிறை வன் மாபெரும் கொடையாளி. அவன்தான் அன்றி (அதன் மூலம்) மனிதன் அறியாதவைகளை எல்லாம் அவனுக்கு கற்றுக் கொடுக்கிறான். இந்த அல்குர் ஆன் வசனத்தை அல்லாஹ்வின் தூதருக்கு ஜிஜிப்ரீல் (அலை) அவர்கள் ஓதிக் காட்டினார்கள். இதுதான் அண்ணல் நபிக்கு அல்லாஹ்விடமிருந்து முதல் ஹறி

எம்.சி.கலீல், கல்முனை - 05

கவிதைப்போட்டி 1132



• பாராட்டுக்குரியது •

## இளமையில் வறுமை

இளமையில் வறுமை
தந்த கொடுமை
சிறுவர்கள் இவர்கள்
தொழில்நுட்பத்தின்
வளர்ச்சி – அதை
ஈடுகொடுக்க
வறுமை தடையானது.
அதனால் – வரைந்த டீவியில்
படம் பார்க்கும் சிறுவர்கள்...

எம்.கவி.காலி.




# கவிதைப் போட்டி இல 1135



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவுசெய்து அனுப்பிவையுங்கள்.
அனுப்பவேண்டிய கடைசித் திகதி 28. 09. 2015

கவிதைப் போட்டி இல. 1135 தினமுரசு வாரமலர்,
த.பெ.இல. 167, யாழ்ப்பாணம்.
இல. 373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

## தொலைக்காட்சியின் அருமை

தொலைக்காட்சிப் பெட்டி
இல்லை என்ற குறை
இல்லாமல் வரைந்தாவது
தொலைக்காட்சியை
பார்க்கலாம்
என்ற எண்ணம் –
இவர்கள்
மனதில் உதித்ததுவோ.

க. நந்தினி,
யாழ்ப்பாணம்.

## அகதிச் சிறுவர்கள்

பாதி வழியிலே
தாயும் தந்தையும்
இல்லாமல் போக
மீதி வழி போகத் தெரியாமல்
வீதி வழியோரம்
விளையாடுகிறார்கள்
இந்த அகதிச் சிறுவர்கள்.

கஜன், மன்னார்

## முன்னேற்றம்

முன்னேற்றம்
ஆசிரியர் கொடுத்த
வீட்டுப் பாடத்தை
இவர்களும் வீட்டில்
வரைந்தது ஏனோ
கல்வியின் முன்னேற்றமே.

க. ஜெயந்த், கிளிநொச்சி.

கல்வியும் இல்லையே!
நித்தமும் சித்தம்
கலக்கும் வறுமை
பசியை மட்டுமல்ல
கல்வியும் இவர்களுக்கு
கிடைக்காமல் போய்விட்டதே.

மகிழ், வவுனியா.

# உங்கள் பக்கம்

## கற்றல் நிலையங்களை ஏற்படுத்தவேண்டும்

கிளிநொச்சி, கண்டாவளை பின்தங்கிய கிராமங்களில் வாழும் மாணவர்களின் நலனைக் கருத்திற்கொண்டு, இலவச மாலை நேரக்கற்றல் நிலையங்களை ஏற்படுத்தித்தருமாறு பெற்றோர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி கண்டாவளை பிரதேசச் செயலர் பிரிவின் கீழ், கல்லாறு, பிரமந்தனாறு, புன்னைநீராவி, சிவபுரம், கோரக்கன்கட்டு, ஊரியான் உள்ளிட்ட பின்தங்கிய பிரதேசங்களில் இருக்கின்ற ஏராளமான சிறார்கள், பாடசாலைக் கல்வியை மட்டுமே பயின்றுவருவதுடன், அவர்களின் பாடசாலைக்கான வரவு மிகக் குறைவாக இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனால், மாணவர்களுடைய கல்வி மற்றும் எழுத்தறிவு மிக மோசமாக காணப்படுகின்றது.

அவர்களுடைய கல்வி அறிவை மேம்படுத்துவதற்கு தனியார் கல்வி நிலையங்களுக்குச் செல்வதற்கு உரிய வசதி வாய்ப்புகள் இல்லையெனும் நிலைமையே காணப்படுகின்றது.

ஆகவே, இவ்வாறான விடயங்களை கவனத்தில் கொண்டு, மாலைநேர கற்றல் நிலையங்களை அமைத்து, சிறுவர்களின் கல்வியை மேம்படுவதற்கு வழிவகுக்குமாறு தினமுரசின் உங்கள் பக்கமூடாகக் கேட்டுக் கொள்கிறோம்.

எம்.செந்தூரன், பிரமந்தனாறு.


மடல்கள் மற்றும்
ஆக்கங்கள் உட்பட சகல
தொடர்புகளுக்கும்
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:- 167,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி :-0212223628
தொலைநகல்
(Fax): 0212221811
ஈமெயில்: (E-mail):-
thinamurasu@live.com


# வாசகர்சாலை

## காத்திருப்பு

வியாழன்தோறும்
உனக்காக காத்திருந்தேன்.
ஆனால் என் கைகளில் நீ
தவழவில்லை.
நேரம் தவறிவருவதால் வழி
பார்த்திருந்து
கண் பூத்துவிட்டது.

எம்.ஜனுவிந்த்,
பேராதனை.

## பிடித்த பக்கங்கள்

தினமுரசுக்கு வணக்கம், முரசில் மாற்றங்கள் காணக் கூடியதாக இருக்கின்றது. இதையே என் போன்ற வாசகர்கள் விரும்புவர்கள் என நினைக்கின்றேன். இடி அமீன் தொடரை ஏன் பக்கத்தில் இருந்து எடுத்தாய். கவலையாக இருந்தது. ஆனால் மீண்டும் அது பிரசுரமாகியிருந்தது. பெண்கள், சிறுவர் பக்கம் ஆகியவை எனக்குப் பிடித்த பக்கங்கள்.

ஆர்.சுரேகா, கிளிநொச்சி.

## முரசே நீ விரைவில் வா...

மக்கள் மனங்களில் என்றுமே நீங்காத இடம் பிடித்திருக்கின்றாய். அதை என்றுமே முரசு நழுவ விடாதென்றுதான் நினைக்கின்றேன். பல தடைகளைத் தாண்டிய தினமுரசுக்கு சிறுசிறு தடைகள் எல்லாம் ஜ’ஜ’பிதான். முரசு சிலநேரங்களில் எமது ஊருக்கு பிந்தியே வருகின்றது. இதை முரசு கவனத்தில் கொள்ளவேண்டும். சென்றவாரமும் ஒரு வாசகன் இதைக் குறிப்பிட்டிருந்தார். முரசு கண்டிக்கு விரைவில் வருவதற்கு முரசு ஒழுங்கு செய்யவேண்டும்.

எம்.எவ்.ஹிமாயா, கண்டி.




செப்ரெம்பர் - 17

" செய்யுங்கள் அல்லது செய்யாமலிருங்கள். முயற்சி செய்யப்போவதாக வெறுமனே சொல்லிக் கொண்டிருக்காதீர்கள். "

யோஷா

# யுத்தத்தில் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு நியாயம் கிடைக்கவேண்டும்

**அனுரகுமார திசநாயக்க**



இறுதிக்கட்ட யுத்தத்தின்போது மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றனவா என தமிழர் தரப்பினருக்கும் சர்வதேச தரப்புக்கும் ஏற்பட்டிருக்கும் சந்தேகங்களை தீர்க்கவேண்டியது அரசாங்கத்தின் முக்கிய பொறுப்பாகும். குற்றங்கள் இடம்பெற்றிருப்பின் நியாயம் நிலைநாட்டப்பட வேண்டும் என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கெதிரான ஐ.நா யுத்தக் குற்றச்சாட்டு தொடர்பிலான அறிக்கை தொடர்பில் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது கருத்து தெரிவித்துள்ள அவர், இலங்கையில் இடம்பெற்ற யுத்தத்தின் போது பொதுமக்களின் மனித உரிமைகளை மறும் செயற்பாடுகள் எவையும் நடந்துள்ளனவா என்பது தொடர்பில் பாரிய சந்தேகக் கேள்விகள் அனைத்து தரப்பினாலும் எழுப்பப்பட்டு உள்ளன.

இலங்கையில் தமிழ்பேசும் மக்களின் சார்பில் கேள்வியெழுப்பும் வேளையில் சர்வதேச அமைப்புக்களும் மனித உரிமைகள் ஆணைக்குழுவும் இலங்கைமீது அழுத்தங்களை செலுத்திவருகின்றன. எனினும் இந்த கேள்விகளை சர்வதேசமட்டத்தில் கொண்டு செல்வதனால் இலங்கையின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணமுடியாது. மாறாக, இலங்கையின் பிரச்சினைகளை உள்நாட்டுப் பொறிமுறைகளின் மூலமாகவே தீர்க்கவேண்டும்.

இன்று சர்வதேச அளவில் செயற்படும் ஒருசில அமைப்புக்கள் தமது உடன்படிக்கைகளுக்கு அமைய இலங்கையில் மீண்டும் குழப்பங்களை ஏற்படுத்த முயற்சிக்கின்றன. அவற்றை உள்நாட்டில் கட்டுப்படுத்த முடிந்தாலும் சர்வதேச அளவில் இவர்களது செயற்பாடுகளை கட்டுப்படுத்தமுடியாது.

எனினும் உள்நாட்டில் நல்லிணக்கத்தையும், சமஉரிமைகளையும் மக்களுக்கு பெற்றுக் கொடுப்பதன்மூலமாக இலங்கையின் பிரச்சினைகளுக்கு தீர்வை எட்டமுடியும்.

அதேபோல் குற்றச்சாட்டுக்கள் உண்மையாயின், பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு நியாயம் கிடைக்கவேண்டும். எனினும் இவை அனைத்தையும் உள்நாட்டு செயற்பாடுகள் மூலமாக கையாளவேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும். உள்ளக விசாரணை பொறிமுறைகளை பலப்படுத்தி அதனூடாக பிரச்சினைகளுக்கு தீர்வு காணவேண்டும். அரசாங்கம் அவற்றை சரிவர முன்னெடுக்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

# இலங்கை - இந்தியா நான்கு ஒப்பந்தங்களில் கைச்சாத்து

இந்தியாவுக்கு விஜயம் செய்துள்ள இலங்கை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இந்தியாவுக்கு விஜயம் செய்துள்ள பிரதமர் ரணில் விக்ரமசிங்க, டெல்லியில் உள்ள ஐதராபாத் ஹவுசில பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்தார்.

இப்பேச்சுவார்த்தையில் இலங்கை அரசாங்கத்துக்கும் இந்திய அரசாங்கத்துக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் நான்கு கைச்சாத்திடப்பட்டுள்ளன.

இலங்கை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி ஆகியோர் முன்னிலையிலேயே இந்த புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன.

சார்க் வலயத்தில் செய்மதி பரிமாற்றும் வேலைத்திட்டம், வவுனியா மாவட்ட வைத்தியசாலையை புனரமைக்கும் வேலைத்திட்டம், சிறிய அபிவிருத்திக்கு உதவி வழங்குதல், இந்தியாவில் 17 மாநிலங்களில் முன்னெடுக்கப்படும் அவசர சிகிச்சை சேவை அனுபவங்களை இலங்கையுடன் பகிர்ந்துகொள்ளல் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டே இந்த புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளன.

# வெளிநாடுகளுக்கு சிரட்டை கரி ஏற்றுமதி

புத்தளம் மாவட்டத்தில் இருந்து சிரட்டைக் கரி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுவருகின்றது.

தெங்கு முக்கோண வலயத்தில் ஒரு மாவட்டமாக விளங்கும் புத்தளம் மாவட்டத்தில் இருந்து கிடைக்கும் சிரட்டைகளைக் கொண்டு கரி சுடப்பட்டு ஜப்பான் மற்றும் சீனா ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றது.

இந்த சிரட்டைக் கரிமூலம் பல்வேறு பொருட்கள் செய்யப்படுகின்றது. பற்றரிகள் உட்பட இன்னும் பல்வேறு விளையாட்டுப் பொருட்கள் செய்யப்பட்டு அவை அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ஸ்கொட்லாந்து சுதந்திரத்துக்கான இரண்டாவது வாக்கெடுப்பு

பிரித்தானியாவில் இருந்து ஸ்கொட்லாந்து தனியாக பிரிந்து செல்வதற்கான இரண்டாவது வாக்கெடுப்பு மேற்கொள்ளப்படவுள்ளதாக ஸ்கொட்லாந்தின் முதல் அமைச்சர் நிக்கோலா ஸ்ரேஜன் தெரிவித்து உள்ளார்.

ஸ்கொட்லாந்தின் SNP கட்சியின் தலைவியான நிக்கோலா ஸ்ரேஜன் தெரிவிக்கையில் ஸ்கொட்லாந்தின் சுதந்திரத்திற்கான இரண்டாவது வாக்கெடுப்பு விடயம் தமது கட்சியின் 2016 ஆம் ஆண்டுக்கான தேர்தல் விஞ்ஞாபனத்தில் இடம்பெறலாம் என்று தெரிவித்துளார்.

ஸ்கொட்லாந்தின் சுதந்திரத்துக்கான வாக்கெடுப்பு கடந்த ஆண்டு நடைபெற்ற போதிலும் அது வெற்றிபெறவில்லை. இரண்டாவது வாக்கெடுப்பு 2021ஆம் ஆண்டுக்கு முன்பாக நடத்தப்படலாம் என்று நிக்கோலா ஸ்ரேஜன் கூறியுள்ளார்.

கடந்த செப்டம்பர் மாதம் நடைபெற்ற வாக்கெடுப்பில் ஸ்கொட்லாந்தின் 55 வீதமானவர்கள் ஸ்கொட்லாந்து ஐக்கிய ராஜ்ஜிய வரம்பிற்குள் நிலைத்திருக்கவேண்டுமென வாக்களித்திருந்தனர்.

எனினும் இந்த பிரிந்து செல்வதற்கான வாக்கெடுப்பின் விளைவாக மக்கள் மத்தியில் SNP கட்சிக்கு ஒரு எழுச்சி உருவானது. கடந்த மே மாதம் நடந்த பொதுத்தேர்தலில் SNP கட்சி 59 தொகுதிகளில் 56 ஐ கைப்பற்றி ஸ்கொட்லாந்தில் தனிப்பெரும் கட்சியானது.

# லண்டன், நியூயோர்க், இந்தியா நீரில் மூழ்கும் அபாயம்

தொழிற்சாலை பெருக்கத்தால், கார்பன்டை ஒக்சைட் வாயு வெளியாவது அதிகரித்து வருகிறது. எண்ணெய், எரிவாயு, நிலக்கரி போன்றவற்றை எரிப்பதன்மூலமும் அவ்வாயு அதிகளவில் வெளியாகிவருகிறது.. இப்படி எரித்துக்கொண்டே போனால், அது பருவநிலையில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும்.

அதன்மூலம், அந்தாட்டிக் பனிப்பாறைகள் முழுமையாக உருகி, கடல்நீர் மட்டம் பல மீற்றர் உயரும். அதனால், இந்த நூற்றாண்டின் இறுதிக்குள், உலகின் முக்கிய பெரு நகரங்கள் தண்ணீரில் மூழ்கிவிடும் என்று பிரபல பருவநிலை விஞ்ஞானி ஜேம்ஸ் ஹன்சன் தலைமையிலான விஞ்ஞானிகள் குழு நடத்திய ஆய்வு தெரிவிக்கின்றது.

குறிப்பாக, லண்டன், நியூயோர்க், ஷாங்காய், டோக்கியோ, ஹொங்கொங், ஹம்பேர்க் உள்ளிட்ட முக்கிய நகரங்கள் தண்ணீரில் மூழ்கிவிடும் என்று அந்த விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். இந்த பட்டியலில், இந்தியாவில் உள்ள கொல்கத்தா நகரமும் உள்ளது.

இந்த நகரங்கள் அனைத்திலும் சேர்த்து மொத்தம் 100 கோடிக்கும் மேற்பட்டோர் வசித்துவருகின்றமை குறிப்பிடத்தக்கது. எனவே, இந்த பாரிய பாதிப்பிலிருந்து உலகைப் பாதுகாக்கவேண்டுமானால், எண்ணெய், எரிவாயு, நிலக்கரி போன்றவற்றை எரிப்பதை குறைக்கவேண்டும் என்று குறித்த ஆய்வு தெரிவித்துள்ளது.

# சிறுகதைக்கான தேசிய விருது



ஜேர்மன் தமிழ் எழுத்தாளர் சங்கம் இலங்கைவாழ். தமிழ் எழுத்தாளர்களிடையே தேசிய மட்டத்தில் நடாத்தப்பட்ட சிறுகதைப் போட்டியில் அளவெட்டி ப.உதயகுமார் எழுதிய 'பூமிகா காத்திருக்கின்றாள்' எனும் சிறுகதை பரிசுக்குரிய கதையாக தேர்வுசெய்யப்பட்டு தேசிய விருதும், பணப்பரிசு, சான்றிதழ், நினைவுச்சின்னம் என்பன வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

இதுவரை எழுத்துத் துறைக்காக 15 தேசிய விருதுகளும், இரண்டு ஜனாதிபதி விருதுகளும் பெற்றுள்ள இவர் தினமுரசு வாழ இதழுக்காக கட்டுரை, கவிதை, சிறுகதை என்பனவற்றை எழுதிவருவது குறிப்பிடத்தக்கது.

# அத்தனகல தொகுதி அமைப்பாளராகிறார் சந்திரிக்கா!



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அத்தனகல பிரதான அமைப்பாளராக முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க செயற்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அத்தனகல அமைப்பாளர் பதவி, கடந்த சில மாதங்களாக வெற்றிடமாக இருந்த நிலையில் அந்த இடத்துக்கு முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க தெரிவுசெய்யப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

# குடிநீர் இல்லாமல் 2,000 பாடசாலைகள்

இலங்கை முழுவதும் சுமார் 2,000 பாடசாலைகள் சுத்தமான குடிநீர் இல்லாத நிலையில் உள்ளதாக கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம், தெரிவித்துள்ளார்.

அத்துடன், எந்தவிதமான மலசல்கூட வசதிகளின்றி சுமார் 500 பாடசாலைகள் உள்ளதுடன், ஒரு மலசலகூடத்துடன் மாத்திரம் 2,000 பாடசாலைகள் உள்ளதாகவும் அவர் கூறினார்.

கணினி, ஆய்வுகூடம், நூலகம் இல்லாத நிலையில் சுமார் 4,000 பாடசாலைகள் உள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். தெரிவுசெய்யப்பட்ட சுமார் 150 பாடசாலைகளுக்கு விஞ்ஞான உபகரணங்களை பிரித்துக்கொடுக்கும் நிகழ்வு, குருநாகலில் இடம்பெற்றபோது அவர் இதனை குறிப்பிட்டார்.

தினமுரசு
த.பெ.இல:- 167, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: -021 222 3628
தொலைநகல் (Fax):- 021 222 1811
ஈ-மெயில் (E-mail):-
thinamurasu@live.com

## முரசம்

வாசகர்களுக்கு வணக்கம்!

### தீராதா? பாலியல் கொடுமைகள்!

புங்குடுதீவு சிறுமி வித்தியா மீதான பாலியல் வல்லுறவு மற்றும் கொடூரமான கொலையைக் கண்டிக்காதவர்கள் இல்லை. அப்படி ஒரு சம்பவம் எதிர்காலத்தில் நடைபெறக்கூடாது என்று ஒருமித்து நாடு தழுவியரீதியில் ஒலித்தது.

வித்தியாவைக் கடத்திய காமக் கொடூரர்கள், பாலியல் கொடுமை செய்து, அலங்கோலமாக்கி அவளை மிருகங்கள்போல் கொலையும் செய்திருந்தார்கள். அந்தக் கொலைகாரர்களை பகிரங்க இடமொன்றில் தூக்கிலிட்டோ, தலையில் சுட்டோ மரணதண்டனை வழங்கவேண்டும் என்று வெகுஜனப் போராட்டங்கள் நடைபெறுமளவுக்கு மக்கள் ஆத்திரமடைந்திருந்தார்கள்.

ஆனாலும் இன்றுவரையும் வித்தியா கொலை வழக்கு நீதிமன்றத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. நீதி தேவதை வித்தியாவின் குடும்பத்தாருக்கு நீதி வழங்குவாள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

பெண்கள், சிறுமிகள் மீதான பாலியல் வன்முறைகள் வித்தியாவின் சம்பவத்தோடு ஒன்றும் முடிவுக்கு வரவில்லை. நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் நாளாந்தம் இவ்வாறான சம்பவங்கள் நடந்துகொண்டுதான் இருக்கின்றன.

பெண் பிள்ளைகளைப் பெற்றவர்களின் பயம் அதிகரித்துள்ளதே தவிர, பெண் பிள்ளைகளை பாதுகாப்பாக வளர்த்துவிடுவது ஒரு சமூகச் சவாலாகவே இருக்கப்போகின்றது என்ற பதற்றத்தை அதிகரிக்கவுமே செய்துள்ளது.

நாட்டில் பாலியல் வன்முறைகளும், வாகன விபத்துக்களும் பொழுதுபோக்குச் சம்பவங்கள்போலவும், நாளாந்த நிகழ்வுகள் போலவும் பழக்கப்பட்டுவிடுமோ என்ற அச்சத்தை நம்மிடையே தோற்றுவித்துள்ளது.

அந்த அச்சத்தை உறுதிப்படுத்துவது போல் கடந்த வாரம் கொட்டதெனியாவ படல்கம அக்கரங்க பகுதியைச் சேர்ந்த ஐந்து வயதுச் சிறுமி சேயா செதவ்மி என்ற சிறுமி வீட்டில் உறங்கிக் கொண்டிருந்தபோது, கடத்திச் செல்லப்பட்டு, கொடூரமாக பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டு, கழுத்து நெரிக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டிருந்த செய்தி நாட்டு மக்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

நிர்வாணமாக ஓடை ஒன்றுக்கு அருகில் சிறுமியின் சடலம் கண்டெடுக்கப்பட்டபோது, புங்குடுதீவில் வித்தியாவின் சடலம் கண்டெடுக்கப்பட்ட கொடூரத்தை நமக்கு ஞாபகப்படுத்தியதுபோல் இருந்தது.

ஐந்து வயதுச் சிறுமியை இவ்வாறு வீடு புகுந்து கடத்திக் கொண்டுபோய் சீரழிக்குமளவுக்கு பாலியல் கொடுமைகள் நடைபெறத் தொடங்கியுள்ளது. இதைத் தடுக்க சட்டங்களை கடுமையாக்குவது, கடுமையான தண்டனைகளை வழங்குவது போன்ற வழமையான கோரிக்கைகள் ஒருபுறமிருக்கட்டும்.

பெண் பிள்ளைகளைப் பெற்றவர்களும், பெண் பிள்ளைகளும் தம்மை தாமே பாதுகாத்துக் கொள்வதில் கூடுதல் விழிப்போடு நடந்துகொள்வதே நல்லது. புறக்காரணிகள் பெண்களுக்கு பாதுகாப்பு வழங்கும் என்று எதிர்பார்ப்பது தவறாகும் என்பதையே சிறுமி செதவ்மியின் படுகொலையும் நமக்கு உணர்த்துகின்றது. விழிப்படைவோம், மற்றவர்களும் விழிப்பாக இருப்பதை உறுதிசெய்வோம். வேறு என்ன செய்யமுடியும்?

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை
என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.



# புறக்கணிப்புக்களும் புதிய சிந்தனைகளும்

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தல் குறிப்பாக வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் அரசியல் தொடர்ச்சியில் பல மாறுதல்களை நிகழ்த்தியுள்ளது. தமிழ் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இறுதிச் சந்தர்ப்பத்தை வழங்கியிருக்கின்றார்கள்.

அதேவேளை கடும்போக்கு தமிழ்த் தேசிய நிலைப்பாட்டாளர்களையும், புலிகளின் போராட்டப் பின்னணி கொண்டவர்களையும் புறக்கணித்திருக்கின்றார்கள். கூட்டமைப்புக்கு எத்தனை வெற்றிகளை வழங்கினாலும் தமக்கு உதவிசெய்வதற்கு ஒருவர் வேண்டும் என்ற மக்களின் வாக்களிப்பும் யாழ்ப்பாணத்தில் வழங்கப்பட்டிருப்பதையும் அவதானிக்கலாம்.

யாரும் எதிர்பார்க்காத் தேர்தல் முடிவு என்றால் யாழ்ப்பாணத்தில் சுரேஸ் பிரேமச் சந்திரனின் தோல்விதான். அவரை யாழ்ப்பாண மக்கள் புறக்கணித்திருக்கின்றார்கள்.

கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை தமிழ் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களித்திருக்கின்றார்கள். கிழக்கு மாகாணத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் முடக்க அரசியல் செயற்பாடுகள் தொடர்பாக மக்களுக்கு போதுமான தெளிவுபடுத்தல்கள் முன்னெடுக்கப்படவில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களித்துவிட்டு, அரசாங்க உதவிகள், அரச வேலைவாய்ப்புக்கள், அபிவிருத்திகள் என்பவற்றுக்கு முஸ்லிம் அரசியல் பிரமுகர்களையும், சிங்கள அரசியல் பிரமுகர்களையும் நாடிச்செல்லும் வழக்கத்துக்கு கிழக்கு தமிழ் மக்கள் பழகியிருக்கின்றார்கள்.

பிறகு அவர்கள் இனவாதத்தோடு செயற்படுகின்றார்கள் என்றும், பாரபட்சமாக நடந்துகொள்கின்றார்கள் என்றும் கூறுவார்கள். தென்னிலங்கை அரசியலில் மாற்றம் நிகழ்ந்திருக்கின்றதே தவிர இலங்கையில் கடந்த ஒரு தசாப்த காலமாக உருவாகியிருக்கும் அரசியல் கலாசாரம் ஒன்று இன்றும் தொடர்கின்றது.

அதாவது அமைச்சரவை அமைச்சர்களாக இருந்தாலும், அவர்கள் தேசிய அளவில் சேவை செய்வதில்லை. அவர்களின் தொகுதி உள்ளடங்காத மாகாண மக்களுக்கு உதவுவதில்லை. அந்தந்தத் தொகுதி அமைச்சர்களிடமோ, நாடாளுமன்ற உறுப்பினர்களிடமோ போய் உதவிகளைப் பெற்றுக்கொள்ளுங்கள் என்று திருப்பி அனுப்பிவிடுகின்றார்கள்.

இந்த அரசியல் கலாசாரத்தை மாற்றிக் கொள்ள முடியாதுபோனால் எதிர்காலத்தில் தேசிய அமைச்சர்களைக் குறைத்து, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு அமைச்சரை நியமிக்கவேண்டும். துரதிர்ஸ்டவசமாக இதுமாதிரியான ஆளுமையற்ற சிக்கலுக்குள் நாட்டு மக்கள் அகப்பட்டிருக்கின்றார்கள்.

இதில் ஒரு அங்கமாகவே கிழக்கு மாகாணத்தில் வாழும் தமிழ் மக்களின் வாழ்வும் அமைந்துள்ளது. அவர்களுக்கு அரச தேவைகளைத் தீர்க்கவும், அரச ஒதுக்கீடுகளை பெற்றுக்கொள்ளவும், வேலை வாய்ப்புக்களை பெற்றுக்கொள்ளவும் சேவை செய்யும் தமிழ் பிரதிநிதிகள் இல்லை.

இந்த நிலையானது, கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்களை எல்லா வழிகளிலும் முடக்கிப்போட்டுள்ளது அல்லது ஒதுக்கி விட்டுள்ளது. மாகாண சபையுடனோ, மத்திய அரசுடனோ கிழக்குத் தமிழ் மக்களுக்கு நேரடித்தொடர்புகள் இல்லை. இந்த தவறுக்கும் அந்த மக்களே பொறுப்பாளிகள். தமிழர் உரிமைப் போராட்டத்திலிருந்தும் இப்போது கிழக்குத் தமிழர்கள் ஓரங்கட்டப்பட்டிருக்கின்றார்கள். தமிழர் உரிமைகள், தமிழ் மக்களின் அபிலாஷைகள், தமிழர்களின் அரசியல் நிலைப்பாடுகள் தொடர்பாக கேட்டறிந்து கொள்வதற்கும், அது தொடர்பாக கலந்துரையாடுவதற்கும் உள்ளூர் பிரதிநிதிகளும், சர்வதேசப் பிரதிநிதிகளும் வடக்கு மாகாணத்திற்கு அதிலும் குறிப்பாக யாழ்ப்பாணத்துக்கே செல்வதை வழக்கமாக்கிக் கொண்டிருக்கின்றார்கள்.

ஆகவேதான் நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகளில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் கிடைக்கப்பெற்ற முடிவுகள் எதனை வெளிப்படுத்துகின்றன என்பது கவனத்துக்குரியதாகின்றது.

யாழ்ப்பாணத்தில் தமிழ் மக்கள் யாரை நிராகரிக்கின்றார்கள், யாரை ஆதரிக்கின்றார்கள் என்பது முக்கியமாகின்றது. தொடர்ச்சியாக நடைபெற்று வந்திருக்கும் தேர்தல்களில் ஈ.பி.டி.பி கட்சிக்கு எதிர்பார்க்கும் வெற்றியை பெற்றுக் கொள்ளமுடியாவிட்டாலும், குறிப்பிட்ட வாக்கை வழங்கி அக்கட்சியின் தலைவர் டக்ளஸ் தேவானந்தாவை தொடர்ந்து ஆறாவது தடவையாக நாடாளுமன்றத்துக்கு அனுப்பி ஒரு சாதனையை யாழ்ப்பாண மக்கள் நிகழ்த்தியிருக்கின்றார்கள்.

மறுபக்கத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஆதரித்துவந்துள்ளார்கள். வட மாகாண முதலமைச்சர் கூட்டமைப்புக்கு பிரசாரம் செய்யமறுத்திருந்தார். வட மாகாண முதலமைச்சர் குறித்து யாழ்ப்பாண மக்களுக்கு ஒரு விருப்ப அபிப்பிராயம் இருந்தது. ஆகையால் முதலமைச்சர் தேர்தலில் கூட்டமைப்புக்கு வாக்களிக்குமாறு மக்களிடம் கேட்பதைத் தவிர்த்திருந்ததோடு, கூட்டமைப்பிலிருப்போர் வாக்குகளைப் பெற்று பதவிகளைப் பெற்றுக் கொண்டதும், அவர்கள் மக்களைவிட்டு போய்விடுகின்றார்கள். அரசிடமிருந்து பெருந்தொகைப் பணத்தைப் பெற்றுக் கொண்டிருக்கின்றார்கள். இளைய தலைமுறைகளை வளர்க்காமல் ஒரு வகை சுயநலனுடன் செயற்படுகின்றார்கள் என்றவாறான பல விமர்சனங்களை வெளிப்படையாகவே முன்வைத்திருந்தார்.

ஆனால் முதலமைச்சரின் விமர்சனங்களை யாழ்ப்பாண மக்கள் புறக்கணித்து இருக்கின்றார்கள். அதேவேளை கூட்டமைப்பை விடவும், கடும்போக்கான தமிழ்த் தேசிய நிலைப்பாட்டைக் கொண்டிருந்ததோடு, கூட்டமைப்பின் தவறான போக்கையும், செயற்திறனற்ற செயற்பாடுகளையும் பகிரங்கமாக சுட்டிக்காட்டி மக்களின் ஆணையைக் கோரியிருந்ததையும் யாழ்ப்பாண மக்கள் புறக்கணித்திருக்கின்றார்கள்.

மறுபக்கத்தில் முன்னாள் புலிகளையும் யாழ்ப்பாண மக்கள் புறக்கணித்திருக்கின்றார்கள். இந்த வரிசையில் கூட்டமைப்பின் ஆரம்ப கால உறுப்பினராக இருந்துவந்துள்ள சுரேஸ் பிரேமச்சந்திரனையும் யாழ்ப்பாண மக்கள் புறக்கணித்திருக்கின்றார்கள்.

சுரேஸ் பிரேமச்சந்திரன் நாடாளுமன்ற உறுப்பினரல்லாத காரணத்தை பயன்படுத்தி அவரை கூட்டமைப்பின் உயர்மட்ட பிரதிநிதி அந்தஸ்திலிருந்து அகற்றியுள்ளனர். தவிரவும் நாடாளுமன்ற உறுப்பினராக இல்லாததால் அவருக்கு கூட்டமைப்பின் பேச்சாளராகவும் இருக்கத் தகுதி இல்லை என்ற முடிவை கூட்டமைப்பின் தலைமைகள் எடுத்துள்ளன.

இவ்வாறான புறக்கணிப்புக்களின் காரணமாக வருத்தப்படாத வாலிபர் சங்கம்போல் இப்போது தமிழ் மக்களிடையே புறக்கணிக்கப்பட்டோர் சங்கம் ஒன்றை அமைப்பது தொடர்பாக கலந்துரையாடல்களை நடத்திக்கொண்டு இருக்கின்றார்கள்.

வடமாகாண முதலமைச்சர், கஜேந்திரன் பொன்னம்பலம், சுரேஸ் பிரேமச்சந்திரன் ஆகியோர் இணைந்து தேசியக் கூட்டமைப் பொன்றை உருவாக்குவது தொடர்பாக சில உத்தியோகப்பற்றற்ற பேச்சுக்களை நடத்திவருவதாக தெரியவருகின்றது. அதற்கான சாத்தியங்கள், அசாத்தியங்கள் தொடர்பான பேச்சுக்களும் நடந்துவருகின்றன.

ஆனாலும் வடமாகாண முதலமைச்சருக்கு எதிரான நடவடிக்கை ஒன்றை கூட்டமைப்பு எடுக்குமானால் அதன் பின்னரான சூழலில் அநேகமாக கஜேந்திரன் அணியினரோடு முதலமைச்சர் இணைந்து புதிய தமிழ்த் தேசிய அணி ஒன்றுக்கு தலைமை கொடுக்கும் வாய்ப்புக்கள் இருப்பதாகவும் கூறப்பட்டது.

இந்த நிலையிலேயே கடந்த வாரம் கொழும்பில் நடைபெற்ற கூட்டமைப்பின் உயர்மட்டக் கலந்துரையாடலில் முதலமைச்சர் விக்னேஸ்வரன் பதவிநீக்கம் செய்யப்பட வேண்டும், அல்லது ஒழுக்காற்று நடவடிக்கைக்கு உள்ளாக்கப்படவேண்டும் என்ற விவாதங்கள் கடுமையான தொனியில் இடம்பெற்றுள்ளன.

ஆனாலும் ஒட்டுமொத்தமாக மாகாண சபைகளை கலைத்துவிட்டு மாகாண சபைக்கு புதிய தேர்தல் ஒன்றை நடத்துவது தொடர்பாக அரசாங்கம் சிந்திக்கின்றது. அவ்வாறான ஒரு சூழலில் வலிந்து முதலமைச்சர்மீது நடவடிக்கை எடுப்பதால் தமிழ் மக்களிடம் தேவையற்ற விமர்சனத்தை சந்திக்கநேரிடும். அதுமட்டுமல்லாமல் முதலமைச்சரை வெற்று மனிதனாக வெளியில் விடுவதற்குப் பதிலாக பெறுமதியான சூழலில் அவரை எதிரணி முகாமுக்குள் அடைக்களம் புகுந்துகொள்ள இடமளிப்பதும் பாதிப்பாகும் என்றவிதமான ஆலோசனைகளைத் தொடர்ந்தே முதலமைச்சரோடு கூட்டமைப்புக்கோ, தமிழரசுக் கட்சிக்கோ ஒரு லடாயும் இல்லை. எங்களுக்குள் சில கருத்து வேறுபாடுகள் மட்டுமே இருந்தது என்று தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா அண்மையில் குறிப்பிட்டார்.

ஆனால் இதே மாவைதான் இம்மாத முற்பகுதியில் வவுனியாவில் நடைபெற்ற தமிழரசுக்கட்சியின் கூட்டத்தில் உரையாற்றும் போது, முதலமைச்சரை தமிழ் மக்கள் நிராகரித்திருக்கின்றார்கள். தேர்தல் காலத்தில் அவர் நடந்து கொண்டவிதமாக விரைவில் சில நடவடிக்கைகளை எடுக்கவுள்ளோம் என்றும் கூறியிருந்தார்.

சுரேஸ் பிரேமச்சந்திரன், நாடாளுமன்ற உறுப்பினரகளான செல்வம் அடைக்கலநாதன், சித்தார்த்தன் ஆகியோர் இணைந்து தமிழரசுக் கட்சிக்கு சவால்விடக்கூடிய பொது தேசிய அணி ஒன்றை உருவாக்குவார்கள் என்று எதிர்பார்க்கப்பட்ட சூழலில் சுரேஸை புறக்கணித்த தமிழரசுக்கட்சியினர் செல்வத்திற்கு நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவர் பதவியை பெற்றுக்கொடுத்து அவரை முரண்படாதவாறு பார்த்துக் கொண்டுள்ளது.


முதலமைச்சரை தடுத்தும், செல்வத்தை தடுத்தும், கூட்டமைப்பின் தலைமையும், தமிழரசுக் கட்சியும் சேர்ந்து காய்நகர்த்தி இருக்கும் விதமானது, சுரேஸின் முயற்சிகளை தடுத்து அவரை தனிமைப்படுத்தியுள்ளது.


தமிழரசுக் கட்சியின் வெற்றிகரமான அரசியல் ஆட்டமானது, அநேகமாக அடுத்து நடைபெறலாமென எதிர்பார்க்கப்படும் மாகாண சபை அல்லது உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்களில் தமிழரசுக் கட்சி தனியாக களம் இறங்குகின்ற வகையில் தனது பாதையை பலப்படுத்தியுள்ளதைக் காட்டுகின்றது.

அவ்வாறானதொரு நிலைமை வளர்ச்சி பெறும்போது கூட்டமைப்பில் உள்ள ஏனைய கட்சிகள் தமிழரசுக் கட்சியிடம் சரணாகதி அடையவேண்டும். இல்லாவிட்டால், புதிய பாதையில் பயணிக்க தயாராகவேண்டும் என்ற நிலைமை ஏற்படும்.



# கூர்ப்படையும் மனிதர்...





உயிர்வாழ்வதற்கு ஏற்ற சூழலைக் கொண்ட ஒரேயொரு கிரகமாக தற்போதுவரை ஏகோபித்த உரிமையை கொண்டாடிவரும் நாம் வாழும் பூமியானது தன்னகத்தே பல மில்லியனுக்கும் மேற்பட்ட உயிரினங்களைக் கொண்டு காத்துவருகிறது. நான்கு பில்லியன் வருடங்களுக்கு முன்பு ஒரு கலத்தைக்கொண்ட அங்கியாக தோற்றம்பெற்ற உயிரின ஆட்சியானது இன்று பல சிக்கலான கட்டமைப்புகளையுடைய தாவரங்கள், விலங்குகளாக பரிணாம வளர்ச்சி அடைந்து அவற்றின் உச்சமாக ஆறறிவு படைத்த மனிதனை உருவாக்கியுள்ளது.

ஒவ்வொரு யுகத்திலும் ஏதாவது ஒரு உயிரினம் கூர்ப்பில்தான் பெற்ற சாதகமான இயல்புகளை கொண்டு ஏனைய இனங்களைவிட தன்னை மேன்நிலைப்படுத்தி பூமியின் ஆட்சியான உயிரினமாக இருப்பதும் பின்னர் அவ்வினம் பூமியில் ஏற்பட்ட பாரிய எரிகற்களின் மோதுகை, எரிமலைக்குமுறல்கள், நிலநடுக்கங்கள், வெள்ளப்பெருக்குகள் போன்ற இயற்கை அனர்த்தங்களாலும் அவற்றை தொடர்ந்து ஏற்பட்ட காலநிலை மாற்றங்களாலும் முற்றாக அழிவடைவதும் அவ்வெற்றிடத்தை இன்னுமொரு ஆட்சியான உயிரினம் இட்டு நிரப்புவதுமாக இருந்துவந்துள்ளது. அந்தவகையில் இரண்டு இலட்சம் வருடங்களுக்கு முன் தோற்றம் பெற்றதாக நம்பப்படும் மனித இனமானது (Homo sapiens) இன்று வரை தனது ஆட்சியை பூமியில் நிலைநிறுத்தியுள்ளது

விஞ்ஞான கண்டுபிடிப்புகள்மூலம் தனது மேலாதிக்கத்தை நிலைநிறுத்தியுள்ள இந்நவீன மனிதன் ஏனைய உயிரினங்களைவிட பூமியின் இயற்கைச் சமநிலையில் ஏற்படுத்திய தாக்கம் மிக அதிகம். இம்மனிதன் எதிர்காலத்தில் கூர்ப்பில் எத்திசையில் பயணிப்பான் என்பதும் அப்போது அவன் தனது இனத்தின்மீதும் பூமியின்மீதும் எவ்வகையான தாக்கங்களை ஏற்படுத்துவான் என்பதும் தொடர்பான கருத்துக்கள் பல ஆய்வாளர்களின் கணிசமான கவனத்தை ஈர்த்துள்ளது.

உயிரினங்களின் தோற்றம் அவற்றின் பல்வகைத்தன்மை தொடர்பாக அதுவரை காலமும் இருந்துவந்த - அதாவது பூமியிலுள்ள ஒவ்வொரு இனமும் தனித்தனியாக தோற்றம் பெற்றன என்றும் அவை நிலையானவை - என்றதுமான தவறான கொள்கைகளை சாள்ஸ் டார்வினின் (Charles Darwin) 'இயற்கைத் தேர்வு' (Natural Selection) தொடர்பான கூர்ப்புக்கொள்கையானது தலைகீழாக மாற்றிவைத்தது. அவர் 1859ஆம் ஆண்டில் தனது 'உயிரினங்களின் தோற்றம்' (The Origin of Species) என்ற ஆய்வுநூலில் உயிரினங்கள் அனைத்தும் ஒரு பொதுவான ஆரம்பத்திலிருந்து தோற்றம் பெற்றே இயற்கைத்தேர்வினூடாக பல்வகைத் தன்மை பெற்றன என்றும் இச்செயன் முறையானது ஒரு தொடர்ச்சியான நிகழ்வென்றும் தனது முடிவினை முன்வைத்தார். அவரது இயற்கைத் தேர்வு கொள்கையானது பின்வருமாறு அமைகிறது.

- ஒரு குடித்தொகையிலுள்ள ஒவ்வொரு தனியனும் (individual) ஒன்றிலிருந்து ஒன்று வேறுபட்டது. அந்த வேற்றுமை (variation) ஆனது மரபுவழியாக அதன் எச்சங்களுக்கு கடத்தப்படக்கூடியது.
- சூழலுடன் ஒத்துவாழ முடியாத தனியனுக்கு சூழலில் அது எதிர்கொள்ளும் சவால்களிலிருந்து தப்பி உயிர்பிழைத்து இனப்பெருக்கத்தில் ஈடுபடும் வாய்ப்பு மிகக் குறைவு. சூழலுடன் ஒத்துவாழும் தனியன் தப்பிப்பிழைத்து இனப்பெருக்கத்தில் ஈடுபட்டு தனது மரபுவழியாக பெறத்தக்க பண்புகளை அடுத்த தலைமுறைக்கு விட்டுச்செல்லும். இச்செயன்முறையே இயற்கைத்தேர்வு முறையை உருவாக்குகிறது.
- இவ்வாறு மெதுவாக நடைபெறும் இயற்கைத்தேர்வு முறையானது குடித்தொகைகளில் சுற்றுச் சூழலுடன் ஒத்துவாழ்வதற்கான இசைவாக்கத்தை ஏற்படுத்துகிறது. இறுதியில் அக்குடித் தொகையில் சிறிது சிறிதாக தோற்றம் பெற்ற வேற்றுமைகளானது புதிய இனத்தோற்றத்திற்கு வழிவகுக்கிறது.

இந்தவகையில் மனிதன் அவனது மூதாதையர்களான மனிதக் குரங்கிடம் இருந்தே கூர்ப்படைந்தான் என்ற கருத்து, டார்வினின் கொள்கையின் பின் முன்வைக்கப்பட்டது. இதற்கு தோமஸ் ஹக்ஸ்லி (Thomas Huxly) என்ற ஆய்வாளரின் கருத்தும் வலுச்சேர்த்தது.

ஆனால் டார்வினின் கோட்பாடானது ஒரு உயிரினம் தனது பண்புகளை எப்பொறிமுறையினால் அதனது எச்சங்களுக்கு கடத்துகிறது என்பதையும் விலங்குகளில் காணப்படும் சிக்கலான கட்டமைப்பையுடைய அங்கங்கள் (organs) எவ்வாறு மெதுவாக நடைபெறும் இயற்கைத்தேர்வு முறையினால் உருவாக்கம் பெற்றன என்பதையும் விளக்க தவறிவிட்டது. டார்வினின் கொள்கையை ஆதரித்த பலரில், முக்கியமாக அல்ஃரட் ரசல் வலஸ் (Alfred Russel Wallace) உம் சாள்ஸ் லயல் (Charles Lyell) உம் மனிதனின் தனித்துவமான பண்புகளான மனவாற்றலையும் தார்மீக பண்புகளையும் இயற்கை தேர்வு முறையால் விளங்கப்படுத்தமுடியாது என்ற வாதத்தை முன்வைத்தார்கள்.

இதற்கு சரியான பதில் கிடைக்கப் பெறாவிட்டாலும் இதன்பின்னர் 1936, 1947 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பல உயிரியலாளர்களின் உதவியுடன் டார்வினின் இயற்கைத்தேர்வு கொள்கையானது மரபியல் தொல்லுயிரியல் ஆய்வு உயிரியல் ஒழுங்கு முறைகள் என்பவற்றுடன் இணைக்கப்பட்டு நவீன டார்வினின் கோட்பாடு அல்லது நவீன பரிணாமத் தொகுப்பு உருவாக்கப்பட்டது.

இக்கோட்பாட்டின்படி ஒரு தனியனுடைய பண்புகள் அதன் எச்சங்களுக்கு மரபணுமாற்று முறை மூலம் கடத்தப்படுவதினாலேயே கூர்ப்பு நடைபெறுவதாகவும் இம்மரபணு மாற்றுமுறையானது இயற்கைத் தேர்வு, மரபணுவின் நகர்வு, பிறழ்வு, பரம்பரை அலகின் ஓட்டம் என்ற காரணிகளாலேயே தீர்மானிக்கப்படுவதாகவும் கொள்ளப்பட்டது.

நவீன டார்வினின் கோட்பாட்டினைக் கொண்டு ஆய்வாளர்கள் பூமியில் ஒரு கல அங்கியின் தோற்றத்திலிருந்து சிக்கலான கட்டமைப்பைக் கொண்ட மனிதன்வரை எவ்வாறு பரிணாம வளர்ச்சி ஏற்பட்டிருக்கும் என்பதை பல்வேறு யுகங்களாகப் பிரித்து ஆராய்ந்து ஆதாரங்களுடன் முன்வைத்துள்ளார்கள். அந்தவகையில் எவ்வாறு மனிதக்குரங்கிலிருந்து பல படிநிலை மாற்றங்களினூடாக நவீன மனிதன் உருவானான் என்பதை சற்றுநோக்கினால், Homo sapiens sapiens எனும் இனமே இப்போது Homo என்ற சாதியில் எஞ்சியுள்ள ஒரே ஒரு இனமாகும். ஆதாரங்களின் படி மனிதனின் ஆதி மூதாதையரான Homo habilis எனும் இனம் 2.4 – 1.4 மில்லியன் வருடங்களுக்கு முற்பட்ட காலப்பகுதியில் தெற்கு மற்றும் கிழக்கு ஆபிரிக்காவில் தோற்றம்பெற்றுள்ளது.

அதனைத் தொடர்ந்து H.rudolfensis (1.9-1.6Ma), H.erectus (1.8 Ma- 70000 வருடங்களுக்கு முன்), H.antecessor (1.2Ma –500ka), H.rhodesiensis (300ka- 125ka) H.neanderthalensis (40000 – 30000 வருடங்களுக்கு முன்) என பலபடி நிலைகளினூடாக பரிணாமமடைந்து நவீன மனிதன் உருவாகியுள்ளான். இவற்றிலே H.erectus உம் H.neanderthalensis உம் குறிப்பிட்ட காலப்பகுதியில் H.sapiens உடன் சமகாலத்தில் வாழ்ந்ததற்கான தொல்லுயிரியல் ஆதாரங்களும் கிடைத்துள்ளன. இதில் H.neanderthalensis ஆபிரிக்காவுக்கு வெளியே முக்கியமாக ஐரோப்பா மற்றும் ஆசியாவிலேயே தோற்றம் பெற்றதாகவும் ஆபரிக்காவை விட்டு வெளியேறிய நவீன மனிதன் இவ்வினத்துடனும் இனக்கலப்பில் ஈடுபட்டதாகவும் தற்போதைய ஆய்வாளர்கள் நம்புகின்றனர்.

பின்னர் இவ்வினங்கள் நவீன மனிதனுடன் ஏற்பட்ட போட்டியின் காரணமாக அழிவடைந்திருக்கலாம் எனக் கருதப்படுகின்றது. நவீன மனிதனுக்கும் அவனது மூதாதையினருக்கும் இடையேயுள்ள பிரதான வேற்றுமைகள் என்னவென்றால் அவை மனித மூதாதையர் கொண்டிராததும் நவீன மனிதன் கொண்டுள்ளதுமான நிமிர்ந்த தோற்றமும் அதீத நுண்ணறிவுமேயாகும். நுண்ணறிவு வளர வளர மனிதன் கருவிகளை பயன்படுத்த ஆரம்பித்ததோடு நாகரிகமாகவும் வாழப்பழகிக் கொண்டான். இன்று விஞ்ஞான அறிவோடு விஸ்வரூபம் எடுத்து நிற்கிறான்.

(தொடரும்)



# நிலமெல்லாம் இரத்தம்

**170**

**பா.ராகவன்**

ஆட்சி அதிகாரம் கைக்குவந்த மறுகணமே நிதி விவகாரங்களில் குற்றச்சாட்டு எழுந்ததில் அரபாத் மிகவும் மனம் உடைந்துபோனார். பெரும்பாலான பலஸ்தீனியர்களுக்கு இந்த ஏற்பாடே பிடிக்கவில்லை என்பதிலும் அவருக்கு வருத்தம் தான். அமைதியின் தொடக்கமாக ஒஸ்லோ ஒப்பந்தத்தை அவர் கருதினார்.

அதன்வழியே எப்படியாவது 1967 யுத்தத்துக்கு முன்னர், பலஸ்தீனிய அரேபியர்களுக்கென்று இருந்த நிலப்பரப்பை முழுவதுமாக மீட்டு, ஒரு சுதந்திர பலஸ்தீனை நிறுவுவதே அவரது கனவாக இருந்தது.

அதையெல்லாம் யாரும் பொருட் படுத்தத் தயாராக இல்லை. உள்நாட்டில் அரபாத்தின் செல்வாக்கு கணிச மாகச் சரியத் தொடங்கிய அதே சமயம், அமைதிக்கான நோபல் பரிசை அவர் ஷிமோன் பெரஸ் மற்றும் இட்ஸாக் ராபினுடன் பகிர்ந்துகொள்வார் என்று ஸ்வீடிஷ் அகடமி அறிவித்தது.

இது நடந்தது 1994ஆம் ஆண்டு. பலஸ்தீனியர்கள் இன்னும் கோபம் கொண்டார்கள். நிலைமை மேலும் மோசமாகத்தான் ஆரம்பித்தது.

இஸ்ரேலுடன் அமைதிப் பேச்சு. மற்ற எந்த அரபு தேசமும் செய்ய முன்வராதவகையில் இஸ்ரேலை அங்கீகரிப்பது. அமெரிக்காவில் போய் உட்கார்ந்துகொண்டு இஸ்ரேலிய அதிகாரிகளுடன் ஒப்பந்தத்துக்கான பூர்வாங்க ஏற்பாடுகள் செய்தது. நோர்வேயில் அமைதி ஒப்பந்தம். மீண்டும் அமெரிக்காவில் அதை உறுதிப்படுத்துவது. இதெல்லாம் நடந்து முடிந்தவுடனேயே அமைதிக் கான நோபல் பரிசு. அதையும் இஸ்ரேலியர்கள் இரண்டுபேருடன் பகிர்ந்துகொண்டது.

என்ன இதெல்லாம்? செய்வது யார்? யசீர் அரபாத்தா? பாலஸ் தீனிய அரேபியர்களின் ஒரே நம்பிக்கை நட்சத்திரம் என்று வருணிக்கப்பட்ட வரா? எப்படி அவரால் இப்படியொரு அரசியல் முகம்கொள்ள முடிந்தது? எதனால் அவர் இப்படி மாறிப்போனார்? இஸ்ரேல் கிடக்கட்டும், அமெரிக்கா வுடன் எப்படி அவரால் தோழமை கொள்ளமுடிந்தது? ஏன் இதனைச் செய்தார்? ஒரு ஜிகாத் போராளி செய்யக்கூடியவையா இதெல்லாம்?



இதுதான் பலஸ்தீனியர்களுக்குப் புரியவில்லை. இதன் காரணமாகத் தான் அரபாத்தை அவர்கள் கடுமை யாக எதிர்க்கவும், கண்டபடி பேசவும் ஆரம்பித்தார்கள். அரபாத்தின் இந்த நடவடிக்கைகளை சறுக்கல் என்று வருணித்தார்கள். 'ஒரு பரிசுத்தமான போராளி, விலை போய்விட்டார்' என்று பேசவும் ஏசவும் தொடங்கினார்கள்.

ஆனால், சற்றே கண்ணைத் திறந்து, நடந்த அனைத்தையும் நடுநிலைமையுடன் பார்க்கமுடியுமானால் அரபாத் சறுக்கவில்லை என்பது புரியும். செய்த ஒரு தவறுக்குப் பிராயச்சித்தமாகத்தான் அவர் இவற்றையெல்லாம் செய்ய ஒப்புக் கொண்டார் என்பது புரியவரும். இதைக்கூடத் தனக்காக அல்லாமல் பாலஸ்தீனிய அரேபியர்களுக்காகத் தான் அவர் செய்தார் என்பதும் கவனத்தில் ஏறும்.

1991ஆம் ஆண்டு மத்தியக் கிழக்கில் ஒரு புயல் வீசியது. புயலின் பெயர் சதாம் உசேன்.

**(தொடரும்)**

---

அல்ஹாஜ் எம்.எப்.எம். இக்பால் (J.P)
யாழ்ப்பாணம்

**20**



# விடுதலை வீரர் நெல்சன் மண்டேலா

**தென்னாபிரிக்காவின் தேசத் தந்தையாக மட்டுமல்லாமல், உலக மக்களின் உள்ளங்கவர் கள்வராகவும் வாழ்ந்து விடுதலைப் போராட்டத்தின் வெற்றியை அந்த மக்களுக்கு பெற்றுக்கொடுத்த விடுதலை வீரர் நெல்சன் மண்டேலா அவர்களின் வாழ்க்கைப் பாதையை மீண்டுமொரு தடவை புதிய சிந்தனையுடன் மீட்டுப்பார்ப்பது பொருத்தம் என்ற அனேக வாசகர்களின் வேண்டுகோளுக்கு ஏற்ப புதிய பகுதி தொடங்கப்படுகின்றது. வாசிப்பதோடு மட்டுமல்லாமல் வாசகர்கள் தமது அபிப்பிராயங் களையும் முரசுக்கு அனுப்புங்கள். அதையும் இதே பகுதியில் பிரசுரித்து அனைவரும் மகிழ்ச்சியடைவோம்.**

அவர்களது திட்டப்படி புகையிரத நிலையத்தை அடைந்து ஜொஹன்னர் ஸ்பெர்க் செல்ல இரண்டு பயணச் சீட்டுக்கள் வேண்டுமென்று கேட்டனர். அந்த புகையிரத நிலைய அதிகாரி இருவரையும் முறைத்து பார்த்துவிட்டு பயணச்சீட்டுக்கள் இல்லை. மன்னிக்கவும், என்னால் உங்களுக்கு பயணச்சீட்டுக்கள் தரமுடியாது என பதிலளித்தார்.

இருவரும் ஒன்றுமே புரியாது ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்து திகைத்தனர். ஏன் எமக்கு பயணச்சீட்டுக்கள் தர முடியாது என்று மண்டேலா அதிகாரியிடம் கேட்க அவர் முறைத்துவிட்டு "நீங்கள் இருவரும் வந்து பயணச்சீட்டுக்கள் கேட்டால் கொடுக்கவேண்டாமென்று ஜோங்கிந்தாபா அரசர் ஏற்கனவே எங்களுக்கு அறிவித்திருக்கிறார். அவரது வாக்கை நாங்கள் மீறமாட்டோம்" என்று பதில்சொன்னவுடன் இருவரும் அடித்துப் புரண்டு ஓடிவந்து மீண்டும் காரில் ஏறிக்கொண்டனர்.



தங்களது திட்டத்தை தந்தை ஜோங்கிந்தாபா ஏற்கனவே மன- தால் ஊகித்திருக்கிறார் போல. அதனால்தான் முன்கூட்டியே புகையிரத நிலையத்திற்கு அறிவித்திருக்கிறார் என இருவரும் பேசிக்கொண்டனர்.

அடுத்த புகையிரத நிலையத்திற்கு சென்று இருவரும் பயணச்சீட்டுக்களை பெற்றுக்கொண்டனர். ஜொஹன்னர் ஸ்பெர்க்கிற்கு பயணச்சீட்டு கிடைக்க வில்லை. அதற்கு முன்னுள்ள நகரமான குயின்ஸ்டவுன் வரைதான் போகமுடியும் என்று புகையிரத அதிகாரிகூறியதும் பரவாயில்லை என்றுகூறி புகையிரத த்தில் ஏறி இருவரும் அமர்ந்துகொண்டனர். வெகுசீக்கிரத்தில் தந்தை ஜோங்கிந்தா பாவின் கட்டுப்பாட்டு எல்லைப் பகு தி களை கடந்துவிடவேண்டுமென அவர்கள் மனம் துடித்தது. புகையிரதம் நகர்ந்து செல்லச் செல்ல அடுத்து நாம் என்ன செய்யப்போகிறோம், நம் வாழ்க்கை எவ்வாறு அமையப்போகிறது போன்ற எதிர்காலம் குறித்த பற்பல கேள்விகள் மண்டேலாவின் மனதில் பூதாகாரமாக உருவெடுத்தன.

மண்டேலா, ஜஸ்டிஸ் இருவரிடமும் கடவுச்சீட்டு மட்டுமே இருந்தது. ஆனால் பயண உரிமங்கள் ஏதும் இருக்கவில்லை. பயண உரிமங்கள் ஏதுமில்லாமல் வெளியில் நடமாடுவது சிக்கல் என்று அவர்களுக்கு ஏற்கனவே தெரியும். பயண உரிமத்தை எவ்வாறு பெற்றுக்கொள்வது என்று யோசித்துக் கொண்டிருந்த வேளையில் ஜஸ்டிஸ், மண்டேலாவிடம் குயின்ஸ்ட வுனில் நம் உறவுக் காரர் ஒருவர் இருக்கிறார் என்பதை ஞாபகமூட்டினான். அந்த உறவினர் வீட்டிற்கு சென்று அவர்கள் மூலம் பயண உரிமம் பெற்றுவிட வேண்டும் என்று மண்டேலா திட்டம் போட்டான். மண்டேலா என்ன திட்டம் போடு கிறானோ அதற்குச் சிறிதும் மறுப்புக்கூறாமல் ஏற்றுக்கொள்வதுதான் ஜஸ்டிஸின் வழக்கமாக இருந்தது.

**(தொடரும்)**




# அதிகாரிகளின் இழுபறியில் அவதிப்படும் மக்கள்

கடந்த பத்து வருடங்களாக அதிகாரிகளின் இழுபறிகளால் ஆயிரக்கணக்கான விவசாயிகள் தாம் தொடர்ந்தும் பாதிக்கப்பட்டுக் கொண்டு [illegible]

கிழக்கு மாகாணத்திலுள்ள மட்டக்களப்பு- ஏறாவூர்ப் பற்றுப் பிரதேச செயலாளர் பிரிவின்கீழ் வரும் பதுளை வீதிப் பிரதேசம் என்பது ஆயிரக்கணக்கான விவசாயிகளுக்கும் இலட்சக் கணக்கான கால்நடைகளுக்கும் ஜீவனம் அளிக்கக்கூடிய இடமாக உள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்திலே பரந்து விரிந்து கிடக்கும் இந்தப் பிரதேச செயலாளர் பிரிவில் தமிழ், முஸ்லிம், சிங்கள மக்கள் வாழ்கின்றார்கள்.

இவர்களது வாழ்வும் வாழ்வாதாரமும் இந்தப் பிரதேசத்தில்தான் உண்டு. ஆயினும், வருடாந்தம் ஏற்படும் பெருமழை, சூறைக்காற்று, பெருவெள்ளம், வறட்சி, காட்டு யானைகளின் தொல்லைகள் போன்ற இயற்கை அழிவுகள் இந்தப் பிரதேசத்து மக்களை அதிகம் பாதிப்படையச் செய்துவிடுகின்றன.

எனினும், இந்த அழிவுகளிலிருந்து அவர்கள் தங்களை மீளமைத்துக் கொண்டாலும் ஒரு சில சுயநல அதிகாரிகளின் நடவடிக்கைகளினால் தாங்கள் தொடர்ந்தும் முடிவின்றிப் பாதிக்கப்பட்டுவருவது தங்களுக்கு வேதனையையும் விசனத்தையும் அளித்துள்ளதாகக் கூறுகின்றனர்.

**ஏ.எச்.ஏ. ஹுஸைன்**

இந்தப் பரந்து விரிந்த பிரதேசத்தில் உள்ள மாவடிஓடைப் பாலம் கடந்த 2005ஆம் ஆண்டு ஏற்பட்ட பெருவெள்ளத்தினால் அடித்துச் செல்லப்பட்டது.

அதன்பின்னர் வருடாந்தம் ஏற்படும் வெள்ளத்தினாலும் அது அடித்துச் செல்லப்படுகின்றது. எனினும், 30.07.2010 அன்று நீர்ப்பாசன நீர்வள முகாமைத்துவ அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவினால் பாலம் நிர்மாணிப்பதற்காக அடிக்கல் நாட்டப்பட்டது.

ஆயினும் இந்தப் பாலமும் பாலத்தினூடான போக்குவரத்துக்கான முழுமையான நிர்மாண வேலைகள் முடிவுறாமல் அரைகுறை நிர்மாணப் பணிகளுடன் பாலத்தின் வேலைகள் இன்னமும் தொங்கிக்கொண்டிருக்கின்றன.

ஆனால், ஒரு அதிசயமாக இந்தப் பாலநிர்மாணம் முழுமையாக் கப்பட்டு 2015.08.15 அன்று திறந்து வைக்கப்பட்டதாக பாலத்தினருகே பெயர்ப்பலகை காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.

பாலத்தின் நிர்மாண வேலைகள் முடிவுறாமலும் பாலத்தினூடாக போக்குவரத்துச் செய்யமுடியாமலும் இருக்கும் போது எவ்வாறு பால நிர்மாணம் முடிவுற்றதாக பெயர்ப்பலகை போடப்பட்டது என கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன் அதிகாரிகள் மத்தியில் கேள்வியெழுப்பினார்.

இது விடயமாக கடந்த 08-ம் திகதி அன்று ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலகத்திற்கு முன்னால் திரண்ட நூற்றுக்கு மேற்பட்ட விவசாயிகள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த பல வருடங்களாக சேதமடைந்து போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ள மாவடிஓடைப் பாலத்தை உடனடியாகத் திருத்தம் செய்து விவசாயிகளிடம் ஒப்படைப்போம் எனும் வாக்குறுதி மாவட்ட அரசாங்க அதிபரால் தரப்படவேண்டும் என்று வலியுறுத்தியே இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

விவசாயிகளின் எதிர்ப்புக்கு மத்தியில் விவசாய ஆரம்பக் கூட்டத்தில் பங்குபற்றிய மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ். கிரிதரன் "இவ்வாண்டு பருவப் பெயர்ச்சி மழை ஆரம்பித்து பெருமழையும் வெள்ளமும் வருவதற்கு முன்னர் கடந்த சில வருடங்களுக்கு முன்னர் பெருவெள்ளத்தினால் உடைந்து போக்குவரத்துத் தடைப்பட்டிருக்கும் மாவடிஓடைப் பாலமும் வீதியும் திருத்தியமைக்கப்பட வேண்டும் என அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

தொடர்ந்து அவர் அங்கு கூறும்போது, தங்களது தனிப்பட்ட நலன்களுக்காக அரச சேவையைப் பயன்படுத்தும் அதிகாரிகள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

பொதுமக்களின் நலன்களுக்காக இயங்கும் அரச திணைக்களங்கள் அதிகாரிகளின் தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளுக்காக பயன்படுத்தப்படுமானால் அது மிகத் தவறான முன்னுதாரணமாகும்.

பொதுமக்களின் வாழ்வை வளப்படுத்தும் நோக்கத்துடனேயே பதவியில் அமரும் ஒருவர் தனது கடமையை செவ்வனே செய்யாத பட்சத்தில் அந்த அதிகாரிக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும்.

பொதுமக்களினதோ விவசாயிகளினதோ ஏனைய தொழியாளர்களினதோ வாழ்வையும் வாழ்வாதாரத்தையும் பாதிக்கின்ற தீர்மானங்களை அரச அதிகாரிகள் மேற்கொள்ளக்கூடாது.

மாவடிஓடைப் பாலத்தை திருத்தம் செய்யாது வீணாக விவசாயிகளை இடைஞ்சலுக்குட்படுத்துவது உடனடியாகத் தவிர்க்கப்படவேண்டும்.

ஆயிரக்கணக்கான விவசாயிகள் இந்தப் பாலத்தினூடாகவே அறுவடைக் காலங்களில் தமது விளைபொருட்களை நகரப்புறங்களுக்குக் கொண்டுவரவேண்டும். அதேபோல விதைப்புக் காலங்களில் உள்ளீடுகளை எடுத்துச் செல்லவேண்டும். அதற்கேற்ற ஒழுங்குகளை அதிகாரிகள் செய்து கொடுக்கவேண்டும்.

சிறப்பான நிருவாகத்தைக் கொண்டுள்ள ஒரு அரசாங்கத்தை நாங்கள் நடைமுறையில் கண்டுகொண்டிருக்கின்ற இந்த வேளையில் பொதுமக்களுக்கும் சிறப்பான நிருவாகத்தைப் பெற்றுக்கொடுப்பது எமது கடமையாகும்." என்றார்.

நீண்டகாலமாக இழுபறி நிலையில் இருந்துவரும் மாவடிஓடைப் பாலம் திருத்தப்படாது உள்ளதால் விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் பற்றி ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலாளர் யூ.உதயஸ்ரீதர் தெளிவுபடுத்தினார்.

"மூவின மக்களும் வாழ்கின்ற விவசாய நிலப்பரப்பைக் கொண்ட இந்தப் பிரதேச செயலாளர் பிரிவில் கடந்த பல வருடங்களாக மாவடிஓடைப் பாலம் திருத்தப்படாமல் உள்ளதால் ஆயிரக்கணக்கான விவசாயிகள் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளார்கள்.

மாவடிஓடைப் பாலத்தைத் தாண்டியுள்ள இந்தப் பிரதேசத்திலேயே மேய்ச்சல் தரையும் இருப்பதால் 200000 மேற்பட்ட கால்நடைகள் அங்கு வளர்க்கப்படுகின்றன.

அதேபோல, ஆயிரக்கணக்கான விவசாயிகளும் சுமார் 30 ஆயிரம் ஏக்கருக்கு மேற்பட்ட செய்கை நிலங்களும் உள்ளன.

எனவே, இந்தப் பாலத்தினூடான போக்குவரத்து சீர்செய்து கொடுக்கப்படாததால் இந்த இரண்டு இலட்சத்திற்கு மேற்பட்ட கால்நடைகளைப் பராமரிப்பது விவசாயிகளுக்கு ஒரு சவாலாக அமைந்துள்ளது.

மேலும், பெரும்போக மற்றும் சிறுபோக நெற்செய்கைக் காலத்திலும் அறுவடைக் காலத்திலும் ஆயிரக்கணக்கான விவசாயிகள் போக்குவரத்துச் செய்ய முடியாமல் திண்டாடுகின்றார்கள்.

மாரிமழை காலத்தில் பெருமழை ஏற்பட்டு பெருவெள்ளம் கரை புரண்டோடும்போது மாவடிஓடைப் பாலத்திற்கு மறுபுறத்திலுள்ள ஆயிரக்கணக்கான குடும்பங்கள் பிரதான நிலப்பரப்பிலிருந்து துண்டிக்கப்பட்டு நிர்க்கதியாகிவிடுகின்றனர்.

கடைசியில் இது ஒரு மனிதப் பேரவலமாக உருவெடுக்கின்றது. கடந்த காலங்களில் இது நடந்திருக்கின்றது. எனவே, பிரதேச செயலாளரான நான் உட்பட சம்பந்தப்பட்ட சகல அதிகாரிகளுக்கும் இந்த மக்களின் குறைகளைத் தீர்க்க வேண்டிய பொறுப்பு உண்டு. ஆயினும், சட்டரீதியற்ற முறையில் ஏனைய சக அரசாங்க அதிகாரிகளை மீறி நீர்ப்பாசனத் திணைக்கள அதிகாரிகள் எடுக்கும் நடிவடிக்கைகளுக்கு என்னால் ஒருபோதும் ஒத்துழைப்பு வழங்கமுடியாது.

எனினும், சரியான, சட்டரீதியான அணுகுமுறைகளை நீர்ப்பாசன அதிகாரிகள் கோரும் பட்சத்தில் அவர்களுடன் ஒத்துழைத்துப் பணியாற்ற பிரதேச செயலக அதிகாரிகள் முன்வருவார்கள் என்றும் பிரதேச செயலாளர் உதயஸ்ரீதர் தெரிவித்தார்.

தொடர்ந்து செல்லும் இந்தப் பிரச்சினை குறித்து பெரும்போக விவசாய ஆரம்பக் கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த கிழக்கு மாகாண சபை உறுப்பினர் கே.துரைரெட்ணம், இந்தப் பிரச்சினையை இழுபட்டுச் செல்லாமல் உடனடியாகத் தீர்த்து வைக்கவேண்டியது அதிகாரிகளின் பொறுப்பு. இல்லையேல் மக்கள் இந்தப் போராட்டத்தைக் கையில் எடுத்தால் நிலைமை மோசமடையும் என்று எச்சரித்தார்.


இக்கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், மற்றும் சகல திணைக்களங்களின் அதிகாரிகள். கரடி யாறு பொலிஸ் பொறுப்பதிகாரி சி.மஹலேகம் உள்ளிட்ட இன்னும் பலரும் விவசாயிகளும் கலந்துகொண்டனர். மாகாண அமைச்சர் கே.துரைராஜசிங்கம் வந்திருந்தபோதும் கூட்டத்தில் அவர் கலந்துகொள்ளவில்லை.

கடந்த 08-ம் திகதி அன்று அதிகாரிகள், அரசியல்வாதிகள், பொலிஸ் பொறுப்பதிகாரிகள், விவசாயிகள் ஆகியோர் மத்தியில் நடைபெற்ற கூட்டத்தில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் உடனடியாக பால நிர்மாணத்தை பூரணப்படுத்த வேண்டும் என உத்தரவும் எச்சரிக்கையும் பிறப்பித்திருந்தும் இன்று வரை (15.09.2015) வரை நிலைமையில் எந்தவொரு மாற்றமும் இடம்பெறவில்லை. வழமை போன்று விவசாயிகள் விசனத்துடனேயே உள்ளனர்.

கடந்த பல வருடங்களாக வெள்ளத்தின் போது தகர்ந்துபோய் திருத்தம் செய்யப்படாமல் கவனிப்பாரற்றுக் கிடக்கின்ற மாவடி ஓடைப் பாலம் திருத்தம் செய்யப்பட வேண்டும், மேய்ச்சல் தரைப் பிரச்சினையும் பெரும்பான்மைச் சமூக அத்துமீறிகளின் குடியேற்றமும் நிறுத்தப்பட வேண்டும்.

காட்டு யானைகளின் தொல்லைகளில் இருந்து விவசாயிகளைப் பாதுகாக்க அதிகாரிகள் தவறிவிட்டனர் போன்ற பல்வேறு பிரச்சினைகளுக்கு தமக்குத் தீர்வு வேண்டும் என்று தமிழ், முஸ்லிம் விவசாயிகள் கோரி நிற்கின்றனர்.





# தேசிய அரசும் தேறிய கட்சிகளும்

**எந்தவொரு பெரும்பான்மை அரசும் தமிழர்களை சிம்மாசனம் ஏற அனுமதிக்க மாட்டார்கள் என்பது பழைய வாரலாறுகள் எடுத்துக்காட்டுகின்ற போதிலும் இம்முறை தமிழர் ஒருவரை எதிர்க்கட்சித் தலைவராக்கியது வெளி நாடுகளின் சர்வதேசப் போர்க்குற்றப் பொறி முறைகளில் இருந்து தங்களைக் காப்பாற்றும் நோக்கமே என்று பரவலாகப் பேசப்படுகின்றன. இது தமிழர்களின் அரசியலுக்கு உகந்தது என்று கூறிக்கொள்ள முடியாது.**

எத்தனையோ இழுபறி, பிரச்சினைகளுக்கு மத்தியிலே தேசிய அரசு உதயமாகியுள்ளது! இரண்டு ஆண்டுகள்வரை எவரும் எந்தக் குழப்பங்களும் விடக்கூடாது என்னும் கட்டளைகளுக்கு அமைவாகவே தேசிய அரசுக் குழந்தை பிரசவமாகியுள்ளது.

ஜனவரி 8ஆம் நாளுக்குப் பின்னர் கருவுற்ற தேசிய அரசுக் குழந்தைக்கு சரியான சமபோசன உணவுகள் கிடைத்து, குழந்தையை பாலூட்டிச் சீராட்டி வளர்த்தெடுக்கும் பொறுப்பு கிட்டத்தட்ட நூறுக்கும் சற்றுக் குறைவான அமைச்சுக்களிடம் விடப்பட்டுள்ளன. எனவே எல்லோரலும் தேசிய என்று பெயரிடப்பட்டுள்ள குழந்தையை சரியாக பராமரிப்பார்களா? அது சாத்தியமாகுமா? என்பதெல்லாம் பெரிய கேள்விக்குறியாகவுள்ளது.

ஏனெனில், குழந்தையை பராமரித்து வளர்த்தெடுக்கும் பொறுப்பிலுள்ளவர்கள் ஒரே இனம் மதம் சார்ந்தவர்களல்ல, பல கட்சிகள் சிங்களம், தமிழ், முஸ்லிம் கட்சிகள் என்றும் அதே வகையான இனத்தவர்களும் அடங்கியுள்ளனர். இவர்களில் தீவிரம், இனவெறி, பேசுபவர்களும், மென்போக்கைக் கடைப்பிடிப்பவர்களும் இருக்கின்றனர். இவர்கள் கொஞ்சக் காலம் களித்து சறுக்கமாட்டார்கள் என்பதற்கு எவ்வித சான்றுகளுமில்லை.

உண்மையினை எடுத்துக் கொண்டோமானால் பட்டம், பதவி களுக்காகவே இன்று தேசிய அரசிலே இணைந்தவர்களே அதிகம் பேர் உள்ளனர். ஜனாதிபதி தேர்தல் நிறைவடைந்து பொதுத் தேர்தலொன்று நடைபெற்று முடிவடைந்த காலம்வரை ஒருவரையொருவர் சேறுவாரிப் பூசியவர்களும், தூற்றியவர்களும் இன்று ஒரே தலைமையின்கீழ் ஒன்றுகூடி உள்ளனர். இது பதவிகளுக்கானது என்பது சாதாரண அரசியல் அறிவற்ற பொதுமகனாலும் புரிந்து கொள்ள முடியும்.

இந்த தேசிய அரசு உருவாகிவிட்டது. என்று எடுத்துரைக்கப்பட்டாலும் உண்மையில் அது இன்னும் நிறை வெய்திவிட்டதாக நான் இக்கட்டுரை யினை எழுதிக்கொண்டிருக்கும் இறுதி நிமிடம்வரை முடிவடையவில்லை. காரணம், தேசிய அரசுக்கான அமைச்சுக்கள், பிரதி அமைச்சுக்களைக் கூட நியமிக்கமுடியாமல் உள்ளது. இன்னும் இரண்டு அமைச்சுகள் நியமனம் செய்யப்படல் வேண்டும். அவர்களின் பெயரினை வெளியிடவே அஞ்சுகின்றனர். ஏனென்றால், ஒருவருக்கு அமைச்சு கொடுத்தால் மற்றவர் தடுக்கும், எதிர்க்கும் நிலையே காணப்பட்டுவருகின்றன.

இவையெல்லாம் தேசிய அரசு எனும் குழந்தையினை சீராக வளர்க்கும் நிலைமை ஆபத்துமிக்க, சவால்மிக்க விடயமாகவே பார்க்கப்படல் வேண்டும். இவ்வகையான குழப்பங்களையெல்லாம் அனுமானிக்கக்கூடியதாக இன்னொரு விடயம் உள்ளது. அதாவது தேசிய அரசு எனும் குழந்தையினை பிரசவித்தவர்கள் இலங்கையின் மாண்புமிகு ஜனாதிபதியும் பிரதமருமே. இவர்களே இக்குழந்தையின் பெற்றோர்களாவர். இவர்கள் இருவருமே எதிரும் புதிருமான கட்சிகளைச் சேர்ந்தவர்கள். பச்சை, நீலம் என்னும் அணியினைச் சேர்ந்தவர்கள்.

மகிந்த எனும் ஒருவரை ஆட்சியில் இருந்து அகற்றி நல்லாட்சியினை உருவாக்கவேண்டும் எனும் நோக்கிற் காக முதலிலே இணைந்துகொண்டவர் கள். எனினும் மீண்டும் பாராளுமன்றத் தேர்தலிலே யாரும் தனித்து ஆட்சிப் பீடமேறும் அதிகாரத்தை மக்கள் யாருக்குமே வழங்கவில்லை. மக்களின் தீர்ப்புக்கு அமைவாக தொங்கு நாடாளுமன்றமே உருவானது. தேர்தல் முடிவுகள் வெளியாகிய் கையுடன் யார் யாரையெல்லாம் உள்வாங்கலாமோ அவர்களையெல்லாம் உள்ளே எடுத்தும், மக்களினால் வேண்டாமென்று நிராகரித்தவர்களை தேசியப்பட்டியல் மூலம் சேர்த்து அமைச்சுப் பதவியும் வழங்கிவிட்டனர். இப்படியான அரை-குறைப் பிரசவமே தேசிய அரசு என்னும் குழந்தையாக பிறந்துள்ளது.

இதே பெயரில் ஜனவரி 8ஆம் நாளுக்கு பின்னரும் ஒரு அரசு உருவானது. புதிதில் நன்றாக இருந்தது. 20 ஆம் சரத்தை நிறைவேற்றவிடாமல் போர்க்கொடி தூக்கி னார்கள். ஆட்சி கலைக்கப்பட்டு தேர்தலும் நடைபெற்றது. எனவே இலங்கை அரசின் தற்போதைய சூழல் எதனையும் அறுதி யிட்டுக் கூறிவிடமுடியாத சூழ்நிலையே காணப்படுகின்றன. இதற்கு காரணங்களும் இல்லாமல் இல்லை. பட்டம், பதவி மற்றும் குற்றச்சாட்டுக்களில் இருந்து விடுபடும் நோக்கில் புதிய அரசு ஆட்சியில் பங்கேற்றவர்கள் பின்பு மாறமாட்டார்கள் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை.

மற்றொரு விடயமாக ஜனாதிபதி ஒரு கட்சியிலும் பிரதமர் இன்னொரு கட்சியிலும் உள்ளனர். இதுவும் தொடர்ந்து செல்வதற் கான இழுபறிகளைக் காட்டலாம். இதனை முன்னாள் ஜனாதிபதியும் சக்தியுள்ளவர் என்றும் வர்ணிக்கப்பட்ட மகிந்தவின் அணியினைச் சேர்ந்தவர்கள் ஐம்பதுக்கும் மேற்பட்டவர்கள் வெளியே உள்ளனர். இவர்களிலே அரசினை கடுமையாக எதிர்க்கக்கூடிய வலுவும் ஆற்றலும் அனுபவமும் கொண்டோர் இருக்கின்றனர்.

நீண்டகாலம் அமைச்சுப் பதவிகளில் இருந்து அனுபவப்பட்டவர்களுக்கு சட்டத்திலே உள்ள சந்துபொந்துகள் தெரிந்திருக்க வாய்ப்பு உள்ளது. எனவே இவர்களுடன் ஜே.வி.பியும் இப்பவே புதிய அரசை எதிர்க்கத் தொடங்கிவிட்டனர். இதுவும் ஒரு நல்ல அரசின் ஆட்சியினைத் தக்கவைப்பதில் சிக்கல்களை தோற்றுவிக்கும்.

இவற்றுக்கு உதாரணமாக, நல்லாட்சி அரசினை தோற்றம் பெறவைக்க திரை மறைவிலே செயற்பட்ட முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா அம்மையாரும் அமைச்சர்களின் தெரிவு வருத்தம் அளிப்பதாகவும் கூறியுள்ளார். இப்படியாக ஆரம்பமே நல்ல சகுனங்களாகத் தோன்றவில்லை.

நிலைமை இவ்வாறிருக்கும் நிலையில், மீண்டுமொரு சிக்கல் நிலைமை இலங்கை அரசினைப் பொறுத்தமட்டிலே உருவாக வாய்ப்பு உள்ளது. அதாவது பிரதான எதிர்க்கட்சித் தலைவர் தமிழர் ஒருவருக்குப் போய்ச் சேர்ந்துள்ளது. ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிலே உள்ள ஏனைய கட்சியினர் சுமார் ஐம்பத்துக்கு மேற்பட்டவர்கள் ஒன்றுகூடி தமது அணிக்கே எதிர்க்கட்சித் தலைமை வழங்கப்படல் வேண்டும் என்று எழுத்து மூலமான மகஜரை சபாநாயகரிடம் கையளித்துள்ளனர். இதற்கு பதில்கூற வேண்டிய கட்டாயம் அரசுக்கு உள்ளது.

எந்தவொரு ஒரு பெரும்பான்மை அரசும் தமிழர்களை சிம்மாசனம் ஏற அனுமதிக்கமாட்டார்கள் என்பது பழைய வாரலாறுகள் எடுத்துக்காட்டுகின்ற போதிலும் இம்முறை தமிழர் ஒருவரை எதிர்க்கட்சித் தலைவராக்கியது வெளி நாடுகளின் சர்வதேசப் போர்க்குற்றப் பொறிமுறைகளில் இருந்து தங்களைக் காப்பாற்றும் நோக்கமே என்று பரவலாகப் பேசப்படுகின்றன.

இது தமிழர்களின் அரசியலுக்கு உகந்தது என்று கூறிக்கொள்ள முடியாது. ஏனென்றால் கடந்த மூன்று தசாப்த காலங்களுக்கு முன்பு நரி மூளை உள்ளவர் என்று வர்ணிக்கப்பட்ட ஜே.ஆர் ஜெயவர்த்தனவின் ஆட்சியில் (ஐக்கிய தேசியக்கட்சி) அமிர்தலிங்கம் எதிர்க்கட்சித் தலைவரானார். இதனை சிங்கள தேசம் ஏற்றுக்கொள்ளவில்லை. தமிழன் ஒருவர் எதிர்க்கட்சி தலைவராக வருவதனைத் தடுக்கும்நோக்கிலே தேர்தல் முறையிலே சட்டங்களைக் கொண்டுவந்தார்கள். கொஞ்சக் காலமதில் பாராளுமன்று கலைக்கப்பட்டு புதிய பாராளுமன்றம் உருவானதால் அமிர்தலிங்கம் ஐயாவின் எதிர்க்கட்சித் தலைமைப் பதவி நீடித்துக் செல்ல வாய்ப்பு இல்லாது போனது!

ஐக்கிய நாடுகள் சபைக்கு தமிழர்களை உயர்வான இடத்திலே வைத்துள்ளோம் என்பதனை எடுத்துக்காட்டிய பின்பு காட்சி மாறி வேறு படம் ஓடினாலும் ஆச்சரியப்பட முடியாது! இதற்கு உதாரணமாக பாராளுமன்றம் இயங்க முதலே எதிர்க்கட்சி தலைமை எங்களுக்கே தரவேண்டும் எனும் கோசம் எழத் தொடங்கிவிட்டது!

இது இவ்வாறிருக்க, கடந்த மூன்று மாதங்களுக்கு முன்பு கொண்டு வரப்பட்ட 20 ஆம் சரத்து பெரும்பான்மைப் பலம் கொண்டவர்களாலேயே தோற்கடிக்கப்பட்டது. இந்த 20 ஆம் சரத்தை அன்று கூடி எதிர்த்தவர்கள் நாளை அதனை ஆதரித்து நிறைவேற்றக் கூடிய வாய்ப்பும் உருவாகலாம். ஏனென்றால், தமிழரிடம் எதிரணி சென்றுவிட்டதை அவர்கள் கூடி சட்டதிட்டங்களை மாற்றிக்கொள்ளலாம்.

இந்த 20 ஆம் சரத்து நிறைவேறு மானால் சிறுபான்மை இனத்தவர்களின் பாராளுமன்றப் பலம் குறையவே வாய்ப்பு உள்ளது. இப்போதைய பாராளுமன்றிலே தமிழ், முஸ்லிம்கள் என்று பலதரப்பினர் பிரதிநிதிகளாக உள்ளனர். இருபது நிறைவேறினால் இப்போது உள்ளவர்களில் அரைப்பங்கினர் கூட பாராளுமன்றம் செல்லமுடியாது போகலாம். எனவே எதிர்க்கட்சி தலைமைப் பதவிமூலம் பெருமைப்பட்டு

**• அளவெட்டி ப. உதயகுமார் •**


விட்டோம் என்பதனைவிட அடுத்த முறைப் பாராளுமன்றப் பிரதிநிதிகள் பற்றி தமிழர்கள் அக்கறை காட்ட வேண்டிய தருணமிது.

தேசிய அரசும் தேறிய கட்சிகளும் என்பதனை ஆராய்ந்து பார்த்தால் தேறிய கட்களிடையே பெரும் முரண்பாடுகள், தோற்றப்பாடுகள் காணப்படுகின்றன. முஸ்லிம் கட்சிகள் பல திக்குகளாக உள்ளன. பச்சை, நீலம் என்னும் அணிகளை ஆதரித்து அமைச்சுப் பதவிகளும் கிடைத்துவிட்டன. முன்னாள் முக்கிய அரசியல்வாதிகள் தோற்றுப் போயுள்ளனர். இவர்களிடையேயும் ஒற்றுமை காணப்படவில்லை. இவர்கள் யார் ஆட்சி அமைத்தாலும் அப்பக்கம் போய் அமைச்சுப் பதவிகளை அலங்கரித்து தம்மின மக்களின் வாழ்வுக்கு பாடுபடக் கூடியவர்கள்.

தமிழ் கட்சிகளைப் பொறுத்தமட்டிலே நாங்களே தமிழர்களின் ராஜாக்கள் என்று கூறும் ஒரு பிரதான கட்சி. தாம் வாழ்ந்தால்போதும் எனும் எண்ணம் கொண்டவர்கள். ஒரு தமிழனுக்கு அமைச்சுப் பதவி கிடைப்பதையே எதிர்க்கும் நல்ல மனம் கொண்டவர்கள், இத்தகைய இவர்களின் கட்சிகளுக்குள் பல பிளவுகள் தலைதூக்கியுள்ளன.

ஜே.வி.பி உட்பட சிங்களக் கட்சிகளில் பல வெளியே உள்ளனர். ஆட்சியிலே பங்கேற்கவில்லை. சிறிலங்கா சுதந்திரக் கட்சி இரண்டாக பிளவுபட்டுள்ளது! மகிந்த - மைத்திரி அணி என உடைவு பெற்றுள்ளது. இவற்றிலும் மகிந்த அணி யின் இன்னொரு பிரிவு விமல், தினேஸ், உட்பட ஐம்பதுக்கும் மேற்பட்டவர்கள் ஆட்சியிலே பங்கேற்காமல் வெளியே உள்ளனர்.

மலையகக் கட்சிகளும் பச்சை, நீல அணிகளுடன் கலந்து காணப்படு கின்றனர். எனவே தேசிய அரசு தேறி வருமா? அல்லது இடையிலே அகப்பட்டு அல்லல்படுமா? என்பதனை பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.




# கிரீஸ் என்றொரு அடிமை

கிரீஸ் நாட்டின் நெருக்கடி அடுத்தகட்டத்திற்குள் நுழைந்து கொண்டிருக்கிறது. இந்த நிலைமை ஏற்பட்டதற்காக ஜெர்மனி, கிரீஸ் அரசு மற்றும் "மூன்று முகங்கள்" என அழைக்கப்படும் பன்னாட்டு நிதி நிறுவனம்(ஐ.எம்.எப்), ஐரோப்பிய சென்ரல் வங்கி, ஐரோப்பிய ஆணையம் ஆகியவை கடுமையான விமர்சனங் களை எதிர்கொண்டிருக்கின்றன. இவர்கள்மீது பதிவுசெய்வதற்கு ஏராளமான குற்றச்சாட்டுகள் உள்ளன. கடந்த ஐந்தாண்டு காலமாக கிரீஸ் நாட்டின் துயரத்தை நான் நெருக்கமான முறையில் கவனித்துவருகிறேன். இதில் சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினருடனும் பேசியிருக்கிறேன். கடந்த ஒரு வார காலமாக கிரீஸ் தலைநகர் ஏதென்சில் மக்களோடு மக்களாக சுற்றித் திரிந்தேன். சாதாரண குடிமக்களுடன் பேசினேன். இளைஞர்களோடு பேசினேன். முதியவர் களோடு பேசினேன். தற்போதுள்ள அதிகாரிகளுடனும் முன்பு இருந்த அதிகாரிகளுடனும் பேசினேன்.

கடைசியாக, கிரீஸ் நெருக்கடியின் தீவிரம் குறித்து நான் ஒரு முடிவுக்கு வந்தேன். அது என்னவென்றால், கிரீஸ் நெருக்கடி என்பது கிரீஸ் நாட்டையும் அது பின்பற்றுகிற யூரோ நாணயத்தையும் மட்டுமல்ல, அதையும் தாண்டி மிகப்பெரிய நாசகார விளைவை ஏற்படுத்தப்போகிறது என்பதுதான். இப்போது மீண்டும் கடன்கொடுத்து கிரீஸ் நாட்டை கடன்வலையிலிருந்து மீட்கப் போவதாகக்கூறி, பேச்சு வார்த்தை நடத்திக்கொண்டிருக்கும் மேற்படி மூன்று முகங்களான ஐ.எம்.எப், ஐரோப்பிய மத்திய வங்கி, ஐரோப்பிய ஆணையம் ஆகியவை கிரீஸ் நாட்டின் அடிப்படையான சட்டங்களை மாற்றுமாறு கூறுகின்றன. வரி விதிப்பு, செலவீனங்கள் பற்றி பல. நிபந்தனைகளை விதிக்கின்றன. குறிப்பிட்ட சில சந்தைகளைப் பாதிக்கும் விதத்தில் உள்ள விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளை மாற்றும்படி நிர்பந்திக்கின்றன. இதற்கு "மூன்றாவது புரிந்துணர்வு" என்று பெயர் வைத்திருக் கிறார்கள். இந்தப் புதிய திட்டம் பற்றி நமக்கு தெரியவருவது என்னவென்றால், இவையெல்லாம் அமுலானால்கூட அது கிரீசுக்கோ அல்லது அந்நாட்டிற்கு கடன் தருபவர்களுக்கோ எந்த பலனையும் ஏற்படுத்தப்போவதில்லை என்பதுதான்.

இதுபற்றிய விபரங்களை நான் ஆய்வு செய்தேன். ஒரு மர்மதேசம் மேலும் பல மர்மங்களைச் சந்திக்கப்போகிறது என்றே நான் உணர்ந்தேன்.

1990களின் பிற்பகுதியில் உலக வங்கியின் தலைமை பொருளாதார ஆலோசகராக நான் பணியாற்றினேன். அப்போது, பொருளாதார உதவி செய்வ தாகக்கூறி பன்னாட்டு நிதி நிறுவனம்

**● பேரா.ஜோசப் ஸ்டிக்லிட்ஸ் ●**

(ஐ.எம்.எப்) கிழக்கு ஆசிய நாடுகளில் பல திட்டங்களைச் செயற்படுத்தியது. செயற்படுத்தியது என்று கூறுவதைவிட நிர்ப்பந்தமாகத் திணித்தது என்று சொல்லவேண்டும். அந்தத் திட்டங்களால் அந்த நாடுகளில் மிகக்கொடூரமான விளைவுகள் ஏற்பட்டதை - பேரழிவு ஏற்பட்டதை கிழக்கு ஆசியா முழுவதிலும் கண்ணால் கண்டேன். இந்த நாடுகளில் அரசாங்கச் செலவீனங்களில் சிக்கன நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்று கூறியது மட்டுமல்ல, அந்நாடுகளின் அடிப்படைப் பொருளாதாரக் கட்டமைப்பி லேயே பல மாற்றங்களைத் திணித்தது. ஒருவர் நலனை பலியிட்டு மற்றொருவர் நலனை முன்நிறுத்தியது. நூற்றுக்கணக் கான நிபந்தனைகள், சில சிறிய நிபந்தனைகள், சில பெரிய நிபந்தனை கள், பல பொருத்தமற்ற நிபந்தனைகள், சில நல்ல யோசனைகள், பல மோச மான நிர்பந்தங்கள் என கிழக்கு ஆசிய நாடுகளை உலுக்கி எடுத்தது. இவற்றை அமுலாக்க மற்ற நாடுகள் தங்களது பொரு ளாதாரக் கட்டமைப்பில் மிகப்பெரிய மாற்றங்களை செய்யவேண்டியிருந்தது.

நான், 1998இல் இந்தோனேஷியாவில் நடந்ததை நினைவுகூர்கிறேன். அந்த நாட்டின் ஒட்டுமொத்த வங்கிக் கட்டமைப் பையும் ஒரேநாளில் ஐ.எம்.எப் சிதைத்து அழித்ததை நேரில் கண்டேன். அப்போது வெளியான ஒரு புகைப்படம் எனது கண்ணில் நிழலாடுகிறது.

இந்தோனேஷியாவின் பொருளாதார இறையாண்மையை அந்நாட்டின் ஜனாதிபதி சுகார்த்தோ, ஐ.எம்.எப் நிர்வாக இயக்குநராக இருந்த மிக்கேல் கேம்டெசசிடம் சரணாகதி அடையச் செய்த அந்தக் காட்சியை நினைத்துப் பார்க்கிறேன். அதற்கு சற்று முன்பு 1997, டிசம்பரில் கோலாலம்பூரில் நடந்த பேச்சுவார்த்தையில், இந்தோனேஷியாவின் வீதிகளில் அடுத்த ஆறு மாத காலத்திற்குள் மிகப்பெரும் வன்முறையும் இரத்த ஆறும் ஓடும் என்று எச்சரித்தேன். சரியாக ஐந்து மாதங்களில் ஜகார்த்தா வீதிகளில் கலவரங்கள் வெடித்தன.

இந்தோனேஷியா முழுவதும் வன்முறை வெடித்தது. கிழக்கு ஆசியா முழுவதும் நெருக்கடி ஏற்பட்டது. அந்த நெருக்கடிக்கு முன்பும் பின்பும் மிகப்பெரும் பயங்கரங்கள் நிகழ்ந்தன. இதேபோன்ற நிலைமைதான் ஆபிரிக்கா விலும் ஏற்பட்டது. இலத்தீன், அமெரிக்கா விலும் ஏற்பட்டது. குறிப்பாக ஆஜென்ரீனாவில் வரலாறு காணாத கலவரங்கள் வெடித்தன. ஐ.எம்.எப் திட்டங்கள் அனைத்தும் தோல்வி அடைந்தன. இந்த நாடுகளின் பொருளாதாரங்கள் எல்லாம் வீழ்ச்சியடைந்தன. வீழ்ச்சி இன்னும் தீவிரமடைந்து மீளமுடியாத பெரும் மந்தத்தில் அந்த நாடுகள் ஆழ்ந்தன. இந்தத் தோல்விகள் எல்லாம் படிப்பினைகளாக கற்றுக் கொள்ளப்பட்டிருக்கும் என்று நினைத்தேன். ஆனால் அப்படி நடக்கவில்லை. அதேபோன்ற கொடூரமான, எந்தவிதமான முன்னேற்றத்தையும் ஏற்படுத்த முடியாத திட்டங்கள் கடந்த ஐந்தாண்டுகளுக்கு முன்பு ஐரோப்பாவில் அமுலாக்கப்பட்டன. இப்போது ஐரோப்பா முழுவதும் அதன்விளைவை அனுபவிக்கத் துவங்கியிருக்கிறது.

எம்.எப் வரையறுத்த இந்தத் திட்டங்கள் அமுலாக்கப்பட்டுவிட்டன. இனி அதை தொடர்ந்து அமுலாக்கி னாலும் சரி, கைவிட்டாலும் சரி, கிரீஸ் போன்ற நாடுகளில் கடன்கள் என்றென்றும் தீர்க்கமுடியாதளவிற்கு இன்னும் அதிகரிக்கவே செய்யும். அன்றைக்கு ஆர்ஜென்ரீனாவில் என்ன நடந்ததோ அதேதான் இப்போது கிரீசில் நடக்கிறது.

ஐ.எம்.எப் உள்ளிட்ட மேற்படி மூன்று முகங்களால் நிர்ப்பந்திக்கப்படும் கொள்கைகள் கிரீஸ் நெருக்கடியை இன்னும் ஆழமாக்கும் மீளமுடியாத பெரும்மந்தத்தில் ஆழ்த்தும். ஐ.எம்.எப் நிர்வாக இயக்குநராக இருக்கும் கிறிஸ்டின் லகார்டே இப்போது கூறுகிறார், கிரீசின் கடன்களை மறு சீரமைப்பு செய்யவேண்டிய தேவை எழுந்துள்ளது என்று. இதற்கு என்ன பொருள்? கிரீசின் கடன்களில் ஒரு கணிசமான பகுதியை தள்ளுபடி செய்வதுதான், கடன் மறுசீரமைப்பு என்பதன் பொருளாக இருக்கமுடியும்.

ஆனால், கிரீஸ் அரசிடம் ஐ.எம்.எப் உள்ளிட்ட மேற்படி மூன்று முகங்கள் முன்வைக்கும் நிபந்தனைகள் பொருத்தமற்றவையாக உள்ளன. கிரீசின் கடன்கள் எதையும் தள்ளுபடி செய்யக்கூடாது என்று ஜெர்மனி கூறுகிறது. கடனைத் தள்ளுபடி செய்யாமல், (கடன்கொடுத்து அதைக் கொண்டு கடனை அடைக்கு மாறு சொல்கிற) திட்டத்தில் ஐ.எம்.எப் முதன்மையாக இருந்து செயற்பட வேண்டும் என்று ஜெர்மனி வற்புறுத்து கிறது. ஆனால் எந்தவிதத்திலும் திருப்பிச் செலுத்தவேமுடியாத அளவிற்கு - தாங்கமுடியாதளவிற்கு கிரீசின் கடன்கள் இன்னும் அதிகரிக்கப் போகும் ஒரு திட்டத்தில் பன்னாட்டு நிதி நிறுவனமான ஐ.எம்.எப் எப்படிப் பங்கேற்கமுடியும் என்பதுதான் தெரியவில்லை.

கிரீசில் இன்றைக்கு ஏற்பட்டுள்ள பொருளாதார மந்தத்திற்கு அடிப்படை காரணம், சிக்கன நடவடிக்கை கள் என்ற பெயரில் மிகப்பெரும் அளவில் அந்நாட்டு மக்களின் சமூக நலத்திட்டங்கள் அனைத்திலும் கடும் நிதி வெட்டு, வரி உயர்வு, மானி யங்கள் வெட்டு என ஈவுஇரக்கமின்றி தொடுக்கப்பட்ட தாக்குதல்களே ஆகும். இதன்விளைவாக 2008ஆம் ஆண்டு முதல் கிரீசின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 25 சதவீதம் வீழ்ச்சியடைந்தது. வேலையின்மை 25 சதவீதம் அதிகரித்தது.

இளைஞர்களின் வேலையின்மை 50 சதவீதமாக அதிகரித்தது. இத்தகைய சூழ்நிலையில் தற்போது மீண்டும் கடன்பெறுவதும், அந்தக் கடனுக்கான நிபந்தனைகளாக இன்னும் கடுமையான சிக்கன நடவடிக்கைகளை மேற்கொள்ள கிரீஸ் அரசு ஒப்புக்கொண்டிருப்பதும் ஏற்கெனவே நிலவும் இந்த மனிதத் துயரத்தை இன்னும் தீவிரமாக்கும்.

[அடுத்த வாரமும் வரும்]



# பாப்பா முரசு

**இப்பகுதிக்கு சிறுவர்களிடம், மாணவர்களிடம் இருந்து தரமான ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றது.**



பரமண்ணா

# "விளையும் பயிரின் முளை!"

கணவர் ஓய்வாக இருப்பது கண்டு. மனப்பாரத்தில் கொஞ்சத்தை சோமசுந்தரத்தின் மூளையிலும் ஏந்திவிட்டாள் அன்னம்.

"ஓம்... அன்னம்... நானும் அதைப் பற்றிச் சிந்திக்காமல் இல்லை... அதிலொரு சங்கடம் என்னெண்டால் அவனுக்கு இப்ப என்னெண்டு விளங்காமல் நாங்க என்னத்தைச் செய்யிறே..."

"அதுதான்... டாக்டர்மாரிட மாவது அவனைக் கொண்டே காட்டினால் தெரிஞ்சு போகுது..." அவ்விதம் அன்னம் சொன்னதுந்தான். சோமசுதந்தரத்துக்கு அப்படியும் ஒரு வழி இருப்பதும் ஞாபகத் துக்கும் வந்தது.

"அன்னம் நீ சொன்னதும் சரிதான்... அப்புடியெண்டால் வாற திங்கட்கிழமை டாக்டர் ஏபிரகாமிடம் சேகரனைக் கூட்டிக்கொண்டேப் பாப்பம்..."


"இந்தத் தடவையோடை சேகரனுக்கு கடைசி வருடப் படிப்பும் முடியுது... பரீட்சைக்கும் எழுதி இருக்கிறானாம். அதுவும் இந்நிலை மேல எப்படி எழுதி இருக்கிறானோ தெரியேல்லை... இண்டைக்கு முடிவு வெளிவருமெண்டு சொல்லிப் போட்டுப் போயிருக்கிறான்..."

கணவர் கூறிய வார்த்தைகளைக் காதில் வாங்கி அன்னம் மேற் கொண்டும் சில தகவல்களை அவரது காதிலும் போட்டுக்கொண்டே அவ்விடத்தை விட்டு நகர்ந்தாள்.


மாணவர்கள் எல்லோரும், பரீட்சை முடிவின் பெறுபேறுகளை அறியும் ஆவலுடன் ஆசிரியரின் வருகையை எதிர்பார்த்து வகுப்பறை களில் காத்துக்கிடந்தனர். எல்லார் எண்ணங்களிலும் தாமிந்தப் பரீட்சையில் சித்தி பெற்று இருப்பமென்றே உள்ளுணர்வு சுண்டிக்கொண்டும் இருந்தன.

சந்திரனும் சேகரனும் அத்தகைய பாதிப்புக்களுக்கு உள்ளாகாமல் வழமை போலவே பெறுபேறுகளைத் தெரிந்து கொள்வதில் விருப்பு இருந்தாலும் அதற்காக மனதைப் பெரிதும் அலட்டிக் கொள்ளவில்லை.

(தொடரும்)



## வாரம் ஒரு திருக்குறள்



### அன்புடைமை

**அன்புஈனும் ஆர்வம் உடைமை அதுஈனும்**
**நண்பு என்னும் நாடாச் சிறப்பு.**

அன்பு பிறரிடம் விருப்பம் உடைஉ யவராக வாழும் தன்மையைத் தரும்: அ;து எல்லாரிடத்தும் நட்பு என்றுசொல்லப்படும் அளவற்ற சிறப்பைத் தரும்.

குறள் : 74


## கச்சா எண்ணெய் என்றால் என்ன..?



கச்சா எண்ணெய் என்று கேள்விப்பட்டு இருப்பீர்கள். அதென்ன கச்சா எண்ணெய்? கச்சா எண்ணெயினை பீப்பாய் அளவுகளில்தான் குறிப்பிடுகின்றனர். ஒரு பீப்பாய் என்பது கிட்டத்தட்ட 159 லீற்றர். அதிலிருந்து பெற்றோல், டீசல் மற்றும் மண்ணென்ணெய்போன்ற எரிபொருட்களை சுத்திகரித்து பிரித்தெடுக்கின்றனர்.

கிடைக்கிற இதுபோன்ற எரிபொருட்களின் மொத்த அளவு, பீப்பாய் ஒன்றுக்கு சுமார் 20 லீற்றர்தான். அதாவது எட்டில் ஒரு பங்குதான். மீதமெல்லாம் கச்சா.

கச்சா என்றால் மொத்தமும் வீண் என்பதல்ல. பிளாஸ்டிக்குகள் தயாரிக்கப் பயன்படுத்தப்படும் மூலப்பொருட்கள், சாலைகள் போடப் பயன் படுத்தப்படும். சல்பியூரிக் அமிலம், லூபிரிகண்ட் பாராபின், தார் போன்ற பலவும் கச்சா எண்ணெயில் இருந்துதான் கிடைக்கின்றன. நமது ரிலையன்ஸ் போன்ற நிறுவனங்கள் ஒரு மி.லிட்டரைகூட விடுவதில்லை. 159 லீட்டரையும் பொருட்களாக்கிவிடுகின்றனர். எல்லாமே காசுதான்.



## விசில் வாயில் ...

அது எதேச்சையாக வந்... மனிதன் காடுகளில் பது... வேட்டையாடும்போதும், ...களை எச்சரிக்கும்போதும் உதடுகள் குவித்து, பறவைகளைப்போல் ஊத விசில் பிறந்தது.



## கைப்பழக்கமும் ஆயுளும்


இடது கைப்பழக்கம் உள்ளவர்களைவிட வலது கைப்பழக்கம் உடையவர்கள் ஒன்பது ஆண்டுகள் அதிக ஆயுளுடன் வாழ்வர்.

## இதயம்

**இதயத்தின் எடை ஆண்களுக்கும், பெண்களுக்கும் வித்தியாசப்படும்.**


**நன்கு வளர்ச்சியடைந்த ஒரு ஆணின் இதயத்தின் எடை 325 கிராம் முதல் 400 கிராம்வரை இருக்கும்.**

**இதேபோல் ஒரு பெண்ணின் இதயத்தின் எடை 275 கிராமில் இருந்து 350 கிராம் வரை இருக்கும்.**



### பிக்காஸோ

தன் தாயின் பெயரையே தன் பெயராக வைத்துக் கொண்டவர் பிக்காஸோ.




## புத்தாண்டு அதிர்ஸ்டம்

புத்தாண்டு துவங்குவதற்கு முன்பாக நள்ளிரவில் கடைசி 12 விநாடிகளில் திராட்சைப் பழம் சாப்பிடுவதை மரபாக வைத்துள்ளனர் ஸ்பெயின் மக்கள். அப்போதுதான் புத்தாண்டு அதிர்ஷ்டமாக இருக்கும் என்பது அவர்களின் நம்பிக்கை.

## பொதுஅறிவு தகவல்கள்

- தண்டமிழ் ஆசான் எனப் போற்றப்படு பவர் - சீத்தலைச்சாத்தனார்
- தமிழ்க்கருவூலம் எனப்படும் நூல் - புறநானூறு
- மரண தண்டனை இல்லாத நாடு - சுவிட்சர்லாந்து
- மிக நீளமான சாலைகளைக் கொண்ட நாடு - சீனா (22,143 கி.மீ)
- கருணைக்கொலையை சட்டபூர்வமாக அங்கீகரித்த முதல் நாடு - நெதர்லாந்து
- பணக்காரர்கள் நகரம் என்று அழைக்கப் படுவது - ஹொங்கொங்
- சிம்பன்சி குரங்கு இனத்தில் ஒரு குரங்கு இறந்துவிட்டால், சக குரங்குகள் மனிதர் களைப்போல மார்பில் அடித்துக்கொண்டு அழுமாம்..!
- ஜெர்மனியின் எஸ்ஸன் நகரத்தில் பறவைகளுக்கு தனி மருத்துவமனை உள்ளது. கிரீஸ் நாட்டு தேசிய கீதம் 188 வரிகள் கொண்டது.



**போட்டியில் கலந்துகொள்பவர்கள் தாம் கல்வி கற்கும் தரத்தினை கட்டாயம் குறிப்பிடவேண்டும்.**

மேலே உள்ள படத்தினை வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றிற்கு புத்தகமொன்று பரிசாகக் காத்திருக்கிறது. அனுப்ப வேண்டிய கடைசித் திகதி: 28.09.2015

**வர்ணம் தீட்டும் போட்டி இல.1113**
**தினமுரசு வாரமலர்**
த.பெ.இல:167,
யாழ்ப்பாணம்.

**வர்ணம் தீட்டும் போட்டி இல: 1113**

எம்.பிரோஸ்கான்,
நிந்தவூர், மட்டக்களப்பு.

பரிசுக்குரியவர்: 1111


பாராட்டுக்குரியவர்கள்

01. ஜே.டிலானி, கரவெட்டி, நெல்லியடி.
02. தி.பிரியதர்சினி, கொக்குவில் மேற்கு, கொக்குவில்.
03. அ.திவ்யா, பிரதான வீதி, நீர்கொழும்பு.
04. ம.கானன், நல்லூர், யாழ்ப்பாணம்.
05. சி.மயூரன், புத்தூர்ச்சந்தி, கொடிகாமம்.
06. இ.அரவிந்த், புன்னை நீராவி, விசுவமடு.
07. மு.யசோதா, இரணைப்பாலை, புதுக்குடியிருப்பு.
08. ஞா.இஸான், நெல்சன் பிளேஸ், வெள்ளவத்தை.

# உண்மைத் தொடர்

## அதிர் இடி 106

# இடி அமீன்



> பல பிரச்சினைகளில் அந்த உள்ளூர் பிரமுகர்கள் அரசுக்கு எதிராகக் கருத்துக் கூறுவதும், பின்னர் அரசையும், அமீனையும் புகழ்வதும் தொடர்ந்தது.
> ஒரு கட்டத்தின் பின்னர் இந்த ஏமாற்று வித்தையை மக்கள் இனங்கண்டு கொண்டனர். அதுவும் அமீனது கவனத்திற்கு வந்தது.
> இது ஏமாற்று வேலை என்று மக்கள் நினைக்கிறார்கள்.

அமீன் ஒரு நமட்டுச்சிரிப்போடு "எனக்காக நீங்கள் ஒரு உதவி செய்யவேண்டும். செய்வீர்களா?" என்று கேட்டான். அவர்கள் ஒரே குரலில், "காத்திருக்கிறோம்!" என்று கூறியபோது, தங்கள் முதுகுகளை வில்லாக வளைத்துக் காட்டினார்கள். அடுத்து அமீன்கூறிய வார்த்தைகள் அவர்களைத் தூக்கி வாரிப்போட்டது.

"எனக்கு எதிராக நீங்கள் பேசவேண்டும்!" என்றான் அமீன்.

"என்ன?" என்று அவர்கள் கதிகலங்கிப் போனார்கள். அமீன் தங்களைச் சோதிக்கிறானோ? என்றும் சந்தேகப்பட்டார்கள்.

அதனால் விழுந்தடித்து "நாம் ஒருபோதும் அவ்வாறு செய்ய மாட்டோம். அவ்வாறு பேசினால் எங்கள் நாக்கு அழுகிப்போய்விடும்!" என்று படபடப்பாகப் பேசினார்கள்.

அவர்களை அற்பப்புழுக்களாக அலட்சியமாக நோக்கிய அமீன். "நான் சொல்வதைக் கேட்பீர்களா? மாட்டீர்களா?" என்றான் கடுமையான தொனியில்.

"கேட்கிறோம்" என்று பயந்த தொனியில் பதில் வந்தது.

"தீயசக்திகள் சில நாட்டைக் கெடுக்க கிளம்பியிருக்கின்றன. அவர்கள் சதியை முறியடிக்க என்னிடம் மருந்து இருக்கிறது. அந்த மருந்தை உங்கள்மூலமாக கொடுக்கவிரும்புகிறேன்!" என்றான் அமீன்.

அவர்களுக்கு எதுவுமே புரியவில்லை. மாடுகள்போல தலையை ஆட்டினார்கள். அவர்களுக்குப் புரியவில்லை என்பது அமீனுக்குத் தெரியும்.

"எனக்கு எதிராகப் பேசுவது போல பேசி எனக்கு சார்பாக நடந்து கொள்ளவேண்டும். அதுதான் நீங்கள் இந்த நாட்டுக்குச் செய்யும் சேவை!" என்றான் அமீன்.

அவர்களுக்கு மேலும் குழப்பமாக இருந்தது. அமீனுக்குப் பயந்து தங்கள் குழப்பத்தை மறைத்துக் கொண்டார்கள்.

அறிக்கை ஒன்றைக்கொடுத்து அதில் கையொப்பம் போடுமாறு கோரினான் அமீன். அறிக்கையை வாசித்தே பார்க்காது அனைவரும் கையொப்பமிட்டனர். படித்துப் பார்த்தால் அமீனுக்குக் கோபம் வந்துவிடுமே என்ற பயம்.

அவர்கள் கையொப்பமிட்டதும் தனது உதவியாளரை அழைத்து அறிக்கையைப் படித்துக்காட்டுமாறு கூறினான்.

"உகண்டாவை முஸ்லிம் நாடாக்க எம் உயிருள்ளவை அனுமதியோம். ஜனாதிபதி அமீனிடம் அப்படி திட்டம் இருக்குமானால், அதன் விளைவுகள் நாட்டுக்கு நல்லதல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்..." என்று தொடர்ந்தது அறிக்கை.

அந்த அறிக்கை அரச வானொலியும் முக்கியத்துவம் கொடுத்து ஒலி பரப்பியது. இதனால் உகண்டா மக்கள் பெரும் வியப்படைந்தனர்.

அமீனுக்கு எதிரான செய்தியை உகண்டா வானொலி வெளியிடுவது அதுதான் முதற்தடவை.

அதனால் பலர் வியப்படைந்த போதும் சந்தேகப்பட்டவர்களும் இருந்தனர். அமீன் ஆடும் நாடகம் தான் இது என்றே அவர்கள் சந்தேகப்பட்டனர்.

அந்த அறிக்கை வெளியாகி ஒரு வாரத்தின் பின்னர் அதே உள்ளூர் பிரமுகர்கள் இன்னொரு அறிக்கையை வெளியிட்டனர். அதுவும் அமீனின் உதவியாளரால் தயாரிக்கப்பட்டு கையொப்பம் பெறப்பட்ட அறிக்கைதான்.

"முஸ்லிம் தீவிரவாதிகள் உகண்டாவை முஸ்லிம் நாடாக மாற்றத் திட்டமிட்டனர். அதனை முறியடித்துள்ள ஜனாதிபதி அமீனுக்கு நன்றி தெரிவிக்கிறோம்!" என்று அந்த அறிக்கையில் வாசகங்கள் காணப்பட்டன.

இதன்பின்னரும் பல பிரச்சினைகளில் அந்த உள்ளூர் பிரமுகர்கள் அரசுக்கு எதிராக கருத்துக் கூறுவதும், பின்னர் அரசையும், அமீனையும் புகழ்வதும் தொடர்ந்தது.

ஒரு கட்டத்தின்பின்னர் இந்த ஏமாற்றுவித்தையை மக்கள் இனம் கண்டுகொண்டனர். அதுவும் அமீனது கவனத்திற்கு வந்தது.

"இது ஏமாற்று வேலை என்று மக்கள் நினைக்கிறார்கள். உள்ளூர் பிரமுகர்கள் தற்போது பெரும் வசதிபெற்றிருப்பதும் மக்களுக்குச் சந்தேகத்தை ஏற்படுத்தியிருக்கிறது!" என்று புலனாய்வுப் பிரிவு அறிக்கை சமர்ப்பித்தது.

அந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட மூன்றாவது நாள், உள்ளூர் பிரமுகர்களில் ஒருவர் வெட்டிக் கொல்லப்பட்டார். அவரது உடலுக்கு அருகே, அமீனின் விசுவாசிகள் என்று எழுதப்பட்ட துண்டுக் காகிதம் ஒன்று காணப்பட்டது.

இச்செய்தியும் சகல பத்திரிகைகளிலும், அரசின் வானொலியிலும் வெளியானது.

"அமீனின் விசுவாசிகள்" என்று துண்டுக் காகிதத்தில் எழுதப்பட்டிருந்ததை வெளியிட சில பத்திரிகைகள் தயக்கம் காட்டின.

அதனைப் பயமின்றி வெளியிடுமாறு ஜனாதிபதி அலுவலகத்தில் இருந்து உத்தரவு கொடுக்கப்பட்டது.

அமீனுக்கு எதிரான செய்தியை வெளியிடுமாறு ஜனாதிபதி செயலகமே உத்தரவிடுவது என்றால், அமீனுக்கு ஏதாவது நடந்துவிட்டதோ? அமீனை இரகசியமாக பதவி இறக்கி விட்டார்களோ என்றுகூட சில பத்திரிகை ஆசிரியர்களுக்கு உள்ளூர சந்தேகம்.

ஆனால் அமீனின் திட்டம் வேறாக இருந்தது. குறிப்பிட்ட உள்ளூர் பிரமுகர்களுக்கும் தனது ஆதரவாளர்களுக்குமிடையே பகை இருப்பதாக மக்களை நம்பவைக்கவே, அவர்களில் ஒருவரைத் தீர்த்துக் கட்டினான். "மக்கள் மத்தியில் எமக்கு எதிரான சக்திகள் வளர்வதைவிட, நமக்கு ஆதரவான சக்திகள் நமக்கு எதிராக நடித்துக் கொண்டிருப்பது நமக்கு பாதுகாப்பானது!"

(தொடரும்...)

---

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

**வாசக நெஞ்சங்களே!**
**உங்கள் சிந்தனைக்குத் தீனிபோடும் வினாக்கள் அடங்கிய இப்போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.**

## குறுக்கெழுத்துப் போட்டி - 642

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | ■ | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | ■ | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | ■ |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 |
| 31 | 32 | 33 | 34 | 35 | ■ |

## குறுக்கெழுத்துப் போட்டி 640 - விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 செ | 2 ங் | 3 கா | 4 ல் | 5 நா | 6 ரை |
| 7 ங் | ■ | 9 வ | 10 ல | 11 ம் | ■ |
| 13 கு | 14 த் | 15 டி | 16 த | 17 ன | 18 ம் |
| 19 ண | 20 ம் | ■ | 22 ம் | ■ | 24 ன |
| 25 க் | 26 த | 27 க | ■ | 29 ளி | 30 யா |
| 31 கு | 32 ம | 33 டி | 34 ப் | 35 பு | 36 தி |

### மேலிருந்து கீழ்

01. ஒரு பறவை. இலங்கை முப்படையும் இணைந்து நடாத்தும் ஒரு பயிற்சி.
02. ஞானி. (திரும்பியுள்ளது)
03. மனப்பால் குடித்தல்.
05. ஞாபகத்தில் இருந்து நீக்கு. (திரும்பியுள்ளது)
06. கிளி. கிரகிப்பு. (குழம்பியுள்ளது)
16. வேடர். கானவர். (குழம்பியுள்ளது)
23. முன்னாள் ஜனாதிபதி ஒருவர். (திரும்பியுள்ளது)
32. பசு.

### இடமிருந்து வலம்

01. சட்டப் பாதுகாப்பான இடம்.
07. உம்பர். (குழம்பியுள்ளது)
11. பூமி. பசு.
13. புலி. கழுதைப் புலி. (குழம்பியுள்ளது)
19. ஒளியுள்ளவன். சந்திரன்.
25. ஒரு சாதியர். கன்னடர்கள். (குழம்பியுள்ளது)
31. குதிரை. அசுவம். பாய்மரம். (குழம்பியுள்ளது)

### போட்டி விதிகள்:

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் ஒட்டி **28.09.2015** க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள்.
அனுப்ப வேண்டிய முகவரி: குறுக்கெழுத்துப் போட்டி இல - **642**
தினமுரசு வாரமலர்,
- த.பெ.இல. :-167, யாழ்ப்பாணம்.
தங்கள் சரியான முகவரியையும் காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக. சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 1000 ரூபா பரிசுண்டு, அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.


**குறுக்கெழுத்துப் போட்டி இல.640 இற்கான சரியான விடைகளை அனுப்பி 1000 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.**

எம்.அசாம்,
வாகரை, மட்டக்களப்பு.

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

01. அ.மரின்குமார், மாட்டின் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
02. ஈ.பிரியவதனன், தெல்லிப்பளை மேற்கு, தெல்லிப்பளை.
03. எம்.ஜெயதாஸ், கண்டி வீதி, சாவகச்சேரி.
04. எஸ்.நாதன்குமார், பன்சல றோட், கண்டி.
05. எம்.இமாம், ஜின்னாநகர், திருகோணமலை.
06. து.வண்ணன், இரணைப்பாலை, புதுக்குடியிருப்பு.
07. நி.அங்கஜன், அரியாலை, யாழ்ப்பாணம்.
08. டொ.ஆரனி, பருத்தித்துறை வீதி, கொடிகாமம்.
09. தா.விதுசன், புலோலி தெற்கு, புலோலி.
10. அ.அஞ்சனா, சுன்னாகம் மேற்கு, சுன்னாகம்.









## நடத்துனராவதற்குமுன் ரஜினி பட்ட கஷ்டம்

ரஜினி சினிமாவிற்கு வருவதற்கு முன்பு பேருந்து நடத்துனராக இருந்தது அனைவரும் அறிந்ததே. இந்நிலையில் சமீபத்தில் ஒரு விழாவில் இயக்குனர் முத்துராமன் ரஜினி கண்டக்டராக இருப்பதற்கு முன்பு மிகவும் கஷ்டங்களை அனுபவித்துள்ளார்.

இதில் ரஜினியை வைத்து ஒரு படம் எடுத்தபோது, அவர் நடிக்கவேண்டிய காட்சியை முடித்துவிட்டு, அரிசி ஆலையில் அடுக்கி வைத்திருந்த நெல் மூட்டைகள்மீது படுத்து தூங்கி விட்டார். இதற்கிடையே வேறொரு காட்சி எடுத்து முடித்துவிட்டு ரஜினி நடிக்கவேண்டிய காட்சிக்காக தேடியபோது, அவர் நெல் மூட்டைமீது தூங்குவதை அறிந்து எழுப்பினேன். நெல் மூட்டைமீது படுத்தால் உடம்பு அரிக்காதா? எனக் கேட்டேன். அதற்கு அவர், நான் நடிக்க வருவதற்கு முன் மூட்டைதூக்கும் கூலி வேலைசெய்தேன் என்றார் என கூறினார். இந்த நிகழ்வை கடந்த வருடம் நடந்த ரஜினியின் பிறந்த நாள் நிகழ்விலும் நினைவு கூர்ந்தார்.

## சிங்கம் – 3

சூர்யா தற்போது 24 படத்தில் நடித்துவருகிறார். இப்படத்தின் படப்பிடிப்பு இம்மாத இறுதிக்குள் முடிவடைந்துவிடுமாம். இப்படம் நவம்பரில் திரைக்கு வருமென கூறப்பட்டுள்ளது.

இதை தொடர்ந்து சிங்கம் உ 3 பணிகளை தொடங்கவுள்ளாராம் சூர்யா. சிங்கம் உ 3 கோடை விடுமுறையில் வெளிவரும் என கூறப்பட்டுள்ளது. இதற்கிடையில் சூர்யா கெஸ்ட் ரோலில் நடித்த பசங்கஉ2வும் வெளியாகவுள்ளது.





மாவில் தனக்கென்று ஒரு தனி இடத்தை
ஒரு நல்ல அரசியல்வாதியும்கூட. சரத்கு
ளான ரயானுக்கும், இந்திய கிரிக்கெட் அ
மித்துன் என்பவருக்கும் ெ
நிச்சயிக்கப்பட்டுள்
திருமண நிச்ச
அன்று ெ
ஹே

## 23 மொழிகளில் கள்ளிக்காட்டு இதிகாசம்

கவிஞர் வைரமுத்து எழுதிய புகழ்மிக்க நாவல் கள்ளிக்காட்டு இதிகாசம். வைகை அணை கட்டப்பட்டபோது அதன் நீர்தேங்கும் பரப்புக்காக காலிசெய்யப்பட்ட 14 கிராமங்களின் பூர்வ கதை தான் கள்ளிக்காட்டு இதிகாசம். மண்சார்ந்த மக்கள் மண்ணோடும் வாழ்வோடும் நடத்திய போராட்டங்களை வலியோடு சொன்ன படைப்பு அது.

வட்டார வழக்கோடு எழுதப்பட்ட உலகத்தன்மை கொண்ட அந்த நாவல் 2003ஆம் ஆண்டுக்கான சாகித்ய அக்கடமி விருதுபெற்றது. இதுவரை 1 இலட்சம் பிரதி களுக்கு [illegible]பனையாகி நாவல் உலகத்தில் பெரும் சாதனை செய்திருக்கிறது. [illegible]ல் நிகழ்ந்த அதன் அறிமுக விழாவில் இங்கிலாந்து நாட்டு அந்நாள் கல்வி அமைச்சர் ஸ்டீபன் டிம்ஸ் மற்றும் லண்டன் மாநகர அந்நாள் மேயர் ரோபின் வேல்ஸ் இருவரும் கலந்துகொண்டு கள்ளிக்காட்டு இதிகாசம் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்படவேண்டுமென்று வலியுறுத்தினார்கள்.

தமிழில் வெளியான இந்த நாவலை இந்தியா முழுவதும் மற்றும் உலகம் முழுவதும் கொண்டு செல்ல சாகித்ய அகாடமி முயற்சி மேற்கொண்டு உள்ளது. மொழிபெயர்ப்புப் பணிகள் விரைவில் தொடங்கும் என்று சாகித்ய அக்கடமியின் செயலாளர் சீனிவாசராவ் கவிஞர் வைரமுத்துவுக்குக் கடிதம் எழுதியிருக்கிறார். இந்த மொழி பெயர்ப்பு முயற்சி தமிழுக்கும் இந்திய மொழி களுக்கும் இடையே கட்டப்படும் கலாசாரப் பாலமாகும். மொழிபெயர்ப்பு முடிந்ததும் அந்தந்த மாநிலத் தலைநகரங்களில் அறிமுகவிழா நடத்தப்படும் என்று வைரமுத்து தெரிவித்தார்.

காதல் திருமணம்தான் செய்வேன் - நடிகர் ஆர்யா பேட்



பசங்க - 2



வாலிப ராஜா

## கிரிக்கெட் வீரரை கைகோர்க்கும் சரத்குமார் மகள்

தமிழ் சினிஉ தனக்கென்று ஒரு தனி இடத்தை பிடித்திருப்பவர் சரத்குமார். இவர் ல அரசியல்வாதியும்கூட. சரத்குமார், ராதிகா சரத்குமாரின் மகஉ பானுக்கும், இந்திய கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சாளர் அபிமன்யு மித்துன் என்பவருக்கும் பெற்றோர்களால் திருமணம் நிச்சயிக்கப்பட்டுள்ளது. அதோடு இவர்களது திருமண நிச்சயதார்த்தம் வரும் 23.09.2015 அன்று சென்னையில் உள்ள பிரபல ஹோட்டலில் நடைபெற இருக்கிறதாம். நிச்சயதார்த்தம் அன்று இவர்களின் திருமண திகதி முடிவு செய்யப்பட உள்ளது.

## அரைநிர்வாணத்தால் அதிர்ச்சி

தமிழில் ஆரண்ய காண்டம் படம்மூலம் பிரபலமானவர் பொலிவுட் நடிகர் ஜாக்கி ஷெரூாப். தற்போது இவர் விக்ரமுடன் 10 என்றதுக்குள்ள படத்தில் நடித்துவருகிறார். இவரின் மகளான கிருஷ்ணா ஷெரூாப் சமீபத்தில் செய்த ஒரு காரியத்தால் இணையத்தளமே அதிர்ந்தது.

அவருடைய சமூகவலைத்தளமான இன்ஸ்டாகிராமில் மேலாடை இல்லாமல் அரை நிர்வாண கோலத்தில் இருக்கும் ஒரு புகைப்படத்தை வெளியிட்டார். சிறிதுநேரத்தில் இன்ஸ்டாகிராம் மூலம் காட்டுதீ போல அந்த புகைப்படம் பரவ பொலிவுட் திரையுலகமே அதிர்ச்சியில் ஆழ்ந்துள்ளது. சிறந்த நடிகர் என்று பெயர் எடுத்த உங்களது தந்தைக்கு களங் கத்தை ஏற்படுத்தலாமா என்று ரசிகர்கள் வருத்தம் தெரிவித்துவருகின்றனர். இது ஒருபுறமிருக்க கிருக்ஷ்ணா ஷெரூாப்பு க்கு நடிப்பு ஆசை வந்து விட்டதால்தான் இப்படி செய்கிறார் என்று இன்னொரு தரப்பு சொல்கிறது.

## திப்பு சுல்தான் வாழ்க்கை படமாகிறது

திப்பு சுல்தான் வாழ்க்கை சினிமா படமாகிறது. இதில், ரஜினிகாந்த் நடிப்பதற்காக பேச்சுவார்த்தை நடக்கிறது.

சரித்திர கதையம்சம் உள்ள படங்களுக்கு ரசிகர்கள் மத்தியில் பலத்த வரவேற்பு ஏற்பட்டுள்ளது. சமீபத்தில் வந்த பாகுபலி படம் தமிழ், இந்தி, தெலுங்கு உள்ளிட்ட பல மொழிகளில் வெளியாகி ரூ.500 கோடிக்கு மேல் வசூல் ஈட்டியது. இது தயாரிப்பாளர்களுக்கு வரலாற்றுப் படங்கள் எடுக்கும் ஆர்வத்தை மேலும் தூண்டிவிட்டுள்ளது. விஜய்யின் புலி படமும் சரித்திரக்கதை பாணியில் தயாராகி இருப்பதாகக் கூறப்படுகிறது.

இந்த நிலையில், திப்பு சுல்தான் வாழ்க்கையை சினிமா படமாக தயாரிக்கவும் ஏற்பாடுகள் நடக்கிறது. பிரபல கன்னட படஅதிபர் அசோக் கெனி இந்த படத்தை அதிக பொருட்செலவில் தயாரிக்கிறார். இவர், அர்ஜவூனை வைத்து கன்னடத்தில் பிரசாத் என்ற படத்தை தயாரித்தவர். இதில், திப்பு சுல்தான் வேடத்தில் ரஜினிகாந்த் நடிக்க பேச்சுவார்த்தை நடக்கிறது. இந்த தகவலை அசோக் கெனி தெரிவித்தார். இதுகுறித்து அவர் கூறியதாவது:உ

திப்பு சுல்தான் வாழ்க்கையை படமாக்குவது எனது நீண்டநாள் கனவாக இருக்கிறது. இந்த படத்தில் ரஜினிகாந்த் நடிப்பதுதான் பொருத்தமாக இருக்கும். இதற்காக ரஜினியை சில வருடங்களுக்கு முன்பு அணுகி பேச்சுவார்த்தை நடத்தினேன். ஆனால், அப்போது அவருக்கு உடல் நலக்குறைவு ஏற்பட்டதால் படவேலைகளை தொடங்கமுடியவில்லை.

இந்த படம் தொடர்பாக ரஜினிகாந்தை மீண்டும் சந்தித்துப்பேச திட்டமிட்டுள்ளேன்.

திப்பு சுல்தானின் பெருமைகள் பலவற்றை இன்னும் உலகம் அறியாமல் இருக்கிறது. அமெரிக்க முன்னாள் அதிபர் ஜோர்ஜ் வாஷிங்டனுக்கு கப்பல்களை பரிசாக கொடுத்த பெருமைக்கு உரியவர்.

திப்பு சுல்தான் வேடத்தில் ரஜினிகாந்த் நடித்து, அந்த படம் உலகம் முழுவதும் திரையிடப் படுவதை நினைத்துப்பார்க்கவே சந்தோசமாக இருக்கிறது. ராஜமவுலி மாதிரி ஒரு திறமையானவர் இந்த படத்தை டைரக்டு செய்யவேண்டும் என்று விரும்புகிறேன். இவ்வாறு அவர் கூறினார்.





## காதல் திருமணம்தான் செய்வேன் - நடிகர் ஆர்யா பேட்டி

ஆர்யா, கிருக்ஷ்ணா, தீபாசன்னதி, சுவாதி ஆகியோர் நடித்து, விக்ஷ்ணுவர்தன் டைரக்க்ஷனில், யு.டி.வி. நிறுவனம் தயாரித்து வெஉ ளிவர இருக்கும் படம், யட்சன். இந்த படத்தை பற்றி நிருபர்களுக்கு ஆர்யா பேட்டி அளித்தார். அப்போது நிருபர்கள் கேட்ட கேள்விகளும், அவற்றுக்கு ஆர்யா அளித்த பதில்களும் வருமாறு:உ

**கேள்வி:– விஷ்ணுவர்தன் டைரக்ஷனில் தொடர்ந்து 5 படங்களில் நடித்து இருக்கிறீர்களே, அந்த அனுபவம் பற்றி கூறமுடியுமா?**

பதில்:உ விக்ஷ்ணுவர்தனுக்கும், எனக்கும் இடையே உள்ள நட்புதான் அதற்கு காரணம். ஆனால், படப்பிடிப்பின் போது நண்பன் என்பதை அவர் காட்டிக்கொள்ளமாட்டார். ஒரு டைரக்டராக நடந்துகொள்வார். பட்டியல் படத்தின் முதல்நாள் படப் பிடிப்பில், என்னை ஒரு பெரிய பாலத்தில் இருந்து ஆற்றில் குதிக்கச் சொன்னார். நான் தயங்கினேன். உடனே, நான் குதித்துக் காட்டட்டுமா? என்று விக்ஷ்ணுவர்தன் கேட்டார். அடுத்த நிமிடம் நானே குதித்துவிட்டேன்.

**கேள்வி:– நெருக்கமான காதல் காட்சிகளிலும் விஷ்ணுவர்தனே நடித்துக்காட்டுவாரா?**

பதில் (சிரித்தபடி):உ எப்படி கண்டுபிடித்தீர்கள்? காதல் காட்சிகளில், அவர் நடித்துக்காட்டியபின்தான் என்னை நடிக்க வைப்பார்.

**கேள்வி:– வீட்டில், உங்களுக்கு பெண் பார்ப்பதாக பேச்சு வந்ததே?**

பதில்:உ அந்த கக்ஷடத்தை நான் என் பெற்றோர்களுக்கு கொடுக்க மாட்டேன். காதல் திருமணம்தான் செய்துகொள்வேன். அதற்கு என் பெற்றோர்களும் சம்மதிப்பார்கள். எனக்கு மணமகளாக வரப்போகிறவர் நடிகையாக இருப்பாரா அல்லது வேறு ஒரு பெண்ணா? என்பதை முடிவு செய்யவில்லை.

**கேள்வி:– நயன்தாராவுக்கு பரந்த மனதுடன், “எங்கிருந்தாலும் வாழ்க” என்று சொல்லியிருக்கிறீர்களே?**

பதில்:உ இப்போதும் சொல்கிறேன். அவர் எங்கிருந்தாலும் வாழ்க. அவருடைய திருமணத்தில் நான் நிச்சயமாக கலந்துகொள்வேன். இவ்வாறு ஆர்யா கூறினார்.

கல்வி அமைச்சர்
ற்றும் லண்டன்
வேல்ஸ் இருவரும்
இதிகாசம்
படவேண்டுமென்று

வலை இந்தியா
வதும் கொண்டு
சி மேற்கொண்டு
கள் விரைவில்
டமியின்
வைரமுத்துவு
இந்த மொழி
ந்திய மொழி
கலாசாரப்
ந்ததும் அந்தந்த
முகவிழா
தெரிவித்தார்.

# தேன் கிண்ணம்

## ஜாக்கிரதை

சித்திரை மாதக் காற்றிலே
சிரித்தெழும்பும் சோளம் போல
சிக்கித் தவிக்கும்
சிந்தனையற்றோரே
சந்திக்கும் சிந்திப்புக்கள்
சாந்தியதைத் தராதெனில்
சாகும்வரை நிந்திப்பே
தொடரும்.
கவனம் ஜாக்கிரதை!


வேலியே பயிரை
மேயும் பாவியாகி
சீரழியும் சித்தார்த்தங்கள்
செத்துவிட
தத்துவத்தின் தத்துப்பிள்ளை
வேஷம் போட்டு
வேதாந்தம் கூறியே
வாழ்க்கையை வீணாக்கினாய்
விளைவதை வினையாக்கினாய்
விக்கித்து துக்கிக்க போகிறாய்
கவனம் ஜாக்கிரதை!

வானத்தையே தாங்கும்
வச்சிரத்தூணை
கூட அசைத்துப் பார்க்க
ஆசைப்பட்ட நின்
உள்ளம் நிலையல்ல
நிர்மூலமாகும்போது
நினைப்பாய் நிலையானவனை
அப்போ! தெரியும் அவதி
கவனம் ஜாக்கிரதை!!

-அப்றார் ஏ.அஸீஸ், யாழ்ப்பாணம்-


## திருமணம்

கனவு முத்தத்திற்கு
கடிவாளம்!
கடிதக் கிறுக்கலுக்கு
குட்டை!
ஏக்கங்களுக்கு புனர்வாழ்வு!
இதயங்களுக்கு ஒத்தனம்!
எதிர்கால வாரிசுக்கு
அடித்தளம்!



கே.வாலேந்திரன், கொழும்பு – 03

## ரகசிய சினேகிதனே...



பாசம் வைத்து
பழகிய நேசத்தை
என் நெஞ்சில்
விதைத்து
இதயத்தில்
அன்பையும்
ஆசைகளையும்
உணர்வையும்
தூண்டி துலங்க
வைத்து

எனுள்ளம்
நொய்மைப்பட்டு
நான் கதறி
அழ அழ
கண்டும் காணாதது
போல் என்னை
கைவிட்டு மாயமாய்
மறைந்து
சென்றதேன்
ரகசிய நண்பனே!

காலம்
உன்மீது நான்
கொண்ட காதல்
மாறாது என்றும்
மண்ணைவிட்டு
போனாலும்
மறக்கமாட்டேன்
உன்னை
மறு ஜென்மத்திலும்
உன்னையே
நினைத்திருப்பேன்.

என்று சத்தியங்கள்
பல செய்து
சந்தித்த வேளைகளில்
சந்தோஷம் தந்து
இன்று நீ

மௌனம் இருந்து
என் மனசை
கொன்றுவிட்டு
மாயமாய்
மறைந்ததேன்
ரகசிய சிநேகிதனே.

என்.கே. வேணி.
பலாங்கொடை.

## நிம்மதியைத் தேடி நான்...!

என் வாழ்விலிருந்து - விலகி
நீண்ட தூரம் - எங்கோ
சென்றுவிட்ட
நிம்மதியை நான்
தேடிக் கொண்டிருக்கிறேன்.
படிக்கும் காலமதில்
எந்தனது வாழ்வு
வறுமையிலே வாடியதால்
கல்விச் செல்வம் தானிழந்தேன்
அப்போது போனது - என்
முதல் நிம்மதி

வேலையொன்று இல்லாமல்
பாலைவனம் போக
பாவி நான்
ஆயத்தமானேன்.
கடன் பட்டு காசுமாறி
ஏஜன்சிக்குக் கொடுத்தேன் - என்
பணத்துடன் அவன்
பயணமானான்
கடன்காரன் வந்து
கழுத்திலே கத்தி வைக்க
தொலைந்து போனது - என் நிம்மதி

வாலிப வயசதில்
காதலிக்கத் தொடங்கினேன்
வட்ட முகத்தழகி
வடிவான கண்ணழகி
இடி அமீனின் மகளென்று
குடி கொண்டாள் என்னிதயத்தில்
நடிகை போலிருந்த நதியா
என் காதலியானாள்
காதலோ கன காலம்
கடக்கவில்லை
படிக்காதவன் நீ யென்று
கழட்டிவிட்டாள் காதலை
இருந்த நிம்மதியும்
பறந்து போனது.

மனைவியென்று ஒருத்தி
பத்திரகாளி வேசமிட்டு
பரத நாட்டிய மாடுகின்றாள்
வீட்டிலோ தினச் சண்டை
மாட்டிக் கொண்டு
முழிக்கிறேன் நான்
தப்பியொட்டியிருந்த நிம்மதியும்
கடல் கடந்து
காணாமல் போய்விட்டது
உயிரை விடவென்று
நஞ்சிடம் தஞ்சமானேன்
படைத்தவனும் மறுத்துவிட்டான்
இப்படியாக தொலைந்துபோன
நிம்மதியை நான்
தேடிக் கொண்டிருக்கின்றேன்.

அளவெட்டி, ப. உதயகுமார்.

## மழைக்கால அறிக்கைகள்

நீலவானம்
நீலப்பட்டாடை உடுத்தி
நிலவுக்காக
வரவு பார்த்திருந்தது!

நித்தமும்
முத்தமிடும்
மதர்ப்பில் மிதந்தது
வானம்!

எங்கிருந்தோ
வந்த மேகம்
காதலால் இருண்டு
கட்டி அணைத்தது!

அவிழ்ந்தது...
கரும் கூந்தல்!

இடை தாழ்ந்து
வானத்து மல்லிகை
மொட்டுக்களை மறைத்தது!

சேலை அவிழ
நீலம் கலைந்துபோனது
கருமேகம்...
வானமேனியெங்கும்
சுருள் சுருளாக திரண்டது!

மின்னல் துடித்து
விண்ணைப் பறித்தது
மேகமும் வானமும்
முத்தமிட்டு முனகின

பச்சை புற்கள்
இச்சையுடன் பார்த்து
தலைநிமிர்ந்தன!

மேகத்தில்
முகம் புதைக்க
வெண்ணிலவு
வானத்தில் ஒழி மறைந்தது!
நாணத்தில்...

மோகக் காற்று!
எழுந்து வானம்
முழுக்கப்பரந்தது
தேர்தல் அலையாக...

தறிகெட்டு போய்
சுற்றிவந்து
உறுமியது ஊதக்காற்று!

மோதலில் மேகங்கள்
இழந்து போயின

தேர்தல் கால
கட்சிகளைப் போல
இடம்மாறிக் கொண்டன!

தூறலின் சாரலில்
நனைந்துபோயின
வானமும் மேகமும்!

தவனம் கொண்டு
சமுத்திரம் கொந்தளித்தது!
கட்டி தழுவ பயந்த
கரை பின்வாங்கியது!

“சன்னிவரும்”
நனைந்துபோகாதே என
அம்மாக்கள் அறிக்கை
விட்டனர்
சர்வதேசம் வருமென
பூச்சாண்டி காட்டினர்!
மழை பெய்ததும்
சுழல் காற்று மூச்சுவாங்கி
அடங்கிப் போனது...
தேர்தல்கால அறிக்கையாக...
பாவம்! ஈழத்தமிழன்.

மண்டைதீவு மகிழ்நன்

## என்னால் முடியாது

பெண்ணே!
இதயமே! இல்லாத நீ
இலகுவாய் இயம்பிவிட்டாய்
இன்றுடன் என்னை மறந்துவிடு என்று
இதயம் இருக்கும் நானோ!
நகரும் ஒவ்வொரு வினாடியும்
மரணவாசல் தொட்டு வருகிறேன்
உன்னை மறக்க முயன்று!



**ஸகாத் கொடுப்பவர்கள்தான் உழ்ஹிய்யா கொடுக்கவேண்டும் என்ற அவசியம் கிடையாது. வசதியுள்ளவர்கள் அனைவரும் கொடுக்கவேண்டும். ஒட்டகம் அல்லது மாடாக இருந்தால் ஏழு பேர் சேர்ந்து கூட்டாக கொடுக்கலாம். இது ஆண்களுக்கு மட்டும்தான் என்பதில்லை. பெண்களும் தாராளமாக இதில் பங்கேற்கலாம். உழ்ஹிய்யா கொடுப்பவரே அறுப்பது மிகவும் சிறந்தது. அப்படி இல்லையென்றால் வேறொருவருக்குப் பொறுப்புக் கொடுக்கவும் முடியும். அவர் அந்த இடத்திற்கு சமூகமளிப்பது சிறந்தது. தைரியமிருந்தால் பெண்களும் அறுக்கலாம். அறுப்பதற்கு முன் அல்லாஹ்வின் பெயர் சொல்லப்படவேண்டும்.**

அல்ஹாஜ் எம்.எப்.எம். இக்பால் (ஜே.பி)
யாழ்ப்பாணம்

**து**ல்ஹஜ் பத்து பிறந்துவிட்டது. ஹஜ்ஜுப் பெருநாள் மலர்ந்துவிட்டது. தக்பீர் முழங்குகிறது. மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் இஸ்லாமிய சுலோகம்தான் இனிய தக்பீராகும்.

“அல்லாஹு அக்பர்..... அல்லாஹு அக்பர்.....லாஇலாஹ இல்லல்லாஹு வல்லாஹு அக்பர்....அல்லாஹு அக்பர்... வலில்லாஹில் ஹம்து.....”

புனித ஹஜ் கடமையானது இஸ்லாத்தில் ஐந்தாவது கடமையாகும். வசதிபடைத்த செல்வந்தர்களுக்கு மட்டுமே கடமையாக்கப்பட்டுள்ளது. வசதிபடைத்த செல்வந்தர்கள் அனைவரும் கண்டிப்பாக புனித ஹஜ்ஜை நிறைவேற்றியாகவேண்டும். சக்தியிருந்தும் புனித ஹஜ்ஜை நிறைவேற்றாமலிருப்பது பெரும் குற்றமாகும்.

ஹஜ்ஜுக்கான ஒன்றுகூடல், முஸ்லிம் உம்மத்தின் ஐக்கிய உணர்வை பறைசாற்றும் சர்வதேச அளவிலான வருடாந்த மாநாடாக கணிக்கப்படுகிறது. தொழுகையில் ஆரம்பிக்கும் முஸ்லிம் உம்மத்தின் ஐக்கியமும் ஒருமைப்பாடும் ஹஜ் ஒன்றுகூடலில் மேலும் வலுப்பெறுகிறது.

நபி(ஸல்) அவர்களின் வருகைக்கு முன்வாழ்ந்த ஜாஹிலிய்யா காலத்து மக்கள்கூட இவ்வழிபாட்டில் ஈடுபட்டு வந்தனர். இணைவைப்போடு மூட நம்பிக்கைகளும் அனாச்சாரங்களும் நிறைந்த ஒரு வழிபாடாகவே இது இருந்துவந்தது. இது ஒரு வழிபாடு என்பதைவிடவும் அரேபிய தீபகற்ப மக்கள் ஒன்றுகூடும் வியாபார சந்தையாகவே திகழ்ந்தது என்றால் மிகையாகாது.

நபி(ஸல்) அவர்களின் வருகைக்குப் பின் இந்நிலை முற்றாக மாற்றப்பட்டு இணைவைப்பும் மூடநம்பிக்கைகளும் அனாச்சாரங்களும் முற்றாக அகற்றப்பட்டு வருடாந்தம் ஒன்றுகூடும் சர்வதேச இஸ்லாமிய சமத்துவமும் சகோதரத்துவமும் உள்ளடக்கிய மாநாடாக அமையப்பெற்றது.

அல்லாஹ்வின் கட்டளையை இதயத்தில் இறுக்கமாய் கொண்டு, எத்தனையோ காலங்களாக “இல்லையே தமக்கொரு பிள்ளை” என ஏங்கித் தவித்து இன்னல் பல கண்டு இறுதியில் அன்புடனும் ஆசையுடனும் பெற்றெடுத்த அருமை மகன் இஸ்மாயில் (அலை) அவர்களை அல்லாஹ்விற்காக பலியிடத் துணிந்த இப்ராஹீம் (அலை) அவர்களின் உயர்வான, ஒப்பற்ற மனதையும், ஒரு மாபெரும் தத்துவத்தையும் இந்த ஹஜ்ஜுப் பெருநாள் எமக்கு நினைவூட்டிக் கொண்டிருக்கின்றது.

ஹஜ் கடமையை நிறைவேற்றும் போது நபி இப்ராஹீம் (அலை) அவர்களின் குடும்பமே நம் மனக்கண்முன் நிழலாடும். இஹ்ராம் கட்டுதல், கஃபாவை வலம்வருதல், ஹஜருல் அஸ்வத் கல்லை முத்தமிடல், ஸபா, மர்வா மலைகளுக்கிடையில் ஓடுதல், புனிதம் நிரம்பிய ஸம்ஸம் நீர் அருந்துதல், அரபாவில் தரித்தல், குர்பான் கொடுத்தல், மினாவில் கல்லெறிதல் போன்ற அனைத்து கிரியைகளிலும் நபி இப்ராஹீம் (அலை) அவர்களின் தியாகம் பிரதிபலிக்கின்றன.

புனித ஹஜ் பெருநாள் தினத்திலும் அதைத் தொடர்ந்துவரும் துல்ஹஜ் மாதம் 11, 12, 13 ஆகிய தினங்களிலும் வசதியுள்ள ஒரு முஸ்லிம் நிறைவேற்றும் மிகச்சிறந்த வணக்கமே உழ்ஹிய்யா (குர்பான்) கொடுப்பதாகும். ஆடு, மாடு, ஒட்டகம் போன்ற மிருகங்களை அறுத்து தானும் உண்டு பிறருக்கும் புசிக்கக் கொடுத்து அல்லாஹ்வின் அன்பைப் பெறும் நற்செயலே உழ்ஹிய்யா ஆகும்.

ஸகாத் கொடுப்பவர்கள்தான் உழ்ஹிய்யா கொடுக்கவேண்டும் என்ற அவசியம் கிடையாது. வசதியுள்ளவர்கள் அனைவரும் கொடுக்கவேண்டும். ஒட்டகம் அல்லது மாடாக இருந்தால் ஏழு பேர் சேர்ந்து கூட்டாக கொடுக்கலாம். இது ஆண்களுக்கு மட்டும்தான் என்பதில்லை. பெண்களும் தாராளமாக இதில் பங்கேற்கலாம். உழ்ஹிய்யா கொடுப்பவரே அறுப்பது மிகவும் சிறந்தது. அப்படி இல்லையென்றால் வேறொருவருக்குப் பொறுப்புக் கொடுக்கவும் முடியும். அவர் அந்த இடத்திற்கு சமூகமளிப்பது சிறந்தது. தைரியமிருந்தால் பெண்களும் அறுக்கலாம். அறுப்பதற்குமுன் அல்லாஹ்வின் பெயர் சொல்லப்பட வேண்டும். நாம் அறுக்கின்ற போது “பிஸ்மில்லாஹி அல்லாஹு அக்பர்” என்று கூறவேண்டும்.

“உங்களில் ஒருவர் உழ்ஹிய்யா கொடுக்க எண்ணியிருக்கின்ற நிலையில் துல்ஹஜ் மாதம் பிறந்ததும் நகம், முடி எதையும் வெட்டவேண்டாம்” (முஸ்லிம்). ஒருவர் உழ்ஹிய்யா கொடுக்க எண்ணியிருக்கும் நிலையில் நகம் அல்லது முடி ஏதாவது ஒன்றை வெட்டினால் அவர் அல்லாஹ்விடம் பாவமன்னிப்பு கேட்டுக்கொள்ளவேண்டும்.

உழ்ஹிய்யா கடமையை நிறைவேற்றுகையில் பிற சமூகங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்தை பாழ்படுத்தாத வகையில் அதை நிறைவேற்றுவது முக்கிய அம்சமாகும் என்பதை எவரும் மறந்துவிடக்கூடாது. நம் மதக் கிரியைகளை நிறைவேற்றும்போது பிற மதத்தினரின் அதிருப்தியையும் வெறுப்பையும் சம்பாதித்துக் கொள்வது நல்லதல்ல.

மிருகங்களை அறுப்பதற்கும் இறைச்சியைப் பெற்றுகொண்டு சுற்றாடலுக்கு மாசு ஏற்படாதவகையில் கழிவுப்பொருட்களை அழித்தொழிப்பதற்கும் போதிய இடவசதி இருக்கும்வரை இந்த நடைமுறையில் பிரச்சினைகள் தலைதூக்குவதில்லை. பல்லின மக்களும் கலந்து வாழும், இடப்பற்றாக்குறை நெருக்கடிமிக்க பகுதிகளில் மிருகங்களை அறுப்பதும், அவற்றின் கழிவுகளை அப்புறப்படுத்துவதும் எப்போதுமே சர்ச்சைக்குரியனவாகின்றன.

அல்லாஹ் படைத்த எந்த மிருகத்தையும் (ஆகுமாக்கப்பட்டதை) அறுத்து உண்பதில் எந்தத் தவறும் கிடையாது. உழ்ஹிய்யா கொடுக்கும் விடயத்தில் பல்லின மக்கள் வாழும் எமது நாட்டில் பிற மதஉணர்வுகளுக்கு மதிப்பளித்து நடக்கவேண்டும் என்பதை நாம் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். மிருகங்களை அறுப்பதற்காக கொண்டுசெல்லும்போது அதற்கு இம்சை செய்வதோ, அறுத்ததன் பின் இரத்தம் வடியும் நிலையில் பாதைகளில் இறைச்சியைத் தூக்கிச் செல்வதோ கூடாது. அறுத்த பிராணியின் கழிவுகளான தோல், எலும்புகள், கொம்பு, சாணம் போன்றவற்றை துர்நாற்றம் வீசும் நிலையில் பாதையோரங்களில் வீசுவதை முற்றிலும் தவிர்க்கவேண்டும். அவைகளை குழிதோண்டிப் புதைத்துவிட வேண்டும். ஆனால் நம் சகோதரர்கள் அவ்வாறு செய்யத் தவறிவிடுகின்றனர். இது கவலைக்குரிய விடயமாக உள்ளது. இதுபோன்ற தவறுகளை விடுவதால்தான் பிறசமூகத்தினரின் ஏச்சுக்கும் பேச்சுக்கும் உள்ளாக வேண்டியநிலை ஏற்படுகின்றது. இதை உழ்ஹிய்யா கொடுக்கும் ஒவ்வொருவரும் சிந்தித்து செயற்படுவது கட்டாயக் கடமையாகும்.

எமது நாட்டின் இறைச்சிக் கடைகள் தொடர்பான உள்ளூராட்சி அமைப்புகளுக்கான கட்டளைச் சட்டம் அமுலில் உள்ளதோடு அதன் பிரகாரம் இறைச்சியின் பொருட்டு கால்நடைகளைக் கொல்வதற்குப் பாதுகாப்பான கொள்கலன்களிலேயே அறுக்கப்படவேண்டும் என்ற நியதியும் உண்டு. உழ்ஹிய்யாவின் பொருட்டு மிருகங்களை அறுப்பதற்காக அவ்வப் பிரதேச உள்ளூராட்சி அமைப்புகளின் அதிகாரிகளுடன் பேசி, அதற்காக செலுத்தவேண்டிய சிறுகட்டணங்களையும் செலுத்தி, பாதுகாப்பான முறையில், சுற்றாடலுக்கும் சுற்றாடலிலுள்ள பிற சமூகத்தவர்களுக்கும் தொந்தரவில்லாதவாறு இக்கடமையை நாம் நிறைவேற்றவேண்டும்.

இறைச்சிக்காக ஆடு, மாடுகளை கொல்வது எமது நாட்டு சட்டத்தால் தடுக்கப்பட்ட விடயமல்ல என்பதை பிறமதத்தவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். உணவுக்காக கால்நடைகளை கொல்வது மிருகவதை என்று சில கொள்கைப் பிரிவினர்கள் வாதாடுகின்றனர்.

ஒருவருக்கு இருக்கும் உரிமைகளும் மத, கலாசார கொள்கைச் சுதந்திரங்களும் இன்னும் ஒருவருக்கு இடைஞ்சலாக இருக்கமுடியாது என்பது ஜனநாயக தத்துவங்களில் ஒன்றாகும். இதை அல்லாஹ்தான் அவர்களுக்குப் புரிய வைக்க வேண்டும்.

பல்லின மக்கள் வாழும் இந்த நாட்டில் சிறுபான்மையினராகிய நாம் பிற மத உணர்வுகளுக்கு மதிப்பளித்து புரிந்துணர்வுடனும் சகிப்புத் தன்மையுடனும் புனித ஹஜ்ஜுப் பெருநாளை கொண்டாடுவோம்.

எமது நாட்டில் உழ்ஹிய்யா சம்பந்தமான பிரச்சினைகள் ஏற்படாமல் நிம்மதியாகவும் மனச்சந்தோசத்துடனும் உழ்ஹிய்யா கொடுக்கும் நிலைமை ஏற்படவேண்டும் என்று அல்லாஹ்விடம் பிரார்த்திப்போமாக! ஆமீன்!!







# குறிஞ்சியில் மலர்ந்த பெண்ணியம்

பெண் அடிமைத்தனம் மனிதன் தோன்றியபோதே காலூன்றிவிட்டதா? அல்லது இடையில் எழுந்ததா? என்ற வினாவுக்கு, இடையில் எழுந்ததுதான் என்று சங்க இலக்கியங்கள் விடை பகர்கின்றன. பத்துப்பாட்டில் கபிலர் பாடிய குறிஞ்சிப்பாட்டே இதற்கு சான்றாகத் திகழ்கிறது.

உள்ளத்தன்மை உள்ளினன் கொண்டு
சாறு அயர்ந்தன்ன மிடா அச் சொன்றி
வருநர்க்கு வரையா வளநகர் பொற்று
மலரத் திறந்த வாயில் பலர் உண
பைந்நிணம் ஒழுகிய நெய்ம்மலி அடிசில்
வசையில் வான் திணைப்புரையோர் கடும்பொடு
விருந்து உண்டு எஞ்சிய மிச்சில் பெருந்தகை
நின்னோடு உண்டலும் புரைவது என்று ஆங்கு
அறம் பிணை ஆகத் தேற்றே"




தலைவனின் விரிந்த மார்பை இறுகத் தழுவுகிறாள் தலைவி. அந்த இறுகிய அணைப்பில் தலைவியின் இதயத்தில் எழுந்த எண்ண அலைகளைப் புரிந்துகொள்கிறான் தலைவன். அவர்களுக்குள்ளே களவு மணம் நிகழ்ந்துவிட்டது. ஆனால், கற்பு மணம் நிகழவில்லை. இந்நிலையில், "இவள்தான் தன் இல்லத்தை இயக்கப்போகும் இல்லாள்" என முடிவு செய்துவிடுகிறான். அந்த நல்லாளிடம் தன் இல்லத்தையும், தன்னையும் எப்படி வழிநடத்தவேண்டும் என தன் இதயத்தில் எழுந்த எண்ண ஓட்டங்களை இணைத்துத் தன் இல்லப் பெருமைகளையும் எடுத்தியம்புகிறான்.

எங்கள் ஊரில் திருவிழா நடைபெறும் காலத்தில் எங்கள் இல்லத்திற்கு விருந்தினர் அதிகமாக வந்தவண்ணம் இருப்பர். வருவோரிடமெல்லாம் இன்முகம் காட்டி, வரையறையில்லாத வகையில் அவர்களுக்கு வாரிக்கொடுக்கும் வளமுடையது எனது இல்லம். எங்கள் இல்ல வாயில்கள் எப்போதும் திறந்தே இருக்கின்ற அடையாப் பெருங்கதவுகள் கொண்டவை.

வாய் அகன்ற பெரிய பாத்திரத்தில் எப்போதும் உணவு தயார் நிலையிலேயே இருக்கும். கொழுப்பு மிகுந்த பசுமையான நெய் உருகி ஓடுகின்ற அளவு உணவில் கலந்திருக்கும். அந்தச் சுவைமிக்க உணவை உயர்ந்த எண்ணம்கொண்ட விருந்தினர்க்கு, பண்பான பாவையே... நீ, அவர்கள் மகிழும்வகையில் கொடுத்து விருந்தோம்பல் செய்யவேண்டும். அப்படி அவர்கள் உண்டது போக எஞ்சியதை எனக்கு நீ உன் கையால் எடுத்துக்கொடுக்க, இருவரும் சேர்ந்தே உண்போம் என் இனியவளே! இப்படி இன்பமாக இணைந்தே இல்லறம் என்னும் தெப்பத்தில் நீந்திக் கரைசேர்வோம்" என்று தலைவன் கூறுகிறான்.

மேற்கண்ட பாடல்,
"தனக்கென்று வைக்காமல்
வந்தவர்க்குத் தந்தது போக
மீதம் இருப்பதை உண்பது"
என்ற பண்பு நலனையும் பெண் இல்லற அடிமையல்ல, இணை, துணை என்பதையும் ஆணுக்குப் பெண் இணையானவள் என்று பெண்ணைப் பெருமைப்படுத்தியும் பாடியுள்ளார் கபிலர்.



# கொழுப்பை குறைக்கும் சூப்பரான பயிற்சி

சிலர் பார்க்க ஒல்லியாக இருந்தாலும், பின்பக்கம் அதிகளவில் சதை இருக்கும். இதனை மிக எளிதாக குறைக்கலாம், தினமும் தோப்புக்கரணம் போட்டு வந்தால் நல்ல பலனை காணலாம்.

இதனால் பின்பக்க கொழுப்பு மட்டுமின்றி கால் மற்றும் தொடை வலுவடையும். மேலும் மற்றொரு பயிற்சியின் மூலம் மிக எளிதாக குறைக்கலாம்.

இதற்கு முதலில் தரையில், முட்டியை மடக்கி பாதத்தின் மேல் உட்கார வேண்டும்.

முன் உடலை வளைத்து, கைகளைத் தரையில் ஊன்றி, (யானை போல்) நிற்கவேண்டும். தலை தரையைப் பார்த்தபடி இருக்கட்டும். இப்போது வலது கால்முட்டியை மடக்கி, மேல்நோக்கி உயர்த்தி இறக்கவேண்டும்.

பின்னர், இதேபோல இடது கால் முட்டியை மடக்கி உயர்த்தி இறக்கவேண்டும். இதுதான் ஒரு செட், இதேபோல ஆரம்பத்தில் 15 முறை செய்யவேண்டும். பின்னர் படிப்படியாக எண்ணிக்கையின் அளவை அதிகரித்துக்கொள்ளலாம்.



# மல்வானி இறால் குழம்பு

இறால் உ 500 கிராம், புளிச்சாறு உ 2 கரண்டி பு்ண்டு உ 3 உ 4 பற்கள், (தட்டியது), தேங்காய் பால் உ 1 கப், மஞ்சள் தூள் உ 1 கரண்டி, கரம் மசாலா உ 1 கரண்டி, உப்பு உ தேவையான அளவு, எண்ணெய் உ 2 மேசைக்கரண்டி, கொத்தமல்லி உ 2 மேசைக்கரண்டி

**மசாலாவிற்கு:**

தேங்காய் உ 1/2 கப் (துருவியது)

வெங்காயம் உ 2 (நறுக்கியது)

மல்லி உ 1 மேசைக்கரண்டி, சோம்பு உ 1/2 கரண்டி

வெந்தயம் உ 1/2 கரண்டி, பச்சை ஏலக்காய் உ பட்டை உ 1, வரமிளகாய் உ 2, கிராம்பு உ 3, எண்ணெய் உ 1 மேசைக்கரண்டி தண்ணீர உ 2 மேசைக்கரண்டி

**செய்முறை:** முதலில் இறாலை நன்கு சுத்தமாக கழுவிக் கொள்ளவேண்டும். பின் அதில் சிறிது உப்பு தூவி, பிரட்டி தனியாக வைத்து விடவேண்டும். பின்பு ஒரு வாணலியை அடுப்பில் வைத்து, அதில் 1 மேசைக்கரண்டி எண்ணெய் ஊற்றி காய்ந்ததும், அதில் பட்டை, கிராம்பு, ஏலக்காய், வரமிளகாய், சோம்பு, மல்லி, வெந்தயம் சேர்த்து 1 நிமிடம் வதக்கவேண்டும். பின் வெங்காயம் மற்றும் தேங்காய சேர்த்து 4 உ 5 நிமிடம் தீயை குறைவில் வைத்து வதக்கி, இறக்கவேண்டும். கலவையானது குளிர்ந்ததும், அதனை மிக்ஸியில் போட்டு, தண்ணீர ஊற்றி சற்று கெட்டியாகவும் மென்மையாகவும் அரைத்துக் கொள்ளவேண்டும்.

பின்னர் ஒரு அகன்ற வாணலியை அடுப்பில் வைத்து, அதில் சிறிது எண்ணெய் ஊற்றிகாய்த்தும், தட்டி வைத்துள்ள பு்ண்டுசேர்த்து வதக்கி, மஞ்சள் மற்றும் அரைத்து வைத்துள்ள மசாலாவை சேர்த்து, தீயை குறைவில் வைத்து 1 நிமிடம் வதக்கவேண்டும்.

பிறகு தேங்காய் பால் மற்றும் உப்பு சேர்த்து கிளறி விட்டு, இறாலைபோட்டு, குறைவான தீயிலேயே 10 நிமிடம் நன்கு கொதிக்க விடவேண்டும். இறுதியில் புளிச்சாற்றினை ஊற்றி, கரம் மசாலா தூவி கிளறி, 5 நிமிடம் கொதிக்க விட்டு இறக்கினால், சுவையான மல்வானி இறால் குழம்பு தயார்யூ இதன் மேல் கொத்தமல்லியைத் தூவி, சாதத்துடன் சாப்பிட்டால் அருமையாக இருக்கும்.



# முகத்தில் உள்ள மேடு பள்ளங்களைப் போக்கும் முறைகள்

சிலருக்கு முகத்தில் ஆங்காங்கு மேடு பள்ளங்களாக இருக்கும். அவை உங்கள் முகத்தின் அழகையே கெடுக்கும். இப்படி மேடு பள்ளங்கள் ஏற்படுவதற்கு காரணம், சருமத் துளைகளானது விரிந்துகொண்டே போவதோடு, அவ்விடத்தில் அழுக்குகளும், எண்ணெய்களும் அதிகம் சேர்ந்து, மேன்மேலும் பெரிதாகிக் கொண்டே இருக்கும்.

**படி - 01**

சருமத்தை சுத்தப்படுத்த ஓர் சிறந்த வழி ஆவி பிடிப்பது. ஆவி பிடிப்பதன்மூலம், சருமத்துளைகளில் உள்ள அழுக்குகள் அனைத்தும் வெளியே வந்துவிடும். பின் சுத்தமான துணியால் துடைத்து எடுக்கவேண்டும்.

**படி - 02**

ஆவிபிடித்த பின், ஸ்கரப் செய்யவேண்டும். இதனால் வெளியே வந்த அழுக்குகளை தேய்த்து முற்றிலும் வெளியேற்றிவிடலாம். அதற்கு உப்பை நீரில் கலந்து அதனைக் கொண்டு மென்மையாக ஸ்கரப் செய்யலாம்.

**படி - 03**

ஸ்கரப் செய்ததை அடுத்து, திறந்துள்ள சருமத்துளைகளை மூடவேண்டும். அதற்கு ஐஸ்கட்டிகளைக்கொண்டு மென்மையாக மசாஜ் செய்யவேண்டும். இதனால் திறந்த சருமத்துளைகளை மூடிவிடும்.

**படி - 04**

ஐஸ்கட்டிகளைக் கொண்டு மசாஜ் செய்து சிறிது நேரம்கழித்து, முகத்திற்கு மாய்ஸ்சுரைசர் பயன்படுத்தி மென்மையாக மசாஜ் செய்யவும்.

**படி - 05**

இரவில் படுக்கும்முன் முகத்தைக் கழுவுங்கள். முக்கியமாக மேக்கப் போட்டிருந்தால், இரவில் படுக்கும் முன் ரோஸ் வோட்டர் பயன்படுத்தி துடைத்து எடுத்துவிடுங்கள். ஒருவேளை நீங்கள் மேக்கப் பயன்படுத்தாவிட்டால், முகத்தை நீரினால் ஒருமுறை கழுவுங்கள். இதனால் சருமத் துளைகளில் அழுக்குகள் சேர்வதைத் தவிர்க்கலாம்.

**படி - 06**

சருமத்திற்கு பொருந்தாத அழகு சாதனப் பொருட்களைப் பயன்படுத்தவேண்டாம். இல்லாவிட்டால் அவை உங்கள் சருமத்துளைகளை மேலும் பெரிதாக்கிவிடும்.

**250/= பரிசு** வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி

பரிசுப் போட்டி இல :- 487

கேள்வி: ஆணுக்குப் பெண் இணையானவள் என்று பெண்ணை பெருமைப்படுத்தியவர் யார்?

அனுப்ப வேண்டிய கடைசித் திகதி:- 28. 09. 2015

விடையை கீழுள்ள கூப்பனில் எழுதி, தபாலட்டையில் அனுப்பிவைக்கவும். அனுப்பி வைக்கவேண்டிய முகவரி:

வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி,
பரிசுப் போட்டி இல : 487
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல - 167,
யாழ்ப்பாணம்.

பரிசுப் போட்டி இல :- 485 இற்கான விடை :-
எட்வின் மொலமுரே

பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி :-
எம்.காவியா,
பிரதான வீதி,
நுவரெலியா.

சரியான விடையை எழுதியவர்களில் ஒருவர் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுவர்.

**487**

பெயர் : ........................

முகவரி : ........................


........................

தே.அ. அட்டை இல : ........................

விடை : ........................

........................

கையொப்பம் : ........................



# மனிதன் இறந்து 36 மணி நேரத்தில் நடப்பது என்ன ?

மனிதன் இறந்து 36 மணிநேரத்தில் ஈக்கள் முட்டை இடுகின்றன உடலில்,
60 மணிநேரத்தில் லார்வாக்கள் தோன்றுகின்றன.
3 நாட்களில் நகங்கள் கழன்றுவிடுகின்றன.
4 நாட்களில் ஈறுகள் தொலைகின்றன.
5 நாட்களில் திரவமாய் உருகுகிறது மூளை.
6 நாட்களில் வாயுக்களால் வெடிக்கிறது வயிறு.
2 மாதங்களில் உடல் உருகி திரவமாகின்றது.

இறந்த பிறகு இப்படி மனிதனின் உடல் பாகங்கள் சிதைந்து போக, எதற்கு இந்த தலைக்கனம், கோபம், ஆணவம், ஆடம்பரம், கொலைவெறி, கௌரவம், ஜாதி மதச்சண்டைகள்...???

மனித பிறப்பு மிக அரிய பிறப்பு. அதை வாழும் காலத்தில் அனைவரிடமும் அன்புடனும் பண்புடனும் ஆதரவுடனும் நடந்துகொள்வோமே.

# அரபு நாட்டு கோடீஸ்வரர்

## மகளுக்காக 500 கோடியில் பிறந்தநாள் கேக்

உலகின் பல நாடுகளில் கோடிக்கணக்கான மக்கள் அகதிகளாகவும், அடுத்தவேளை உணவுக்கு வழியின்றி வறுமையாலும் வாடிவரும் நிலையில் பிறந்தநாள் கேக்குக்காக 75 மில்லியன் அமெரிக்க டொலர்களை அரபு அமீரக நாடுகளில் ஒன்றைச்சேர்ந்த பிரபல செல்வந்தர் செலவழித்துள்ளது பெரும் பரபரப்பையும், பரவலான கொந்தளிப்பையும் உண்டாக்கியுள்ளது.


உலகின் பிரபல பேஷன் டிசைனரான டெபி விங்காம் என்ற பெண் உருவாக்கியுள்ள இந்த கேக் 450 கிலோ எடையில் 4 ஆயிரம் வைரக்கற்கள், செவ்வந்திக்கற்கள் மற்றும் மரகதங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளது.

இந்த கேக்குக்கு ஓர்டர் செய்த செல்வந்தர் அரபு அமீரகத்தின் எந்த நாட்டைச் சேர்ந்தவர்? யாருடைய பிறந்தநாளுக்காக இதை ஓர்டர் செய்துள்ளார்? என்ற விபரங்களை வெளியிட இந்த கேக்கை தயாரித்தவர் மறுத்துள்ளார்.

எனினும், உலகின் மிக விலையுயர்ந்த கேக்காக கருதப்படும் இதற்காக ஏழரை கோடி அமெரிக்க டொலர் (இலங்கை மதிப்புக்கு சுமார் 1200 கோடி ரூபாய்) செலவிடுவதற்கு பதிலாக வறுமையால் வாடும் ஏழை மக்களுக்கும், நாடிழந்து, அகதிகளாக காலடி பதிக்கக்கூட இடம் கிடைக்காமல் பசியாலும், பட்டினியாலும் அல்லற்படும் இலட்சக்கணக்கான மக்களுக்கும் அந்த அரபு நாட்டு கோடீஸ்வரர் உதவி இருக்கலாம் என உலகெங்கிலும் உள்ள சமூக ஆர்வலர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

சமீபத்தில் தனது மகளின் பிறந்தநாளையும், திருமண நிச்சயதார்த்தத்தையும் ஒருசேர கொண்டாட விரும்பிய அந்த கோடீஸ்வரர், தனது செல்வவளத்தை மணமகன் வீட்டாருக்கு பறைசாற்றும்விதமாக இந்த கேக்குக்கு ஓர்டர் கொடுத்ததாக உறுதிப்படுத்த இயலாத தகவல்கள் குறிப்பிட்டுள்ளன.





# UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

## VACANCY

### POST OF CHIEF SECURITY OFFICER, GRADE II [ON CONTRACT BASIS]

Applications are invited by me up to 05.10.2015 from suitably qualified persons for the post of Chief Security Officer, Grade II (on contract basis).

## QUALIFICATIONS:

1. An Officer not below the rank of Assistant Superintendent of Police, Captain of the Army or an officer of equivalent rank in the other Armed Services.

OR

2. A Person who possesses a degree from a recognized University/ Higher Educational Institutions with not less than five (05) years experience in Security work.

OR

3. A holder of the post of Security Inspector, Grade I or above in the University Security Services and confirmed in the present post with not less than eight (08) years satisfactory service in those grades.

(**Note:** Retired Officers from the Police or other Armed Services may also apply)

**Salary Scale:** Rs.39,024.00 [fixed] per month.

**Selection:** By Structured Interview.

**Period of Service:** One Year

Applications should be on prescribed forms issued by the University. Application forms and particulars for the above post should be obtained from the Office of the Senior Assistant Registrar / Establishments [Non - Academic] of this University on a payment of Rs. 100/- for each application form at the People's Bank, University of Jaffna Branch or at the Shroff's counter of this University. Those who wish to obtain the forms and details by post are requested to send a Money Order / Postal Order to the value of Rs. 100/- drawn in favour of the Bursar of this University together with self addressed Rs. 10/- Stamped envelope of 23X10 c.m in size.

The envelope containing duly filled application form must bear **"Post of Chief Security Officer" Grade II (on contract basis)** on its top left hand corner and either hand delivered or sent under registered post to reach the office of the Registrar on or before 05.10.2015.

Applicants from Government Departments, State Corporations and Statutory Bodies should apply through the Heads of respective Institutions. Advance copies of applications may be sent in the first instance. However, no such applicant will be considered for appointment if the application routed through the Head of Department is not received.

Incomplete and illegible applications and applications that are received after the closing date will be rejected.

REGISTRAR,
University of Jaffna.

# அமெரிக்க அழகியாக ஜோர்ஜியா


ஜோர்ஜியா அழகியாக இருந்த பெட்டி கேன்ட்ரெல் அமெரிக்க அழகியாக முடிசூட்டப்பட்டார். அமெரிக்காவின் அட்லாண்டிக் நகரில் நடைபெற்ற இந்த போட்டிக்கான இறுதிச்சுற்றில் பங்கேற்ற 51 போட்டியாளர்களை பின்னுக்குத் தள்ளி இந்த பட்டத்தை வென்ற பெட்டி கேன்ட்ரெல்(21) வென்றுள்ளார்.

நியூ ஜெர்சி மாநிலத்தில் உள்ள அட்லாண்டிக் நகரின் போர்ட்வாக் ஹோலில் நடைபெற்ற இந்த போட்டி நாடு முழுவதும் தொலைக்காட்சிமூலமாக நேரிடையாக ஒளிபரப்பப்பட்டது. இறுதிச்சுற்றுக்கு தேர்வாகியிருந்த பெட்டி கேன்ட்ரெல், ஓபெரா பாட்டு பாடும் போட்டியில் தனது திறமையை வெளிப்படுத்தி அமெரிக்காவின் அழகியாக தேர்வானார்.

முன்னர் அமெரிக்க அழகியாக இருந்த கிரா கசான்ட்ஸேவ் அவருக்கு அழகு ராணிக்கான கிரீடத்தை சூட்டியபோது அரங்கத்தில் இருந்தவர்கள் கரவொலி எழுப்பி, பாராட்டு தெரிவித்தனர்.







- ஜோசப் கிருஷ்ணா -



# புதிய அதிவேகம்

இலங்கை கிரிக்கெட் அணியின் பயிற்றுனர் மாவன் அத்தப்பத்து தன் பதவியில் இருந்து விலகிக்கொண்டதன் பின், பயிற்றுனருக்கான சில பொறுப்புக்களை ஜெரோம் ஜயரட்ன ஏற்றுக்கொள்வார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

அடுத்த மாதம் மேற்கிந்தியத் தீவுகளுடனான கிரிக்கெட் தொடர் ஆரம்பிக்க உள்ளதைத் தொடர்ந்தே அவசரமாக இவர் நியமிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. இந்தியத் தீவுகள் அணி இரண்டு டெஸ்ட் போட்டிகள், மூன்று ஒரு நாள் போட்டிகள், இரண்டு இருபதுக்கு இருபது போட்டிகளில் இங்கு வந்து கலந்துகொள்வதாக இருக்கிறது. தற்போதைக்கு ஜெரோம் மே.இந்திய சுற்றுப் போட்டிக்காக மட்டும் நியமிக்கப்பட்டுள்ளார் என்றவாறாக செய்திகள் வருகின்றன. ஆனால் இதனைத் தொடர்ந்துவரும் நியூசிலாந்துக்கு எதிரான தொடர் அவ்வளவு இலகுவானதாக இருக்கப்போவதில்லை.

எனவே மே.இந்தியத் தொடருக்கும் நியூசிலாந்துத் தொடருக்கும் இடையில் இலங்கைக் கிரிக்கெட் அணிக்கு நிரந்தரமான பயிற்றுனர் ஒருவரை நியமிப்பதே இலங்கை கிரிக்கெட் சபையின் நோக்கமாக உள்ளது. ஆனால் நிரந்தர நியமன விடயங்கள் வெற்றியளிக்காத பட்சத்தில், ஜெரோம் தொடர்ந்தும் நியூசிலாந்துத் தொடருக்கான பயிற்சியாளர் பொறுப்பைத் தொடர்வார் என்று கூறப்படுகிறது. ஜெரோம் சிறந்ததொரு கிரிக்கெட் வீரராக அறியப்பட்டதோடு பயிற்றுனர் தொடர்பான பயிற்சிநெறிகளிலும் வெற்றிகண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் நீண்டகாலம் இலங்கைக் கிரிக்கெட் சபையுடன் இணைந்து பணியாற்றியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இலைமறைகாயாக இருந்த இவர் தற்போது வெளியே தெரிய ஆரம்பித்திருக்கிறார். ஜெரோம் தற்காலிகமாக இருந்தாலென்ன, தற்போதைக்கு ஒரு பலவீனமான இலங்கை அணியை பொறுப்பேற்கிறார்.

உண்மையில் இலங்கை அணி பலவீனமானதுதானா என்பது ஒரு கேள்விக் குறியே. நிறைந்த திறமைவாய்ந்த வீரர்களைக் கொண்ட அணி இலங்கை அணி. ஜெரோம் தனது அனுபவங்கள் ஊடாக உடல், மனத்தகுதியை இலங்கைக்கு ஏற்படுத்திக்கொடுப்பார் என்று நம்பலாம். இப்பொழுது இலங்கை அணிக்குத் தேவை சிறியதொரு தூண்டல்தான். பின்னர் அவர்கள் சுடர்விட்டு பிரகாசிப்பார்கள். இதனை ஜெரோம் செய்வார் என்று நம்பலாம்.

# கடும் நிபந்தனைகள்

அடுத்த இலங்கைக் கிரிக்கெட் அணியின் நிரந்தர பயிற்றுனர் யார் என்ற கேள்விக்கு, பதிலாக இரண்டு பெயர்கள் அடிபடுகின்றன. ஒன்று கிரஹம் போர்ட். மற்றையவர் இலங்கையரான சாத்திக ஹத்துருசிங்க. பங்களாதேஸ் அணியினர் தற்போதைய எழுச்சிக்குக் காரணமாக அமைந்தவர் அவர்களின் பயிற்றுனரான சாத்திக ஹத்துருசிங்க என்று கூறப்படுகிறது. முன்னதாக இலங்கை அணியுடன் இவர் தொடர்புபட்டு இருந்தாலும் சில மனக்கசப்புக்களால் இலங்கையை விட்டு வெளியேறியிருந்தார்.

ஆனால் தற்போது இலங்கை அணியின் பயிற்றுனராகத் தாம் வர தன் விருப்பத்தைத் தெரிவித்துள்ள இவர் இதற்காக சில நிபந்தனைகளை விதித்துள்ளனர். இந்த நிபந்தனைகள் முன்னர் ஏற்பட்ட மனக்கசப்பின் அனுபவங்கள் காரணமாக இருக்கலாம்.

முதலாவதாக தனக்கு மாதாந்த வேதனமாக 25000 அமெரிக்க டொலர்கள் வழங்கப்படவேண்டும் என்று கோரிக்கைவிடுத்துள்ளார். அதோடு இவருடன் கூடவே பங்களாதேஷில் இருந்த இலங்கையர்களான ருவன் கல்பகே (களத்தடுப்புப் பயிற்சியாளர்) மற்றும் மரியோ வில்வராயன் (உடல்தகுதிப் பொறுப்பாளர்) இருவரும் இதே பதவிகளில் தன்னுடன் இணைக்கப்பட வேண்டும் என்று கேட்டுள்ளார். தன்னை இரண்டு வருடங்களுக்குப் பயிற்றுனர் பொறுப்பில் இருந்து நீக்குவதில்லை என்ற உறுதிமொழியை பிரதம மந்திரியிடம் இருந்து பெற்றுத்தரவேண்டும்.

அதோடு முன்னைய கிரிக்கெட் செயலர் மீண்டும் கொண்டுவரப்படும் சாத்தியம் இருந்தால் தான் தொடரமாட்டேன் என்றும் கூறியுள்ளார். இவையெல்லாம் நிறைவேற்றப்பட்டால்தான் பயிற்றுனர் பொறுப்பை ஏற்றுக் கொண்டு எட்டே எட்டு மாதகாலத்தில் அணியில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்திக்காட்டுவேன் என்றும் கூறுகிறார் இவர். ஆனால் இதேவேளை இலங்கையின் மூத்த கிரிக்கெட் வீரர்கள் கருத்துக்கூறும்போது. அனுபவம் நிறையக்கொண்ட வெளிநாட்டு பயிற்றுனரே தேவை. அதுவே இலங்கை அணியை வளர்க்கும் என்று கூறியுள்ளனர்.

# வாழ்த்துக்கள்!




தாய்லாந்தில் நடைபெற்று முடிவடைந்த தாய்லாந்து பகிரங்க தடகள சம்பியன்ஷிப் போட்டிகளில் இலங்கை வீரர்கள் சிறப்பாகவே செய்துள்ளனர். இந்தப் போட்டிகள் தமஸாட் பல்கலைக்கழக மைதானத் திலேயே நடைபெற்றிருந்தன. இந்தப் போட்டிகளில் இந்து நில் ஹேரத் முன்னதாக 1500 மீற்றர் தங்கம் வென்றிருந்தார். தொடர்ந்து 800 மீற்றர் போட்டியிலும் தங்கம் வென்றுள்ளார். இதேவேளை 100 மீற்றர் ஆண்கள் குறுந்தூரப் போட்டியில் சஹான்ராஜபக்ச தங்கம் .வென்றுள்ளார். இதேவேளை நெத்திமித்துப் பாய்தல் போட்டியிலும் சாமல் குமாரசிறி தங்கம் வென்றுள்ளார். இவர் முன்னதாக ஆசியப் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. இதோடு 4X400 அஞ்சலோட்ட நிகழ்வில் வெள்ளிப் பதக்கம் வென்றமை குறிப்பிடத்தக்கது. இந்த அணியில் நிதுலா ஜயவர்த்தன, சமிக்க வீரவர்தன, ரவிந்து தீக்ஷனா, தருஷா தன்ஜய ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

இன்னொரு பதக்கத்தை 100 மீற்றர் மகளிர் ஓட்டப் பந்தயத்தில் சாணிக்கா துலக்ஷி பெற்றுக்கொண்டார். இது வெண்கலப் பதக்கமாக அமைந்தது.

இந்தவகையில் இலங்கை தடகளக் குழாம் ஆறு தங்கப் பதக்கங்கள், ஒரு வெள்ளிப் பதக்கம் ஒரு வெண்கலப் பதக்கம் என்பவற்றை வென்றுகொண்டது.

# கண்ணீர் வேளை




இங்கிலாந்து உதைபந்தாட்ட அணித்தலைவர் வெயின் ரூனி 45 வருடங்களின் பின் இங்கிலாந்தின் உதைபந்தாட்டச் சாதனையொன்றை முறியடித்துள்ளார். இதுவரையில் சர்வதேசத் தகுதியில் போடப்பட்ட அதிக கோல்கள் என்ற பெருமையை பொபி சார்ல்டன் தன்னகத்தே கொண்டிருந்தார்.

ஆனால் அண்மையில் Euro 2015 சர்வதேசப் போட்டியில் இங்கிலாந்து சுவிட்சர்லாந்தைச் சந்தித்து இருந்தது. இந்த ஆட்டத்தில் 2 - 0 என்று சுவிட்சர்லாந்தை வென்றிருந்தது. இதன்போது Euro 2015 இறுதிப்போட்டிகளுக்கு இங்கிலாந்து தகுதி பெற்றுவிட்டது. ஆனால் அட்டவணைக்கு இணங்க இங்கிலாந்து சென். மரினோவுடன் விளையாட வேண்டியிருந்தது.

அந்த ஆட்டத்தில் 6 - 0 என்று சென் மரினோவை இங்கிலாந்து துவம்சம் செய்திருந்தது. இந்த ஆட்டத்தின் 84 ஆவது நிமிடத்தில் ரூனி அடித்த கோல் அரை நூற்றாண்டுச் சாதனையைத் தகர்த்தது. ரூனி கண்ணீர்மல்கினார். நான் மிகவும் உணர்ச்சிவசப்பட்டேன். இது மிகப் பெருமைக்குரிய சாதனை என்று கொண்டாடியிருக்கிறார் வெயின் ரூனி.




Dr. சி.யமுனாநந்தா

# நீர் வெறுப்பு நோய்



நீர் வெறுப்பு நோய் எமது சமூகத்தில் உருப்பெருக்கம் அடையும் உயிர்க்கொல்லியாக மாறுபட்ட பரிமாணத்தில் உருவெடுத்துள்ளது. பொதுவான சுகநலப் பிரச்சினையான நாய், பூனை போன்ற செல்லப்பிராணிகளின் தீண்டல்களின் பாதிப்பினை இக்கட்டுரை விளங்குகின்றது. இந்நோய் தொடர்பான விழிப்புணர்வினை மக்கள் அறியவேண்டியது அவசியமாகிறது.





05. நோய் தொற்றுடையது எனச் சந்தேகப்படும் நாய்களை அழித்தல்.

06. தொடர்ச்சியாக அவதானித்தலும் நெறிப்படுத்தலினையும் சுகாதாரத் திணைக்களமும், கால்நடை வைத்தியத் திணைக்களமும் உள்ளூராட்சியும் இணைந்து செயற்படுத்தல் வேண்டும்.

**12. நாய்க்கடியினைத் தவிர்க்கச் செய்யவேண்டியவை.**

01. நாய் உணவு உண்ணும்போதும், நித்திரை செய்யும்போதும், குட்டி களுடன் உள்ளபோதும் இடையூறு செய்யக்கூடாது. திடுக்கிட்டு அல்லது பயத்தினால் நாய் கடிக்கலாம். தடி களையோ, கற்களையோ நாய்மீது எறியக்கூடாது.

02. கட்டப்பட்டு அல்லது வேலியின் பின்னால் இருக்கும் நாயின் அருகில் செல்லக்கூடாது.

03. நாய்க்குட்டிகளுக்கு அருகில் செல்லக்கூடாது. நாய் தனது குட்டிகளைக் காக்க கடிக்கலாம்.

04. நாய்களின் அருகே ஓடவோ, அன்றேல் விரைவாக நகரவோ கூடாது. ஓடும் பொருட்களையே நாய் இலகுவாகப் பார்க்கும்.

05. நாயின் கண்களை நேரடியாகப் பார்க்கவேண்டாம். பார்த்தால் பயத்தில் கடிக்கும்.

06. ஆத்திரத்துடன் ஒரு நாய் வந்தால் உறைந்து நிலத்தை மட்டும் பார்க்கவும், மெதுவாகப் பின் செல்லுதல் வேண்டும். திரும்பி ஓடுதல் கூடாது.

07. நாய்க்கு அடிக்கவோ, உதைக்கவோ கூடாது.

08. யாருடைய வீட்டினுள்ளும் அல்லது வளவினுள்ளும் கண்டபடி செல்லக்கூடாது.

நாய் துரத்தும்போது விழுந்தால் முத்தை நிலத்தைப் பார்த்தபடி காதைக் கைகளினால் பொத்துதல் வேண்டும். கண், காது, வாய், முகம் பகுதியில் கடித்தால் கிருமி விரைவாக மூளைக்குச் சென்றுவிடும். எனவே இப்பகுதிகளில் காயம் ஏற்படாது இருக்க அவதானமாக இருத்தல் வேண்டும்.

**13. நாய், பூனைகளைப் பராமரித்தல்**

01. நாய்களுக்கு விலங்கின் விசர்த்தடுப்பு மருந்தினை கால்நடை வைத்தியர்மூலமோ, பொறுப்பு சுகாதார அதிகாரிமூலமோ அளித்தல்வேண்டும். நாய்க்குட்டிகள் பிறந்து ஆறு வாரத்தில் முதாவது விலங்கின் விசர்நோய் தடுப்பு மருந்தும் ஆறுமாத வயதில் இரண்டாவது விலங்கின் விசர் தடுப்பு வருடத்திற்கு மருந்தும் பின்னால் வருடத்திற்கு ஒரு தடவையும் விலங்கின் விசர் தடுப்பு மருந்தும் ஏற்றுதல் வேண்டும்.

02. வீட்டில் வளர்க்கும் நாய், பூனைகள், அளவுக்கதிகமாகப் பெருகி, கண்ட இடங்களில் விடாது, கருத்தடை யினைக் கால்நடை வைத்தியரின் உதவியுடன் செய்தல் வேண்டும்.

03. நோய் சந்தேகமுடைய நாய்கள் தொடர்பில் அவதானமாக இருத்தல் வேண்டும்.

04. நாய்க்குட்டிகளைப் பொது இடங்களில் பொறுப்பற்ற விதத்தில் விடக் கூடாது.

05. நாய் வளர்ப்போர் நாயினைக் கட்டி வளர்த்து அல்லது கூட்டில் வளர்த்து, தெருக்களில் திரியவிடாது ஏனையவர்களைக் கடிக்காது பாதுகாக்கலாம்.

06. வளர்ப்பு நாய்க்குரிய வேலை களை வீட்டில் ஒருவர் மட்டும் செய்தல் நல்லது.

07. நாய்களை உள்ளூராட்சியில் பதிவு செய்தல் அவசியம்.

08. நாய்கடிக்கும் கவனம் என்ற அறிவுறுத்தல் அவசியம்.

**14. நீர் வெறுப்பு நோய் தொடர்பான துணுக்குகள்**

* காயத்தினை மூடிக்கட்டுவதிலும் காயத்திற்கு தையல் போடுதல் தவிர்க்கப்படல் வேண்டும். தேவைப் படின் RIG இணை காயத்தினைச் சூழ உட்செலுத்திய பின்பே தையல் இடவேண்டும். அதன்பின்னரே ARV தொடரவேண்டும்.

* RIG அல்லது யுசுஏ பிட்டப் பகுதியில் போடப்படுவதற்கு ஏனெனில் அவை இதனால் முழுமையாகப் பயன்படல் குறைவு. (தொடரும்...)



# சித்த மருத்துவ அழகுக் குறிப்புகள்

* தேங்காய் எண்ணெயில் மஞ்சள்தூளை போட்டுக் குழைத்து உடம்பிற்கு தடவி, பயத்தமாவை தேய்த்துக் குளித்தால் தோல் பளபளப்பாகவும் மிருதுவாகவும் இருக்கும்.

* ஒரேஞ்சு பழத்தை இரண்டாக வெட்டி முகத்தில் தேய்த்து. பத்து நிமிடம் கழித்து சோப்பு போட்டு கழுவவேண்டும். தினம் இவ்வாறு செய்துவந்தால் முகம் பளபளப்பாகவும், இளமையுடனும் இருக்கும்

*நகங்களை வெட்டும்முன் எண்ணெயை தடவிவிட்டு, சிறிதுநேரம் கழித்து நகத்தை வெட்டினால், விரும்பும் வடிவத்திலும், அழகாகவும் வெட்ட இயலும்.

*கூந்தலில் எண்ணெய் பசை அதிகமாக இருந்தால், கோழி முட்டையில் கொஞ்சம் சீனியை கலந்து தலையில் லேசாக தடவிக்கொண்டு பிறகு தலைக்கு ஊற்றவேண்டும். இதனால் எண்ணெய் பசை நீங்கி முடி அழகுபெறும்.

* தேநீரில் வடிகட்டியபின், மிஞ்சும் தேயிலைத் தூளில் எலுமிச்சை சாறை பிழிந்து, தலையில் தேய்த்துக் குளித்தால், தலைமுடி பளபளப்பாகும்.

*வேப்பிலை, புதினா, சிறிது மருதாணி மற்றும் குப்பைமேனி இலைகளை காயவைத்து, தூளாக்கி வைத்துக்கொள்ளவும். இதில் சிறிது எடுத்து, பாலில் குழைத்து, முகத்தில் பூசி, 20 நிமிடம் ஊற வைத்து குளித்தால், முகம் வோடிக்குரு வராமல், வெளியில் கறுத்துப்போகாமல் இருக்கும்.

*கை, கால் முட்டிகளில் கறுப்பு நிறம் அதிகமாக இருந்தால், தொடர்ந்து அந்த இடத்தில் எலுமிச்சம்பழ சாற்றை தேய்த்து சோப்புபோட்டு குளிக்கவேண்டும் நாளடைவில் கறுப்பு நிறம் போய்விடும். தோல் வறண்டும், சுருக்கமும் இருந்தால் ஒலிவ் ஓயிலைப் பூசி, சிறிதுநேரம் ஊறவைத்து, சோப்புபோட்டு குளிக்கவேண்டும்.

*இரவுபடுக்கும்முன், புதினா சாறு இரண்டு தேக்கரண்டி, அரை மூடி எலுமிச்சம்பழ சாறு ஆகியவற்றுடன் பயிற்றம்பருப்பு மாவை கலந்து முகத்தில் தடவிக்கொண்டு பத்து நிமிடம் ஊறியபிறகு ஐஸ் ஒத்தடம் கொடுக்க முகம் சுத்தமாகும். பருவினால் ஏற்பட்ட தழும்பும் மறையும்.

*அப்பிள் பழத்தை சின்னச் சின்ன துண்டுகளாக வெட்டி முகத்தில் தடவினால் சருமத்தில் உள்ள எண்ணைப் பசை குறையும்.

*முகத்தில் உள்ள முடிகளை அகற்ற, முட்டையின் வெள்ளை கரு, சீனி, சோளமா அனைத்தையும் ஒன்றாகக் கலந்து பசைபோல் ஆனதும் முகத்தில் தடவவும். காய்ந்தவுடன் மெதுவாக பிய்த்து எடுத்தால் முட்டையுடன் முடியும் எளிதில் வரும்.

*மோரை முகத்தில் தடவி 15 நிமிடம் கழித்து முகத்தைக் கழுவினால் வறண்ட சருமம் புதுப்பொலிவடையும்.

*பழுத்த வாழைப்பழத்தை நன்றாகப் பிசைந்து முகத்தில் தடவி, 20 நிமிடம் கழித்து கழுவினால், சருமம் மிகவும் மிருதுவாகும்.

*ஒரேஞ்சு பழத்தோலை வெயிலில் காயவைத்து பொடிசெய்து பாலுடன் கலந்து சருமத்தில் தடவி அரைமணி நேரம் கழித்து கழுவிவந்தால், வெயிலில் ஏற்பட்ட கருமை மறையும்.

*பால், கடலை மா, மஞ்சள், சந்தனம், அனைத்தையும் கலந்து முகத்தில் தடவிக் குளித்தால் சருமம் அழகாகவும், பளபளப்பாகவும் மாறும்.

*தேங்காய்ப் பாலுடன் ஒரு கரண்டி தேன் கலந்து முகத்தில் ஐந்து நிமிடம் மசாஜ் செய்தால் சோர்வடைந்து சருமம் புத்துணர்ச்சி பெறும்.

*தக்காளி பழத்தை இரண்டாக நறுக்கி முகத்தில் தடவினால் சருமத்தில் உள்ள எண்ணெய்ப் பசை குறையும்.

*தோல் வறண்டும், சுருக்கமும் இருந்தால் ஒலிவ் ஓயிலைப் பூசி, சிறிது நேரம் ஊறவைத்து, சோப்புபோட்டு குளிக்கவேண்டும்.

## மண் பானை சமையல் உடலுக்கு ஆரோக்கியம்

மண்பானைகள் பல நூற்றாண்டு களாக ஆரோக்கிய சமையலுக்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றன. மண்பானைகளில் சமைக்கும் போது உணவின்மீது வெப்பம் சீராக, மெதுவாக பரவுகிறது. இது உணவை சரியான முறையில் சமைக்க உதவுகிறது.

இதனால் மண் பானைகளில் சமைக்கும் உணவு ஆவியில் வேக வைத்த உணவைப்போன்ற தன்மையை பெறுகிறது. இது உடல்நலனுக்கு உகந்தது. இதனால் உணவில் உள்ள சத்துகள் பாதுகாக்கப்பட்டு, எளிதில் செரிமானமாகும் தரமான உணவு கிடைக்கிறது.



மண் பாத்திரங்கள் உணவில் உள்ள அமிலத்தன்மையை சமப்படுத் தும் தன்மை கொண்டவை. உப்பு, புளிப்பு சுவையுடைய உணவுகள் சமைக்கும்போது, மண்பானை தீங்கான விளைவுகள் எதையும் ஏற்படுத்துவதில்லை. ஆனால் உலோக பாத்திரங்கள் உணவுடன் வினைபுரியும் நிலை உள்ளது. மண்பானையில் சமைக்கும்போது, அதிக எண்ணெய் பயன்படுத்தவும் தேவையில்லை.

# முள்

தமிழ்

அருந்ததிக்கு, அத்தனைநேரம் இருந்த குதூகலம் கொஞ்சம் கொஞ்சமாக வடிய ஆரம்பித்தது. அம்மா சொன்னதைக் கேட்காமல் இந்த இரவில் தனியாகப் பயணிக்க நினைத்தது தவறோ? வீட்டில் தங்கிவிட்டு நாளை பகலில் கிளம்பியிருக்கவேண்டுமோ?

“சொன்னாக் கேளுடி, நாளைக்குப் போகலாம். காலம் ரொம்பக் கெட்டுக் கெடக்கு. உன் வீட்டுக்காரர்கிட்ட வேணும்னா நான் பேசறேன்”

“ம்மா... நான் என்ன சின்னக் குழந்தையா? சின்ன வயசுலதான் “அங்க போகாத, இங்க போகாத, இருட்டுறதுக் குள்ள வீடுவந்து சேரு”னு அதிகாரம் பண்ணிட்டே இருப்ப... இப்பவுமா? எனக்கும் கல்யாணம் ஆயிடுச்சு”

“ம்ம்ம்... உனக்குக் கல்யாணமே ஆனாலும், நீ பேரன் பேத்தியே எடுத்தாலும் எங்களுக்கு நீ குழந்தை தான்” என்று கோபமாக அம்மா சொன்னாள்.

வழக்கமாக யாழ்ப்பாணத்துக்கு வந்தால் திட்டமிட்டபடி கொழும்புக்கு திரும்பியதே இல்லை. இரண்டு நாட்களாவது கூடுதலாகத் தங்குவது வழக்கம்தான். அம்மா மடி எத்தனை வயதானாலும் சுகம் இல்லையா?

“பிக்-அப் பண்ண நான் வரணுமா, இல்ல நீயே ஆட்டோ பிடிச்சு வந்துடு வியா?” என்று கதிர் கேட்டதற்கும்கூட...

“ஒண்ணும் வேணாம். நானே ஆட்டோல வந்துடுவேன்” என்று அமர்த்தலாகச் சொல்லிவிட்டேன்.

தனியாக இந்த இரவில் பயணிக்க ஏன் இத்தனை ஆர்வமாக இருந்தேன் என ஆச்சரியமாக இருந்தது. இரவு எப்போதும் என்னை வசீகரிக்கக்கூடியதாகவே இருந் திருக்கிறது. இரவில்தான் என் புலன்கள் அனைத்தும் விழித்துக்கொள்வதை நான் உணர்ந்திருக்கிறேன். இரவு எனக்கே எனக்கானது. அப்போது நான் யாராகவும் இல்லாமல் நானாக மட்டுமே இருப்பேன்.

கல்யாணத்துக்கு முன்பான இரவு களை நான் எத்தனை கொண்டாடி இருக்கிறேன். இரவு என்பது எனக்கொரு விழா. அப்பா - அம்மா உறங்கச் சென்றதும் அறையைத் தாழிட்டுவிட்டு பாடல்கள் கேட்பேன், புத்தகம் வாசிப்பேன், படம் வரைவேன், அலங்காரம் செய்துகொள்வேன். தனியாக எனக்கு மட்டும் கேட்குமாறு பொய்க் குரலில் பாடுவேன். அல்லது இது எதுவும் செய்யாமல் ஜன்னலின் வழியாக நெடுநேரம் அமர்ந்து இரவை உற்று வெறித்துக்கொண்டிருப்பேன். அந்த நேரத்தில்தான் எனக்குத் தோன்றியிருக்கிறது “என்னால் இரவை வேடிக்கை மட்டும்தானே பார்க்க முடிகிறது. அதற்குள் இறங்கிச் செல்ல முடிவதில்லையே” என்று. பின் அது ஒரு ரகசிய ஏக்கமாகவே மாறிவிட்டிருந்தது.

கல்யாணமான சில வாரங்களில் “கதிர்... என்னை வெளியில கூட்டிட்டுப் போறீங்களா?” என்று இரவு 11 மணிக்கு ஜோராக டிரெஸ் செய்துகொண்டு கேட்டதும் அவன் விநோதமாகப் பார்த்தான்.

“எங்கம்மா போறது?”

“பீச்...”

“பொலிஸ் துரத்தி அடிக்கும்.”

“ஏன்?”

“நாம பலான பலான பார்ட்டினு நினைப்பாங்க.”

“என்னது? நாம புருஷன்-பொண்டாட்டிதான?!”


“அது உனக்கும் எனக்கும் தெரியும். ஆனா, நம்ம கல்யாணத்துக்கு அந்த பொலிஸ்காரர் வரலியே” என்பான்.

ஆனாலும் பப், நண்பர்கள் வீடு என்று அழைத்துச் செல்வான்தான். அது எனக்கு அத்தனை உற்சாகத்தைத் தரவில்லை. இந்தச் சுவர்களுக்கு நடுவில் இருந்து வேறொரு சுவருக்கு நடுவே செல்வது போலவே இருந்தது. இந்தக் கூடாரத்தில் இருந்து மற்றொரு கூடாரத்துக்கு வெட்ட வெளி இரவு, வாசலில் ஏங்கி நின்று அழைத்துக்கொண்டே இருந்தது. என்னால் முடிந்தது எல்லாம் சில இரவுகளில் மொட்டைமாடியில் சென்று உலாவுவது தான்.

“மோகினிப் பிசாசு” என்பான் கதிர்.

ஆட்டோ பிடித்து பஸ் ஸ்டாண்ட் வந்ததும் கொழும்பு செல்லும் பஸ்ஸைத் தேடிப்பிடித்து ஏறி அமர, 20 நிமிடங்கள் ஆனது. உள்ளே ஏறும்போதே கண்டக்டர் ஏற இறங்கப் பார்த்தார். ஒருவேளை ஊதா நிறத்தில் சமிக்கி வேலைப்பாடுகள் செய்த





பளபள புடைவை காரணமாக இருக்கும். அதுவேதான் காரணமென பேருந்தில் ஏறி யதும் புரிந்தது. பெரும்பாலும் பேருந்தில் இருந்த எல்லோருடைய கண்களும் என் மீது ஒரு நொடி நிலைத்து விலகியது. ஏதேனும் சௌகரியமான உடை அணிந்து வந்திருக்கலாம். ஆனால், அப்படி ஒன்று இருக்கிறதா என்ன? உட்காருவதற்கு இடம் தேடினேன்.

இந்த உலகம் ஆண்களால் மட்டுமே நிரம்பியதுபோல ஒரு தோற்றம். எல்லா இருக்கைகளையும் ஆண்களே ஆக்கிரமித்து இருந்தார்கள். டீன் பருவத்தில் ஒரே ஒரு பெண் மட்டும் தென்பட்டாள். அவளுக்கு அருகில் அவளது அப்பாவைப்போல ஒரு மனிதர் இருந்தார். அவர்களுக்கு முன்னும் பின்னும் இருக்கைகள் காலியாக இல்லை. கண்களால் மெள்ளத் துழாவி டிரைவர் இருக்கையில் இருந்து மூன்றாவது இருக்கை காலியாக இருக்கக் கண்டு, சென்று அதில் அமர்ந்தேன்.

எனக்கு என்னவோ பதற்றமாக இருந்தது. ஏதோ ஓர் அசௌகரியம். இந்த நாள் வழக்கமான ஒன்றல்ல. ஏதோ வேறு பாடு இருக்கிறது. பையை முன்சீட்டின் அடியில் வைத்துவிட்டு அமர்ந்தேன். நெருங்கமுடியாத தைரியமான ஒரு பெருமாட்டியைப் போல தோற்றமளிக்க விரும்பித் தோற்றேன். இன்னமும் பரபரப்பு அடங்கவில்லை.

பேருந்து மெல்லக் கிளம்பியது. கண்ணாடி ஜன்னலைத் திறக்கமுயன்றேன். இறுக்கமாக இருந்தது. எவ்வளவு முயற்சித்தும் திறக்கமுடியவில்லை. மூச்சு முட்டுவதுபோல இருந்தது. கண்டக்டர் இங்கும் அங்கும் டிக்கெட் தருவதில் முனைப்பாக இருந்தாலும்கூட, நான் ஜன்னலைத் திறக்கச் சிரமப்படுவதை ஓரக்கண்ணால் பார்த்தும் தன்பாட்டுக்கு நகர்ந்துகொண்டிருந்தார். எரிச்சலாக இருந்தது. யாரிடமாவது உதவிகேட்கவும் தயக்கம். “இல்லை... நான் பலவீனமானவள் அல்ல. இன்னும் கொஞ்சம் முயற்சித்தால் என்னால் திறக்கமுடியும்.

“எக்ஸ்க்யூஸ் மீ...” என்று மிக அருகே, அநேகமாக காதுகளுக்குள் ஒரு குரல். பின் பிடரியில் சூடான மூச்சு. நாசி தொட்டுச்செல்லும் வியர்வை வாசனை. திடுக்கிட்டுத் திரும்பியதும் அவன் முகம் மிகமிக அருகே தெரிந்தது. வழுக்கைத் தலை, முன் தொப்பை, இன் செய்யப்பட்ட சட்டை, கண்ணாடி... என இவற்றை வைத்து தயங்காமல் வங்கி அதிகாரி என்றோ பேராசிரியர் என்றோ கணிக்கலாம்.

“ரொம்ப நேரமாச் சிரமப்படுறீங்க. நான் ஹெல்ப் பண்ணட்டுமா?” என்று பதிலை எதிர்பார்க்காமல் சர்ரென இழுத்ததில் ஜன்னல் திறந்துகொண்டு காற்று முகத்தில் சிலீரென அறைந்தது. வெட்கமாக இருந்தது.

“தேங்க்ஸ்ங்க” என்றேன்.

“அண்ணா” அல்லது “அங்கிள்” எதைச் சேர்த்துச் சொல்வதென குழப்பமாக இருந்தது.

கண்டக்டர் அருகில் வந்து “யாழ்ப்பாணமா?” என்றார்.

“ஆமா...” “ஒண்ணா?” என்றார்.

இதென்ன கேள்வி நான் ஒருத்திதானே இருக்கிறேன். நான் ஏன் இப்படி எரிச்சலடைகிறேன். இதுபோல எல்லோரிடமும் கேட்டுப் பழக்கமாக இருக்கும். டிக்கெட்டை வாங்கி கைப்பையில் வைத்ததும் ஐ-பாடை எடுத்து ஹெட்போனைக் காதுகளுக்குள் திணித்தேன். பாடல் மெள்ளக் கசியத் தொடங்கியதும் மனது இறகாகத் தொடங்கியது.

ஜன்னலின் வழியே இருண்ட வானை நோக்கினேன். நிலா. நான் வீட்டில் இருந்தோ மொட்டைமாடியில் இருந்தோ பார்த்த நிலா அல்ல. இது முற்றிலும் வேறானது. நிலா ஒரு பட்டமாகி அதன் நூல் எனது விரல்களில் இருப்பதுபோல பேருந்து செல்லச் செல்ல என்னுடனே ஓடிவரத் தொடங்கியது. ஆஹா..! இதைத்தானே ஆசைப்பட்டேன். கண்களை மூடி பாடல்களுக்குள் லயிக்கத் தொடங்கினேன். இந்த இரவு மறக்கமுடியாத ஒன்றாக இருக்கப்போகிறது. மறுபடியும் குதூகலம் வந்து தொற்றிக்கொண்டது.

பேருந்து குலுங்கி நிற்பதுபோல இருந்ததும் கண்களைத் திறந்தேன். யாரோ கை காட்டி நிறுத்தி இருக்கிறார்கள்போலும். ஒரு பெண் பேருந்தினுள் ஏறினாள். தன்னந்தனியாக. என்னைப் போல. என்னைப் போலவா? இந்த அத்துவானக் காட்டில் தனியாகக் கை காட்டி பேருந்தை நிறுத்துகிறாளா?! இந்த அகாலநேரத்தில் என்ன துணிச்சல் இவளுக்கு?! அவள் நேராக என் அருகே வந்துதான் அமரவேண்டும். வேறு வழி இல்லை. ஏனோ எனக்கு அது பிடிக்கவில்லை. அவளைப் பிடிக்கவில்லை. முதல் பார்வையில் காரணமே இன்றி சிலரைப் பிடித்தோ, பிடிக்காமலோபோகும் இல்லையா? அதுபோல அல்லது அவள் அணிந்திருக்கும் இந்த ஆடை அவள் வயதுக்கு சற்றும் பொருந்தாமல் இருக்கிறது. அது பிடிக்கவில்லை. அதைப் பற்றி எனக்கென்ன? என்ன இது மேல்தட்டு ஆணவம்? இதுதான் நானா? இந்த முழு இருக்கையையும் நான் சொந்தம் கொண்டாடமுடியாது அல்லவா. அருகில் வந்து அவள் அமர்ந்ததும் மற்றவர்கள் எனக்கு செய்ததைப்போல நானும் அவளை நோட்டமிடத் தொடங்கினேன். நடுத்தர வயதுப் பெண்மணி போல இருந்தாள். கொஞ்சம் மலிவான ஆனால், பளிச்சென்ற நிறத்தில் சேலை உடுத்தியிருந்தாள். அது அவளது நிறத்துக்கு சற்றும் பொருந்தாமல் இருந்தது. அவளது தோற்றத்தை வைத்து அவளை வேறு எதுவும் கணிக்க முடியவில்லை.

கண்டக்டர் விளக்கை அணைத்ததும் பேருந்தின் உள்ளே செல்போனின் மங்கிய விளக்குகள் ஒளிர்ந்து கொண்டிருந்தன. அந்த டீன் ஏஜ் பெண் தனது இரு கைகளாலும் அநாயசமாக செல்போனை நோண்டிக்கொண்டிருந்தாள். அவளது முகம் யாருடனோ பேசிக் கொண்டிருப்பதைப் போன்றதொரு பாவனையில் இருந்தது. அவளது அப்பா ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தார்.

திடீரென இத்தனை நேரமாகியும் ஏன் கதிரிடம் இருந்தோ, அம்மாவிடம் இருந்தோ ஓர் அழைப்புகூட வரவில்லை என்பது நினைவில் வந்தது. கைப்பை யைத் திறந்து மொபைலை எடுத்தேன். நெட்வேர்க் சுத்தமாக இல்லை. பேட்டரியும் சிவப்பாக (அபாயம் என்பது போல) எரிந்தது. இன்னும் 10 நிமிடங்கள்கூட தாங்காது.

“சே..! சார்ஜ் போட மறந்துவிட்டேன்” - “தட்” என்று அனிச்சையாக முன் நெற்றியில் அடித்துக்கொண்டேன். பக்கத்தில் அமர்ந்திருந்த அவள் உணர்ச்சியற்ற பாவனையில் என்னைத் திரும்பிப் பார்த்து பின் தலையைக் குனிந்துகொண்டாள். வழியில் ஏதேனும் விபத்து நடந்தால், யாருக்கு எப்படித் தகவல் சொல்வது? பேருந்தில் ஏதேனும் கோளாறு ஏற்பட்டால், என்ன செய்வது? வேறு பேருந்து பிடிக்கவேண்டும். அது-வரை ஒன்றும் நேர்ந்துவிடாதே. இந்தப் பயணம் பாதுகாப்பானதுதானா?

கால்களின் வழியாகக் குருதி வடியும் படங்களும் முள்புதரின் உள்ளே கிழிந்த ஆடையுடன் கிடைக்கப்பெற்ற பெண் சடலத்தைப் பற்றிய செய்திகளும் நினைவில்வந்து, மேலும் பீதியை அதிகரித்தது. எங்கோ வாசித்த நினைவு. இதுதான் நோமோ..போபியாவா? என்ன நான் இப்படிக் கோழையாக இருக்கிறேன். நான் உறுதியான பெண் இல்லையா? மொபைல் இல்லையென்றால் உலகுடனான ஒட்டுமொத்தத் தொடர்பும் அற்றுப்போகுமா என்ன? ஏன் காரணமே இல்லாமல் மனம் இப்படிச் சஞ்சலப் படுகிறது? அம்மாவைத்தான் குற்றம் சொல்லவேண்டும். பொத்திப் பொத்தி வளர்த்தது அவள் தவறு. இனியேனும் தனியாக இப்படியான பயணங்களை மேற்கொள்ளவேண்டும். நான் மனதிடம் உள்ளவள். பாரதியைப் படிக்கிறவள். லேசாகப் புன்னகைத்துக் கொண்டு மறுபடியும் இருண்டவானை ஆராயத் தொடங்கினேன்.

உறங்குவதற்கு விருப்பம் இல்லை. இந்த இரவின் ஒவ்வொரு நொடியும் மிக முக்கியமானது. இதை நான் இழக்கத் தயாராக இல்லை என்று எண்ணினாலும்கூட, கண்கள் சுழற்ற ஆரம்பித்தன. மெள்ளக் குளிர் அதிகரிக்கத் தொடங்கியதும் முந்தானையை முதுகைச் சுற்றிப் போத்திக்கொண்டு உறங்க ஆரம்பித்தேன். எவ்வளவுநேரம் ஆனது என்று தெரியவில்லை.

(21 ஆம் பக்கம் பார்க்க)

# விவிலிய காலத்தையும் மீறிய அகதிகள்... காணாமல் போகுமா...? கத்தோலிக்க தேசங்கள்...





கோவை.நந்தன்

துருக்கிய கடற்கரையில் ஒதுங்கிய மூன்று வயது சிரிய சிறுவனின் நிலை குலையவைக்கும் புகைப்படங்கள் தான் அண்மைய உலகை ஆட்டிப்படைத்துக் கொண்டிருக்கும் அவலம். அலன் குர்தி என்ற அந்த மழலையின் குடும்பம். ஏனைய நூற்றாயிரக்கணக்கானவர்களைப் போலவே சிரியாவின் கோபானி நகரிலிருந்து தப்பிப்பிழைத்து வந்திருந்தது.

இஸ்லாமிய அரசு எனப்படும் ஐ.எஸ்.ஐ.எஸ்(ISIS) இன் ஒரு நீடித்த பயங்கரவாத முற்றுகை. அமெரிக்காவின் கடுமையான விமானக் குண்டுவீச்சுக்கள் என்பனவே அந்த வடக்கு சிரிய நகரத்தை மட்டுமல்ல. ஒட்டுமொத்த சிரியாவையே சுடுகாடாக்கி அழித்து நாசமாக்கிக்கொண்டிருக்கிறது. அந்த அவலங்களிலிருந்து தம்மைக் காக்க கிரீஸ் நாட்டிற்கும் அங்கிருந்து ஏனைய ஐரோப்பிய நாடுகளுக்கும் தப்பிச்செல்லும் ஒரு முயற்சியில் மூழ்கிய இலட்சக்கணக்கானவர்களில் இச்சிறுவனின் குடும்பமும் ஒன்று. முன்னதாக பிரிட்டிஸ், கொலம்பியாவில் வாழும் அச்சிறுவனின் இரத்த உறவினர்கள், அலென் குடும்பத்திற்கு தஞ்சம் வழங்குமாறுகோரிய ஒரு விண்ணப்பத்தை கனடாவின் ஆளும் பழமைவாத அரசாங்கம் நிராகரித்து இருந்தது. இதனை அடுத்து கிரீஸிற்குத் தப்பிவரும் முயற்சியில் இறங்கிய அலெனின் குடும்பம் பயணித்த படகு நூற்றுக்கணக்கான அகதிகளுடன் மத்தியதரைக்கடலில் கவிழ்ந்ததில் இச்சிறுவனின் தந்தையைத் தவிர ஏனைய அனைவரையுமே கடல் மூழ்கடித்துவிட்டது.

தப்பிப் பிழைக்க மத்திய தரைக்கடலைக் கடக்கும் முயற்சியில் உயிரிழக்கும். காற்று வெளியேற முடியாத லொறிகளினுள் அடைக்கப்பட்டு மூச்சுமுட்டி உயிரிழந்து கொண்டிருக்கும் பல ஆயிரக்கணக்கான மரணங்கள் சிரியாவில் மட்டுமல்ல ஆப்கானிஸ்தான். சூடான்.லிபியா போன்ற நாடுகளில் ஏகாதிபத்தியங்கள் மேற்கொள்ளும் ஆக்கிரமிப்புகளையே பறைசாற்றி நிற்கின்றன.

இந்த தொடர் ஆக்கிரமிப்புகள். இதனூடான ISIS இன் வளர்ச்சி ஆகியவையே ஆரம்பத்தில் விவிலிய காலத்திற்கும். 2ஆம் உலகப்போர் காலத்திற்கும் பின்னர் வரலாறு காணாத அகதிகளை ஐரோப்பாவை நோக்கி படையெடுக்க வைத்திருக்கிறது. ஐரோப்பாவுக்குள் அகதிகளாக நுழைந்த மற்றும் நுழைவதற்கு எல்லைகளில் காத்திருப்போரின் எண்ணிக்கை 5 இலட்சத்தையும் தாண்டிவிட்டதாக சொல்லப்படுகிறது. எரித்ரியா, டார்பர். சோமாலியா. நைஜீரியா ஆகிய நாடுகளில் இருந்தும் மக்கள் கூட்டம் கூட்டமாக வந்து குவிந்துகொண்டிருப்பதாக ஐரோப்பிய அரசுகள் கவலை வெளியிடுகின்றன. இதை எப்படி சமாளிப்பது என்பது தொடர்பில் ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் திணறிக் கொண்டிருக்க அனைத்திற்கும் சூத்திரதாரியான அமெரிக்க அரசும், அரசியல்வாதிகளும் ஏன் அமெரிக்க ஊடகங்கள்கூட மௌனம் காக்கின்றன.

இந்த அகதிகளுக்காக ஜெர்மனி. சுவீடன் ஆகிய இரு நாடுகளும் கதவுகளைத் திறந்து வைக்க. ஹங்கேரி தனது எல்லையில் வேலி அமைத்துக்கொண்டிருக்கிறது. கிறிஸ்தவர்களை மட்டும் அனுமதிக்கிறோம் என்று ஸ்லோவேகியாவும் 24.000 பேரை மட்டுமே பொறுப்பேற்று காப்பாற்றமுடியும் என்று பிரான்ஸ் அரசும் அறிவித்துள்ளன. பிரித்தானிய பிரதமர் டேவிட் கமரூன். தாம் 2ஆயிரம் அகதிகளை சிரியாவில் இருந்து நேரடியாக அழைத்து வரப்போவதாக நாட்டாண்மை அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

அடைக்கலம் தேடிவருவோர் கடலில் மூழ்கி இறப்பதும்கூட ஓர் உயிர்மீதான தாக்குதல்தான் என்று குறிப்பிட்டுள்ள போப்பாண்டவர், ஐரோப்பாவில் உள்ள ஒவ்வொரு கத்தோலிக்க தேவாலயமும் இரண்டு குடும்பங்களை ஏற்றுப் பராமரிக்க வேண்டும் என்றும் கூறியுள்ளார். எடுத்துக்காட்டாக அவரது வத்திக்கான் தேவாலயத்தில் இரண்டு குடும்பங்கள் தங்கவைக்கப்பட்டுள்ளன. ஐரோப்பா முழுவதிலும் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட கத்தோலிக்க தேவால்யங்கள் உள்ளன. என்பதும் இத்தாலியில் மட்டுமே சுமார் 25.000 உள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. அகன்ற இஸ்லாமிய தேசம் எனப்படும் ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாதிகள். அகதிகள் என்கிற பெயரில் நுழைந்து. தங்களது தேசத்தினுள் தாக்குதல்களில் ஈடுபடக் கூடும் என இங்கிலாந்து. பிரான்ஸ் போன்ற நாடுகள் அஞ்சுவதாகவும் கூறப்படுகிறது. விதைத்தவர்கள் அறுவடையைப் பற்றி சிந்திப்பார்கள்தானே.

இந்த அகதிகளில் பெரும்பாலோர் மத்திய தரைக் கடல் வழியாக முதலில் சென்றடையும் நாடுகளான இத்தாலியும் கிரேக்கமும் ஏற்கெனவே மிகப்பெரிய பொருளாதாரச் சிக்கலில் உள்ள நாடுகள். தற்போது இலட்சக்கணக்கான அகதிகள், வந்துசேர வழி தெரியாது திணறுகின்றன இவை இரண்டும். ஜெர்மனியின் பிரதமர் ஏஞ்சலா மெர்கெல் மட்டும் அகதிகளுக்கு ஆதரவாக கருத்து வெளியிட்டுக் கொண்டிருக்க அங்குள்ள ஏனைய அரசியல் கட்சிகள் பெரும் அகதிகள் வருகையால் ஜெர்மனியின் முகம் மாறிவிடும். வேறு பல சிக்கல்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்று அச்சம் வெளியிட்டுள்ளனர். ஜெர்மனி அரசு அகதிகளுக்காக நிறுவிய இரண்டு தங்குமிடங்கள் தீக்கிரையாக்கப்பட்ட சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன. அகதிகளால் ஏற்படக்கூடிய கூடுதல் செலவு. ஜெர்மனிக்கு ஆண்டொன்றுக்கு 700 கோடி அமெரிக்க டொலருக்கும் அதிகமாகலாம் என மதிப்பிடப்பட்டுள்ளது

வந்து குடியேறவுள்ள அகதிகளுக்கான வேலைவாய்ப்பு அவர்களது மதச் சுதந்திரம் அவர்களது கலாசார நடை முறைகள் என்பன பெரும் சிக்கல்களை உருவாக்கி. இவை உள்நாட்டு மக்களின் வாழ்க்கையில் இடையூறாகப் பார்க்கப் பட்டு. உள்நாட்டு அரசியலில் இது பெரும் மாற்றங்களுக்கு வித்திடும். என்பதே அகதிகளை ஏற்றுக்கொள்வதில் பல நாடுகளின் தயக்கத்துக்கான காரணங்கள் எனவும் சொல்கின்றனர் ஆய்வாளர்கள்.

இந்த அகதிகள் வருகை அண்மையில் என்றும் இல்லாதவாறு அதிகரிப்பதற்குப் பின்னாலிருப்பது என்ன என்பதை துல்லியமாக ஆராய்ந்தால். அமெரிக்க ஏகாதிபத்தியத்தால் அதன் ஐரோப்பிய கூட்டாளிகளின் உதவியுடன். கடந்த ஒரு கால் நூற்றாண்டு காலமாக தொடர்ந்து முன்னெடுக்கப்பட்ட ஆக்கிரமிப்புக்கான. ஆட்சி மாற்ற தலையீடுகளின் அதிகரிப்பே என்பது துல்லியமாகத் தெரியும்.

1991இல் ஈராக்கிற்கு எதிரான போரை தொடர்ந்து லிபியாவில் மௌம்மர் கடாபி அரசாங்கத்தைப் பதவியிலிருந்து கவிழ்த்த. ஆட்சி மாற்றத்திற்கான போர். எதிர்விரோத போராளிகள் குழுக்களுக்கு இடையிலான தொடர்ச்சியான சண்டையை ஏற்படுத்தி அந்த நாட்டை சீரழித்தது. பின்னர் வந்த சிரிய உள்நாட்டு போர் பஜீர் அல் அசாத்தைப் பதவியில் இருந்து கவிழ்த்தது. அங்கே ஒரு மேற்கத்திய கைப்பாவை ஆட்சியை நிறுவும் நோக்கில், அமெரிக்காவால் தூண்டிவிடப்பட்டு. ஆயுதங்களும் நிதியுதவியும் வழங்கப்பட்ட குழுக்களால் அந்த நாடும் சின்னாபின்னமாகிறது.

ஈராக். ஆப்கானிஸ்தான். லிபியா பின்னர் சிரியா இங்கெல்லாம் ஏகாதிபத்தியங்களின் பின்புலத்துடன் செய்யப்பட்ட ஆக்கிரமிப்புக்கள், சூறையாடுதல்கள் அனைத்தும் மனித உரிமைகள். ஜனநாயகம் ஆகிய பெயர்களில் நியாயப்படுத்தப்பட்டன. ஒட்டுமொத்தமாக கடந்த கால ஏகாதிபத்திய ஆக்கிரமிப்புகளின் விளைவுகளைத்தான். பெரும் எண்ணிக்கை அகதிகள் அவலத்துடன் ஐரோப்பாவை எட்ட முயற்சிக்கும் அலையில் உலகம் இன்று பரிதாபத்துடன் காண்கிறது.

ஈராக். சிரியா இரண்டிலும் பயங்கரவாதத்தின் வளர்ச்சியும் நடந்துகொண்டிருக்கும் இரத்தந்தோய்ந்த வகுப்புவாத உள்நாட்டு போர்களும். ஐ.எஸ்.ஐ.எஸ். உட்பட்ட ஏனைய இஸ்லாமிய குழுக்களுக்கு. சி.ஐ.ஏ மற்றும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் அப்பிராந்திய கூட்டாளிகளால் வழங்கப்பட்ட ஆதரவின் விளைபொருள்களாகும்.

பூமிப்பந்தின் ஒட்டுமொத்த வரலாற்றின் விவிலிய காலத்தையும் மீறிய. கிறலர் காலத்தையும் மீறிய அளவுக்கு ஐரோப்பாவை நோக்கிய அகதிகள் படையெடுப்புக்கு காரணமான ஏகாதிபத்திய ஆக்கிரமிப்புகள் தொடர்ந்தும் தொடருமானால் அடுத்த நூற்றாண்டு கத்தோலிக்க தேசங்களை காணாமல் செய்துவிடும் என்பதே யதார்த்தம்.

---

## முள்...

(20 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

பின்னங்காலில் ஏதோ நெருடல். நகங்களால் சுரண்டுவதைப்போல... ஆமாம், யாருடைய கால்களோதான். திரும்பிப் பார்த்ததும் அவன் லேசாக முறுவலித்தான். கால்களை முன்னே நீட்டிப் படுத்திருப்பானாக இருக்கும். மன்னிப்புக்கோரும், பாவனையில் லேசாக முறுவலித்தான். நான் தலையைத் திருப்பிக்கொண்டேன். உறங்கினால் தேவலாம் போல இருந்தது. பாட்டும் வேண்டாம் நிலாவும் வேண்டாம். மெள்ள நான் நழுவி விழ ஆரம்பித்தேன். இதோ கீழே கீழே வீழ்கிறேன்.

யாரோ என்னை இறுகப் பற்றுவது போல. இதென்ன கனவா? பயண உறக்கத்திலும்கூட கனவுவருமா என்ன? இல்லை நிஜமாகத்தான். நான் சுதாகரிப்பதற்குள் எனது மூளை துரிதமாக வேலை செய்யத் தொடங்கும்முன்... "ஆ..." என் அழுகையும் ஆத்திரமும் சேர்ந்து க்ரீச்சிட்டேன்.

"என்னாச்சு... என்ன... என்ன" என்று பல குரல்கள் கேட்டன. கண்டக்டர் விளக்கைப் போட்டதும் டிரைவரும் வண்டியை நிறுத்திவிட்டார். "என்னமா ஆச்சு?" என்று சத்தமாக கண்டக்டர் கேட்கவும், எனக்குக் குரலே எழும்பவில்லை. என்ன நடந்திருக்கும் என எல்லோரும் யூகிக்கத் தொடங்கியிருப்பார்கள். நான் ஏன் இப்படி நிலை குலைந்து போனேன்? என் தவறு என்ன இதில்? என் பேச்சு எங்கே ஓடி ஒளிந்துகொண்டது? என் தைரியம் எங்கே முக்காடிட்டுப் போனது? சில நிமிடங்கள் எல்லோரும் செய்வதறியாது நின்றுகொண்டிருந்தார்கள். இத்தனை களேபரங்களுக்கும் காரணமான அவன் அப்போதுதான் விழித்தவன்போல "என்ன நடந்தது?" என்று குழம்பியவனைப் போல... என்ன ஒரு தேர்ந்த நடிப்பு? நான் சொன்னால் இவர்கள் நம்புவார்களா? உதவிக்கு வருவார்களா? இல்லை... உண்மையிலேயே எனக்கு அப்படி எதுவும் நிகழவில்லையா? கெட்டசொப்பனம் ஏதும் கண்டேனா?


"டும்" என ஒரு சத்தம். என்ன நடந்தது எனத் தெரியவில்லை. அவன் பின் சீட்டில் கால்களைப் பரப்பி விழுந்துகிடந்தான். கைகளால் கன்னத்தைப் பிடித்திருந்தான். அவனது கண்ணாடி கண்களைவிட்டு இறங்கிச் சற்றே சரிந்துகிடந்தது. கண்களை மூடித் திறப்பதற்குள் "தப்" என்று மறுபடியும் ஒரு சத்தம். காலணி கழற்றப் படாத கால்களால் அவனது நெஞ்சில் ஓங்கி ஓர் உதை உதைத்தாள், என் அருகில் இருந்த பெண்மணி. எழுந்து நிற்கமுயன்ற அவன், மறுபடியும் தடுமாறி விழுந்தான். வலி தாங்கமுடியாமல் அவனது முகம் அஷ்டகோணலானது. பின் சரமாரியாக அவள் அவனது முகத்திலும் மார்பிலும் உக்கிரமாக அடிக்கத் தொடங்கினாள். அவளது ரௌத்திரம் அடங்கநேரமானது. திகைத்து நின்ற ஆண்கள், தங்களது நல்தன்மைகளை நிலைநாட்டவும் தம் வீட்டுப்பெண்கள் நினைவில் வந்ததாலும் அவர்களும் அவளுடன் சேர்ந்துகொண்டு கும்பலாக அடித்து ஒரு வழியாக்கிவிட்டனர். அவன் பை வெளியே தூக்கி எறியப்பட, அவனைப் பேருந்தில் இருந்து அடித்து விரட்டி நடுக்காட்டில் கட்டாயமாக இறக்கிவிட்டனர்.

நெடுநேரம்வரை நான் தலைகுனிந்து அமர்ந்திருந்தேன். என்ன நடந்தது என்று நினைவுபடுத்திப் பார்க்க முயன்றேன். அவள் எனது கைகளை மெள்ள அழுத்தினாள். "விட்டுத்தள்ளுப்பா... அவன் பொறம்போக்கு நாயி..." என்று சிநேகமாகச் சிரித்தாள். அவள் தலைகலைந்து புடைவை விலகி அலங்கோலமாக இருந்தாள். பையில் இருந்த சீப்பை எடுத்து பின்னலை அவிழ்த்து மறுபடியும் நேர்த்தியாக பின்னத் தொடங்கினாள். பின் ஒரு வெள்ளைக் கவரில் இருந்த கனகாம்பரப் பூவை சூடி, இருபக்கமும் சமமாக இருக்கிறதா எனச் சரிபார்த்துக்கொண்டாள். லேசான பவுடரும் லிப்ஸ்டிக்கும் பூசி, சிறிய வட்டவடிவக் கண்ணாடியில் தன் ஒப்பனையைப்பார்த்துத் திருப்தியானாள். அவளுக்கு ஒரு போன் வந்தது. "அஞ்சே நிமிஷம் சேர். வயலெட் கலர் சேலை கட்டியிருப்பேன். சிவப்பு கலர் ரி-ஷேர்ட்டா... யமஹா பைக்கா?" என்று ஏதேதோ தொடர்பு இல்லாமல் பேசினாள். பேருந்து நின்றதும் விடுவிடுவென பேருந்தைவிட்டு இறங்கிச் சென்றாள்.

நானும் இறங்கினேன். அவளைத் தேடினேன். அதோ தூரமாக அந்த போஸ்ட் மரத்தின் கீழே நிற்பவனை நோக்கி வேகமாகச் சென்றுவிட்டாள். அவன் இளைஞனாக இருந்தான். அவன் அவளுக்காகத்தான் காத்திருக்கிறான் போலும்.

நான் இந்தச் சம்பவத்தை கதிரிடமோ அம்மாவிடமோ பகிர்ந்துகொள்ளவே இல்லை. எனக்குப் பயணங்கள் வேண்டியிருக்கிறது. ஆனால், எத்தனையோ இரவுகளில் உறக்கத்தின் நடுவே நான் திடுக்கிட்டு விழித்திருக்கிறேன். அவனை எனது கரங்களால் நான் ஓர் அடிகூட அடிக்காததும், அவளுக்கு வாயைத் திறந்து "நன்றி" என்று சொல்லாததும் என்றென்றைக்கும் ஒரு முள்ளாக என்னை உறுத்திக்கொண்டே இருக்கிறது!



# பாஞ்சாலியின் புலம்பல்

**நாம்** நீதியைப் பகராமல் இருப்போமானால், நாம் நரகத்திற்கே செல்வோம்... பிதாமகரான பீஷ்மரும், தந்தையும், அரசருமான திருதராஷ்டிரரும், உயர் ஆன்மவிதுரரும் ஒன்றும் சொல்லாமல் இருப்பது எவ்வாறு?

"எங்களுக்கெல்லாம் குருவான, மறுபிறப்பாளர்களில் சிறந்தவர்களான துரோணரும், கிருபரும் ஏன் இங்கு பதிலளிக்கவில்லை? இந்தப் பந்தயத்தில் விருப்பம் கொண்ட சகுனியே, யுதிட்டிரனைத் தன் மனைவி பாஞ்சாலியைப் பந்தயமாக வைக்கத் தூண்டினான். இதைக் கருத்தில்கொண்டு பார்த்தால், பாஞ்சாலி வெல்லப் படவில்லை என்று துணிகிறேன்" என்று எடுத்துரைத்தானே விகர்ணன்!

அப்படி விகர்ணன் எடுத்துச் சொல்லியும் தன்னை இழந்தபின், என்னை வைத்துச் சூதாடும் உரிமையை என்னவர் யுதிட்டிரர் இழந்துவிட்டார் என்று நன்னெறியை எடுத்துச் சொல்லியபோதும், உங்களால் அறநெறித் தேவனின் மறுஅவதாரம் எனப் புகழப்படும் கர்ணன் என்ன சொன்னான் என்பது, பெருந்தகையாளர்களான நீங்கள் அறியாததா!

"பாஞ்சாலி ஒற்றையாடையுடன் இங்கு கொண்டு வரப்பட்டது சரியில்லாத நடவடிக்கையாக நீ கருதினால், அதற்கு நான் சொல்லும் மறுமொழியைக் கேள், விகர்ணா! ஒரு பெண்ணுக்கு ஒரு கணவன் என்றே விண்ணவர்கள் வழங்கி இருக்கின்றனர். இருந்த போதிலும், இந்தப் பாஞ்சாலி பல கணவர்களைக் கொண்டிருக்கிறாள். ஆகையால்?, இவள் கற்பற்ற பெண் என்பது உறுதி. ஆகையால், இவளை இந்தச் சபையின் முன்பு ஒற்றையாடையில் கொண்டு வருவதோ அல்லது அவளது ஆடைகளைக் களைவதோ வியப்படையவேண்டிய செயலல்ல. என்றல்லவா இழிந்துரைத்தான்! அவன் கூறிய சொற்களைக்கொண்டு என் கற்பறத்தைக் கூறுபோட முயல்வோர்களுக்கு நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன்.

***

பொன்னைப் புடம்போட்டுப் புனிதமாக்குவது நெருப்பில் தான்! தன் கற்பை இவ்வுலகுக்கு நிரூபிக்க, கற்புக்கரசியாம் சீதை புகுந்து மீண்டதும் நெருப்பிலிருந்துதான்!

அந்த நெருப்பில் பிறந்தவள் நான்! நான் நெருப்பானவள்! என்னிடம் மாசு இருந்தால் நான் நெருப்பிலிருந்து தோன்றி இருக்கமுடியுமா? எந்த மாசையும் எரிப்பது தீ! அத்தீயின் வடிவானவள் நான்! என்னிடம் மாசு இருக்கமுடியுமா? கர்ணனின் கூற்றை கதிரவனின் மைந்தனின் கூற்று என்று நீங்கள் மதிக்கும்போது, கதிரவனே ஒரு பகுதியான அந்த அக்கினிப் பிழம்பிலிருந்து தோன்றிய என் கூற்றை ஏற்க மறுப்பதும் ஏனோ?

அந்த வஞ்சகக் கர்ணன் என்னைப் பழிதீர்க்க அவ்வாறு கூறாதிருந்தால், என் துகில் அவையோர் முன் உரியப் பட்டிருக்காது, நான் சூளுரைத் திருக்கமாட்டேன். துரியனின் தொடைபிளக்கப்பட்டு, அவன் மரித்திருக்கமாட்டான், கர்ணன் அருச்சுனால் கொல்லப்பட்டு இருக்கமாட்டான்.

பாரதப் போரே நிகழ்ந்திருக்காது! ஒரு பெண்ணின் மாதவிடாய்க் காலத்தில் குருதி ஒழுகும் நிலையில் உள்ள ஒரு பெண்ணின் ஆடையைக் களைந்து, அவளது அவல நிலையை மாபெரும் சபையினர் கண்டு எள்ளாடவேண்டும் என்று கொக்கரித்த கர்ணனை தாயென நினைக்கவேண்டிய பெண்ணினத்தையே இழிவுக்கு உள்ளாகச் செய்த அந்தப் பண்பற்றவனை பெண்மையைப் போற்றும் பெருந்தகையாளர்கள் பெருமை பேசுவது எங்ஙனம்?

என்மீது நீங்கள் மதிப்பு வைத்திருக்கிறீர்களோ இல்லையோ, அது வேறு விஷயம். ஒரு பெண்ணை, அவள் எப்படிப்பட்டவளாக வேண்டுமானாலும் இருந்துவிட்டுப் போகட்டும், அவளைப் பலவந்தப் படுத்தி, அவள் துகிலை உரியச்சொன்னாலும், அப்படி உரிந்தாலும் 'உங்கள் காலத்தில் அப்படி யார் செய்தாலும், செய்யத் தூண்டினாலும், அவர்களுக்குக் கொடிய தண்டனை கொடுக்க வேண்டும் என்று நீங்கள் கொடி பிடிப்பீர்களா, அல்லது அந்தக் கயவர்களுக்கு நீங்கள் ஆலவட்டம் தூக்குவீர்களா சொல்லுங்கள்!

தீநெறியின் முன்பு செய்வதறியாது திகைத்து அனைவரும் நின்றபோது, என் துகிலை தீயவன் துச்சாதனன் உறிய முற்பட்டபோது, என் மானத்தைக் காத்து அருளிய கண்ணன் போன்று உங்களில் ஒருவராவது இருக்கத்தானே செய்வீர்கள்!

தனது இழிசெயல் நிறைவேறாது நின்றபோது, துச்சாதனன் களைத்து வீழ்ந்தபோது பேச்சற்று நின்ற அவையோரைப் பார்த்து விதுரன் சொன்னதையே நானும் உங்களுக்குச் சொல்லுகிறேன்.

"அறநெறிகளின் விதிகளை அறிந்து, ஒரு சபையில் கலந்து கொண்டு, ஒரு கேள்விக்கு பதில் அளிக்காமல் இருப்பது என்பது பாதி பொய்க்கு சமமாகும். மறுபுறம் அறநெறிகளின் விதிகளை அறிந்த ஒருவர் ஒன்றுகூடி, பொய்யான பதிலைச் சொன்னால், நிச்சயமாக பொய் சொன்ன பாவம் அவரைச் சாரும்."

எக்காலத்திற்கும் ஒரே நெறி, ஒரே நியாயம், ஒரே அளவு-கோல் என்று சொல்லும் நீதிமான்களே, சொல்லுங்கள்! இக்கால நெறிமுறையைக் கொண்டு என்னை நீங்கள் போற்றவேண்டாம், குறைந்த பட்சம், என்னைக் கொடுமைப் படுத்திய பெண்ணடிமை செய்த பேடிகளுக்கு உங்கள் காலப்படி என்ன தண்டனை வழங்குவீர்களோ, எப்படி ஈனர்களை எதிர்த்துப் போராட்டம் நடத்துவீர்களோ, அப்படி நடத்தாவிட்டாலும் போகிறது.

(முற்றும்)




**சனல் -4 'நீதிக்கான தேடல்' ஆவணப்படம் சர்வதேச விசாரணைக்கு அழுத்தம் கொடுக்கும்வகையில் தயாரிக்கப்பட்டுள்ளதாமே சிந்தியா?**

**க.மதனன், கிளிநொச்சி.**

நானும் விழுந்தடித்து அந்த ஆவணப் படத்தைப் பார்த்தேன். அதில் புதிய போர்க்குற்றக் காட்சிகள் எதுவுமில்லை. ஏற்கெனவே வெளியிடப்பட்டிருந்த கொலைக் காட்சிகளையே இதிலும் ஆவணப் படுத்தியிருப்பதோடு, படத்தின் அதிகமான பகுதிகளில் ஆவணப் படுத்தியவர்கள் கதைக்கின்றார்கள். எனக்கென்னவோ, இலங்கைக்கு அவகாசம் கொடுப்பது என்ற அமெரிக்காவின் தீர்மானத்தை இந்தப் படம் ஒன்றும் செய்துவிடாது.

**சிந்தியா! புதிய அரசியலமைப்பில் தமிழர்களுக்கான அரசியல் தீர்வு சாத்தியப்படுமா?**

**எம்.கேசவன், கொழும்பு -15.**

ஐக்கிய நாடுகள் சபையின் முப்பதாவது மனித உரிமைகள் ஆணையகத்தின் கூட்டத்தில் உரையாற்றிய இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர அப்படித்தான் கூறியிருக்கின்றார். நாட்டு மக்கள் கடும்போக்கு இனவாதத்தை நிராகரித்திருக்கின்றார்கள், ஜனாதிபதி தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்த தேவையான காரியங்களைச் செய்துள்ளார். சம்மந்தன் எதிர்க்கட்சித் தலைவராக ஏகமனதாக தெரிவாகி இருக்கின்றார், காணாமல் போனவர்கள் தொடர்பாக நியாயமான விசாரணைகளை நாங்கள் முன்னெடுத்திருக்கின்றோம்.

தேசிய சட்டப்பேரவை ஒன்றை ஏற்படுத்தியுள்ளோம், அதுபோல் புதிய அரசியல் திருத்தம் ஒன்றை ஏற்படுத்தி இனப்பிரச்சினைக்கும் தீர்வைக்காண்போம். எனவே எங்களை நீங்கள் நம்புங்கள். எங்களுக்கு உதவுங்கள், எங்களது பயணத்தில் நீங்களும் இணைந்து கொள்ளுங்கள் என்றெல்லாம் கூறியிருக்கின்றார். பொறுத்திருந்து பார்ப்போம்.

**சிந்தியா! பிரதமர் ரணிலின் இந்திய விஜயம்... நடக்கப் போவது என்ன?**

பிரதமராகி தனது முதலாவது பயணமாக இந்தியா சென்றுள்ளார். அங்கு இந்தியப் பிரதமர் மோடி மற்றும் முக்கிய தலைவர்களை சந்திக்கவுள்ளார். இந்த பயணத்தின் போது, ஐக்கிய நாடுகள் சபையில் இலங்கைக்கு எதிரான அறிக்கை தொடர்பாக முக்கியமாக கலந்துரையாடுவார், இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையிலான பாலம் அமைப்பது தொடர்பாக சிலாகிப்பார்கள், இலங்கை கடற்பரப்புக்குள் இந்திய மீனவர்கள் அத்துமீறி மீன்படியில் ஈடுபடுவது தொடர்பாகவும் கலந்துரையாடுவார்கள். இப்படி சில விடயங்கள் ஆராயப்படும்.

**சிந்தியா! இந்தியாவில் தென்னாபிரிக்கா சாதிக்குமா?**

**ஆர்.புஸ்பன், யாழ்ப்பாணம்.**

தென்னாபிரிக்கா அணியை எப்போதுமே குறைத்து மதிப்பிட முடியாது. அவர்கள் எப்போதும் எதிரணிக்கு நெருக்கடியைக் கொடுக்கும் பலமான ஆட்டத்தையே ஆடுவார்கள். ஆனால் துரதிர்ஷ்டவசமாக போட்டியின் முடிவைத் தீர்மானிக்கும் போட்டியில் தடுமாறிப்போவார்கள். அப்படி ஒரு வாய்ப்பு இந்திய அணிக்கு கிடைத்தால் அதை இந்திய அணி சரியாக பயன்படுத்திக் கொள்ளவேண்டும். அதைத் தவறவிட்டால் வெற்றி தென்னாபிரிக்காவின் வசமாகும்.



**சிந்தியா! சிரியாவில் இருந்து அகதிகளாகச் சென்று துருக்கியில் கரையொதுங்கிய சிறுவனின் உயிருக்கு கொடுத்த முக்கியத்துவம் இலங்கையில் இறந்த சிறுவர்களுக்கு கொடுக்கவில்லையே?**

**கே.மிதுலா, மன்னார்.**

நியாயமான கேள்விதான். அந்தச் சிறுவன் அயலான் கடற்கரையில் இறந்து கிடந்ததைப் பார்த்து உலக மக்கள் ஆடிப்போனார்கள். அதைவிடவும் மோசமான அவலத்தையும், மரணத்தையும் தமிழர்கள் சந்தித்தது உண்மைதான். வயிற்றிலிருந்த ஒரு தமிழச்சியின் கருவையும் வெடிகுண்டுகள் சிதைத்திருந்தன. ஆனால் எந்த நாடும் அதைக் கண்டுகொள்ளவில்லை. எந்த உலக ஊடகங்களும் திரும்பியும் பார்க்கவில்லை. உலக மக்களின் இதயங்களை தமிழர்களின் மரணங்கள் உலுக்கவில்லை.

இதற்கு காரணம் நாம் மரணங்களைக் கொண்டாடினோம், அதிக மரணங்களை யுத்த தந்திரோபாயமாக எண்ணினோம், மரணங்களுக்கு இரத்தம் காய்ந்துவிடுவதற்கு முன்னரே காரணம் கற்பித்து நியாயம் தேடினோம், பின்னடைவை போர்த் தந்திரம் என்று நம்மை நாமே ஏமாற்றிக்கொண்டோம்.

இப்படி நாம் மனநோயாளிகள் போல் மரணத்தை வெளி உலகுக்கு காட்டிக் கொண்டிருந்தோம். அப்படியிருக்க எப்படி உலக நாடுகள் நம்மையிட்டு கருணைகாட்டும்?

# காதிலை பூதந்தசாமி

**வணக்கமுங்கோ. சர்வதேச விசாரணை தேவை என்று குப்பனும், சுப்பனுமெல்லாம் ஆளுக்கொரு ரீம் பேப்பரை வாங்கிக்கொண்டு கையொப்பம் வாங்கத் தொடங்கியிருக்கினமுங்கோ.**

சனமும் யார்? எவர்? எண்டதையெல்லாம் பார்க்காமல் அதிலபோய் நிண்டு கையொப்பம் வைக்கினமுங்கோ. உந்தக் கையொப்பங்களால் இலங்கைக்கு ஆதரவாக தீர்மானம் நிறைவேற்றவுள்ள அமெரிக்காவை இவையாள தடுக்க முடியுமோ?

இல்லாட்டில் ஐ.நா சபைதான் அமெரிக்காவையும் பொருட்படுத்தாமல் இலங்கைமீது ஒரு விசாரணையை நடத்துமோ? இது ரெண்டில ஒண்டும் நடக்காதுங்கோ. வெளிநாட்டில இருந்து யாரும் பணம் அனுப்பினால் ஊருக்குள்ள திரியுற பிரகிருதிகள் பேனையும் தாளுமாக திரியிறாங்கள்.

தமிழர்கள் தங்களுடைய ஆதங்கத்தையும், கோரிக்கையையும் வெளிப்படுத்தத்தான் வேணுமுங்கோ, அதை பதிவு செய்யத்தான் வேணுமுங்கோ. அதுகளை நான் பிழை எண்டு சொல்லமாட்டனுங்கோ. அப்படியான விசயங்களை பரந்துபட்ட கலந்துரையாடல்கள் மற்றும் ஏற்பாடுகள் ஊடாக ஒருமித்து தமிழினம் செய்ய வேணுமுங்கோ.

இப்புடி அங்கொன்றும் இங்கொன்றுமாக சிலபேர் தங்களுடைய சுய இலாபங்களில் இருந்துகொண்டு செய்தால் இரண்டுவிதமான கருத்து உருவாகுமுங்கோ. ஒண்டில் தமிழர்களை ஒரு பொது வேலைத்திட்டத்திற்காக அணி திரட்டமுடியாது எண்டுவினம்.

மற்றையது, தமிழ் மக்களில் பெரும்பான்மையானவர்கள் மேற்படி விடயத்தை கண்டுகொள்ளவில்லை. அல்லது தமிழ் மக்களுக்கு இதுபோன்ற விடயங்களில் நம்பிக்கை இல்லை. என்ற செய்திதானுங்கோ அது வெளிப்படுத்தும்.

இதுதவிரவும் நடந்துகொண்டிருக்கின்ற கையெழுத்துப் போராட்டங்களையும், நடைபவணி என்ற கூத்தையும் பார்த்தால், கூட்டமைப்பு தாங்கள் உதுகளை செய்யவில்லை எண்டும், தங்களுக்கும் இதுகளுக்கும் சம்மந்தம் இல்லை எண்டும் சொல்லினமுங்கோ.

அப்புடியெண்டால், தமிழ் மக்கள் ஆதரிக்கும் தமிழ்த் தேசியவாதிகள் இந்தப் போராட்டங்களை நடத்தவில்லையுங்கோ. அப்புடியெண்டால் தமிழ்த் தேசியத்துக்கு எதிரான துரோகிகள்தான் இந்தப் போராட்டங்களை நடத்துகின்றார்கள் என்றவிதமாகவே அர்த்தப்படுகுதுங்கோ.

தமிழ்த் தேசிய துரோகிகள் நடத்தும் போராட்டங்கள் தமிழ் மக்களின் கோரிக்கைகளாகவோ, மன ஆதங்கங்களாகவோ எடுத்துக்கொள்ளப்படமோ இல்லையே. பார்த்தியளோ உந்தப் போராட்டங்கள் அடிப்படையிலேயே எவ்வளவு முரணானது எண்டு

தமிழ் மக்களின் சர்வதேச விசாரணைக் கோரிக்கையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எந்தளவுக்கு சிறுபிள்ளைத்தனமானதாக மாற்றியிருக்குது தெரியுமோ, கூட்டமைப்புக்குள்ள ஒரு அணி சர்வதேச விசாரணை தேவை எண்டு சொல்லினம். இன்னொரு அணியோ சர்வதேச உதவியோடு உள்ளக விசாரணைக்கு ஆதரவு எண்டு சொல்லினமுங்கோ.

ஆனால் கூத்தமைப்பின் இரண்டாம்நிலை உறுப்பினர்களோ தாங்கள் ஜெனிவாவுக்குப் போகிறோம் என்று பரபரப்பாகிக் கொண்டிருக்கின்றார்கள். ஆனால் கூட்டமைப்பின் கொழும்புத் தலைமைகளோ, கூட்டமைப்பு சார்ந்து யாரும் ஜெனிவாவுக்கு போகவில்லை எண்டு சொல்லினமுங்கோ.

சிவாஜிலிங்கமும், அனந்தியும், நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரனும் நடத்தும் பாதயாத்திரையை கூட்டமைப்பு நடத்தவில்லை எண்டு கொழும்பில கூட்டமைப்பின் தலைமை சத்தியம்செய்து சொல்லுதுங்கோ, அதுவும் போதாது எண்டு, கலந்துரையாடல் அமைச்சரும் சொல்லுறார், அந்த பாதயாத்திரைக்கும் கூட்டமைப்புக்கும் சம்மந்தமில்லையாமுங்கோ.

அது சிவாஜிலிங்கத்தின்ர ஒரு குழுவினர் நடத்தினாமுங்கோ, எண்டு ஏதோ கூட்டமைப்பின்ர ஒரு பேச்சாளரைப்போலவே சொல்லுறாருங்கோ. அப்புடியெண்டால் இவை என்ன சொல்லப்பாக்கினமுங்கோ, இவையளில யார்? கூட்டமைப்பு, யார்? கூட்டமைப்பு இல்லை? எனக்கெண்டால் உந்த விளையாட்டுகள் விளங்குதில்லையுங்கோ.

உங்களுக்கு உந்த விளையாட்டு புரியும் எண்டுதான் நினைக்றேனுங்கோ. ஏனெண்டால், இவங்களின்ர திருகுதாளங்களையும், உந்த மாதிரியான விளையாட்டுக்களையும், சுத்துமாத்துக்களையும் புரிந்துகொண்டு தானேங்கோ, சரியாக வாக்களிக்கும்போது மட்டும் அவைக்குப் போடுங்கோ, எதையும் வாங்குறதெண்டால், இவையிட்ட வாங்குங்கோ எண்டு தெளிவாக முடிவு செய்யிறீங்கள்.


என்னங்கோ நான் சொல்லுறது புரியுதானே, நீங்கள் வாக்குப்போடாட்டில் இவை உந்தமாதிரி செய்வினமோ. உங்களுடைய ஆசீர்வாதங்கள் தானேங்கோ, இவர்களை பார்ளிமெண்டிலையும், மாகாண சபையிலையும் மனிசராக இருத்தி வச்சிருக்குது.

நீங்கள் மட்டும் இவர்களை அரசியலில் ஓரம் கட்டிப்பாருங்கோ, இவர்களில் எத்தனைபேர் நாட்டைவிட்டு ஓடுகின்றார்கள்? எத்தனைபேர் ஊரைவிட்டு ஓடுகின்றார்கள்? யார்? உங்களை மறுபடியும் நாடி வருகின்றார்கள் என்பது தெரிந்துவிடுமுங்கோ.

இவர்களில் பலபேருக்கு சொந்த முகவரியே இல்லாமல் போயிடுவினமுங்கோ. இவர்களுக்கு அடையாளம் கொடுத்த உங்களுக்கு விசுவாசமாக இருக்கிறாங்களில்லையே என்பதுதானுங்கோ எனக்கு கவலையா இருக்குதுங்கோ.

**"யாவும் கலப்படமற்ற கற்பனை"**

## வரலாறு படைத்த வல்லுநர்கள் ஒப்பற்ற தலைவன் மாசேதுங்



பழிவாங்கும் சியாங்கின் பிடியில் இருந்து தப்பி மாசேதுங்கும் அவர் தோழர்கள் சிலரும் சியாங்ஷி மாகாணத்திலுள்ள யாராலும் அணுக முடியாத மலைக்குகைகளில் மறைந்திருந்து கம்யூனிச நடவடிக்கைகளை தொடர்ந்தார்.

1930 இல் முதல் சீன சோவியத்தைத் தோற்றுவித்தார். ( ஒரு மாகாணத்தை மக்கள் பிரதிநிதிகள் ஆட்சிபுரிவதற்கு சோவியத் என்று பெயர்) மாவ் தம் ஆதரவாளர்கள் எவ்வித துன்பங்களையும் சகித்துக்கொள்ளும் மனவலிமையும் கொரில்லாப் போர் முறைகளில் வல்லவர்களாகவும் இருப்பதைக் கண்டார். கோமிங்டாங் அரசுடன் வெகு விரைவிலேயே உள்நாட்டுப் போர் தொடங்கவேண்டியிருக்கும் என்றநிலை உருவாயிற்று. விவசாயிகளையும் சுரங்கத் தொழிலாளர்களையும் கொண்டதொரு படையை உருவாக்கினர்.

மாஸேதுங்கின் பலம் பெருகுவதைக் கண்ட சியாங், அவரையும் கம்யூனிஸ்டுகளையும் பூண்டோடு அழிக்கப் பெரும்படையை ஏவினார். மறைந்துவாழும் மலைப் பகுதிகளை நோக்கி, கோமிங்டாங் படைகள் குவிவதைக் கண்ட மாஸேதுங், இந்த நிலையில் கம்யூனிஸ்ட் தோழர்கள் பிழைக்கவேண்டுமானால், சீனாவின் வடக்குப் பகுதிக்குத் தப்பிப் போய்விடுவது தான் சிறந்த வழி என்று தீர்மானித்தார். சியாங்ஸி மாகாணத்திலிருந்து யேனான் பகுதி 6000 மைல்களுக்கு அப்பாலிருந்தது. அவ்வளவு தூரத்தை எப்படிக்கடப்பது? சரித்திரப் புகழ்பெற்ற "லாங் மார்ச்" எனப்படும் நெடுந்தூரப் பாத யாத்திரையை மேற்கொள்ளும்படி கட்டளையிட்டார். தம் தோழர்களுக்கு.

(தொடரும்)

# இந்தவாரம் உங்கள் பலன்

(17.09.2015 தொடக்கம் 23.09.2015 வரை)

### மேடம்

பொதுப் பணிகளைச் செய்வோர்கள் கவனமுடன் பணியாற்றுவதால் வீண் பழிச்சொல்லுக்கு ஆளாகாமல். இருக்கலாம். பொருளாதாரத்தில் இது நாள்வரையில் இருந்துவந்துள்ள நெருக்கடிகள் மாறி நல்ல சூழ்நிலை உருவாகும். நண்பர்கள் மற்றும் உற்றார், உறவினர்களின் வரவால் பொருட்செலவுகள் உண்டாகுவதோடு மனநிம்மதி குறைவதோடு வீண் பொருட்செலவுகளும் வந்துசேரும். பிள்ளைகளால் மனமகிழ்ச்சியும், பொருள்வரத்தும் உண்டாகும். பொது பணித்துறை சார்ந்தவர்கள், அநாதை ஆச்சிரமங்களை நடத்துவோர்கள், ஆலயப் பணிபுரிபவர்கள், ஏஜென்சி போன்றவர்களுக்கு நற்பலன் தரும் காலமாகும். புதிய கடன்வாங்கிப் பழைய கடன்களை அடைப்பதற்கான முயற்சிகளில் ஈடுபடுவீர்கள்.

### இடபம்

தங்கம், வெள்ளி நகை வியாபாரிகள் எதிர்பாராத இலாபம் அடைவார்கள். வெகு காலமாகப் பூர்வீகச் சொத்துக்களில் இருந்துவந்த பிரச்சினைகள் பெரிய மனிதர்களின் தலையிடுதலால் தீர்ந்து மனநிம்மதி ஏற்படும். வீடு, நிலம் போன்றவற்றின் மூலமான புதிய கடன்வாங்குவதற்கான முயற்சிகளில் வெற்றியடையலாம். விவசாயம் சுமாராகக் காணப்படும். மாணவர்களுக்கு கல்வித்துறையில் பரிசு மற்றும் பாராட்டுக்களை பெற வாய்ப்புகள் உள்ளன. தேவையான பொருளாதாரம் கைவந்துசேரக்கூடிய காலமாகும். காதல் விசயங்களால் ஏற்பட்ட பிரச்சினைகள் தீர்ந்து உறவுகள் வலுப்பெறும். வெளிநாடு சென்றுவருதல் போன்ற விசயத்தில் சற்று கவனமாக நடந்துகொள்ளவும்.

### மிதுனம்

வேண்டாத விசயங்களில் தலையிட்டு வீண் சிக்கலில் மாட்டிக் கொள்ளவேண்டாம். திடீர் அதிர்ஷ்டம் மூலமாகப் பணம் பொருள்வர வாய்ப்புகள் உள்ள காலமாகும். உடல்நிலையில் இருந்துவந்த தொல்லைகள் மாறிப் பொருட்செலவுகள் குறைய வாய்ப்புகள் உள்ளது. நாட்பட்ட வராத கடன்கொடுத்துள்ள பணம் திரும்பக் கிடைக்கும். சகோதரர்களால் மனநிம்மதி குறைந்தாலும் அவர்களால் சிற்சில ஆதாயங்களை அடைவீர்கள். உடல்நிலையில் கண், காதுகளில் கவனமுடன் இருக்கவும். நீண்டதூரப் பயணங்களை மேற்கொள்வதன்மூலம் சில காரியங்களைச் சாதித்துக்கொள்வீர்கள். புதிய தொழில்கள் ஆரம்பம் செய்யலாம்.

### கடகம்

உத்தியோகத் துறையினர்களுக்கு மேலதிகாரிகளால் கண்டிப்பும், இடமாற்றமும் ஏற்படலாம். திருட்டுப்போன பொருட்கள் திரும்பி வீடு வந்துசேரும். புதிய வீடு, தொழிற்சாலைகளை இடமாற்றம்செய்யப்போட்டதிட்டங்கள் நிறைவேறும். திருமணம்போன்ற சுபகாரிய நிகழ்ச்சிகளுக்கான முயற்சிகளைச் சற்று தள்ளிப்போடுதல் நல்லதாகும். விளையாட்டு துறை சார்ந்தவர்கள் நல்ல மதிப்பெண்களையும் பரிசும், பாராட்டுதல்களை பெறுவார்கள். மனைவி மற்றும் மனைவிவழிச் சொந்தபந்தங்கள் மூலம் ஆதாயங்களை அடைவீர்கள். விவசாயம் செய்வோர்களுக்கு நன்றாகப் பலிதமாகும். மற்றவர்களின் விசயங்களில் தலையிட்டு மனநிம்மதியை இழக்கவேண்டாம்.

### சிங்கம்

நீண்டகாலமாக புதிய வீடு, நிலம் வாங்கப் போட்டிருந்த திட்டங்கள் நிறைவேற வாய்ப்பு உள்ளது. புதிய நண்பர்களின் சேர்க்கையால் மனமகிழ்ச்சி உண்டாகும். தீராத நோய்களுக்கு புதிய முறை மருத்துவத்தின்மூலமாக நல்ல குணம் கிடைக்கும். திருமணம் ஆகாதவர்களுக்கு உறவினர்களின் உதவியால் திருமணம் நடக்கும். மற்றவர்களுக்காக ஜாமீன்போட்டு வீண் பிரச்சினைகளை விலைக்கு வாங்கவேண்டாம். செய்தொழிலில் மிகுந்த கவனமுடன் செயற்படுவது நல்லது. உற்றார், உறவினர் வருகையால் பணச்செலவுகள் உண்டாகும். அரசு சம்பந்தமான வழக்கு விசயங்களில் சாதகமான தீர்ப்புகளை எதிர்பார்க்கலாம்.

### கன்னி

சமுதாய நல்லிணக்கத்திற்காக உழைப்பதில் மனம் மகிழ்ச்சி அடைவீர்கள். அரசு சம்பந்தமான வழக்கு விசயத்தில் மிகவும் கவனம் தேவை. செய்யாத குற்றங்களுக்காக வீண் பழிச்சொல் வந்துபோக வாய்ப்பு உள்ளது. நெருப்பு, மின்சாரங்களில் கவனமுடன் இருத்தல் நல்லதாகும். பிள்ளைகளால் சில பொருட்செலவுகளும், வீண் பிரச்சினைகளும் வந்துபோகும். குலதெய்வ வழிபாடு செய்துவர எண்ணிய எண்ணங்கள் நிறைவேறும். சகோதரர்களால் திடீர் தன – வரவுகள் உண்டாகும். சமுதாய முன்னேற்றத்திற்கான பொதுநலக் காரியங்களில் ஈடுபட்டு நற்பெயர் மற்றும் புகழ் அடைவதன்மூலம் மனநிறைவடைவீர்கள். வங்கிகள்மூலம் எதிர்பார்த்திருந்த கடன்தொகைகள் வந்துசேரச் சற்றுக்காலதாமதம் ஆகலாம்.

### துலாம்

அரசியல்வாதிகளிடம் இருந்து நீண்ட நாட்களாக எதிர்பார்த்துவந்த உதவிகள் கிடைக்கும். வெளிநாடு சென்றுவருதல் போன்ற புதிய முயற்சிகளில் மற்றவர்களை நம்பிப் பணம் மற்றும் பொருட்களைக் கொடுத்து ஏமாற்றம் அடையவேண்டாம். குடும்பச் சொத்துக்கள் சம்பந்தமாகிய விசயத்தில் சச்சரவுகள் வந்துபோகும். விருந்தினர்களின் வரவால் மனமகிழ்ச்சி அடைவீர்கள். செய்தொழிலில் புதிய கூட்டு முயற்சிகளைத் தள்ளிப்போடவும். குழந்தைகளின் உல்லாசப் பயணங்களுக்காக பயணங்களை மேற்கொள்வதன்மூலம் பொருட்செலவுகள் உண்டாகும். நீண்டகாலமாக வராத கடன்கொடுத்து இருந்த பணம் மற்றும் பொருட்கள் காவல்துறையினர்களின் உதவியால் திரும்ப கை வந்துசேரும் காலமாகும்.

### விருச்சிகம்

மாணவர்கள் கல்வியில் நல்ல மதிப்பெண்களையும், பாராட்டுதல்களை பெறுவார்கள். சொத்து சம்பந்தமான விசயங்களில் இருந்துவந்துள்ள பிரச்சினைகள் பெரிய மனிதர்களின் தலையிடுதலால் சாதகமான நல்ல முடிவுகள் கிடைக்கும். குழந்தைகளால் பொருட்செலவுகள் வந்தபோதிலும் அவர்களால் நன்மதிப்பைப் பெறுவீர்கள். உடம்பில் வயிறு, முதுகு போன்ற உபாதைகள் வந்துபோகும். அரசியல்வாதிகள் மூலம் எதிர்பாராத ஆதாயங்களை அடைய வாய்ப்புகள் உள்ளது. வீடு மற்றும் வாகனங்களைப் பழுதுபார்ப்பதால் பொருட்செலவுகள் ஏற்படும். விபரீத எண்ணங்களை நினைத்து மனநிம்மதி இழக்காதிருங்கள். கணவன் – மனைவி உறவுகளில் சிற்சில பிரச்சினைகள் வந்துபோகும்.

### தனுசு

பெண்களால் தொலைதூரத்தில் இருந்து நற்செய்திகளும் பொருள்வரத்தும் உண்டாகும். புதிய நண்பர்களின் சேர்க்கையை தவிர்க்கவும். குலதெய்வ ஆலய வழிபாடு செய்துவருவதற்கான முயற்சிகளில் சில பின்னடைவுகள் ஏற்பட்டு நீங்கும். குலதெய்வ ஆலய வழிபாடு செய்துவர வாய்ப்பு உள்ளது. புதிய நண்பர்களின் சேர்க்கையைத் தவிர்க்கவும். வங்கிகளில் இருந்து நீண்டகாலமாக எதிர்பார்த்து இருந்த கடன் உதவித்தொகைகள் கிடைப்பதற்கு வாய்ப்பு உள்ளது. கண், காதுகளில் கவனம் தேவை. புதிய வீடு மற்றும் நிலபுலன்களை வாங்குவதன் மூலமாக புதிய கடன்களை வாங்குவீர்கள். தேவையற்ற விசயங்களில் தலையிடவேண்டாம்.

### மகரம்

பழுதுபட்ட ஆலயங்களை திருத்திக்கட்டுவதற்கான முயற்சிகளில் ஈடுபடுவீர்கள். சுபகாரிய நிகழ்ச்சிகளுக்காக நீண்டதூரப் பயணமும் வீண் பொருட்செலவுகளும் உண்டாகும். வாகனங்களில் சற்று எச்சரிக்கையுடன் பயணம்செய்வது நல்லதாகும். வடக்குத்திசையில் இருந்து பெண்களால் எதிர்பாராத ஆதாயங்கள் வந்துசேரும். நீண்டகாலமாக எதிர்பார்த்திருந்த வெளிநாடு செல்லுதல் போன்ற முயற்சிகளில் நல்ல செய்திகள் வந்துசேரக்கூடிய காலமாகும். உடல்நிலையில் மூலம் மற்றும் நீர் சம்பந்தம் ஆகிய உபாதைகள் வந்துபோகும். இடமாற்றம் ஏற்படும். புதிய கடன்கள் வாங்குவதைத் தவிர்ப்பது நல்லது.

### கும்பம்

உடம்பில் வாயு மற்றும் வயிறு போன்ற தொல்லைகள் வந்துபோகும். புதிய சொத்துக்களை வாங்குவதற்காகப் புதிய கடன்வாங்குவீர்கள். கலைத்துறையினர்கள் பரிசும் பாராட்டுதல்களையும் பெறுவார்கள். தந்தை – மகன் உறவுகளில் சிறிய பிரச்சினைகள் வந்துபோகும். வீடு, நிலம் போன்றவற்றினை பிரிந்துபோன உறவுகளுடன் திரும்பவும் ஒன்று சேருவதற்கான காலமாகும். புதுப்பித்துக் கட்டுவதற்காகப் போட்ட திட்டங்களில் வெற்றி அடைய வாய்ப்புகள் உள்ளது. தாயின் உடல்நிலையில் புதிய தொழில்களை ஆரம்பம் செய்யப்போட்ட திட்டங்களில் இருந்துவந்த பிரச்சினைகள் தீர்ந்து புதிய தொழில்களை ஆரம்பம் செய்வீர்கள். சிலருக்கு வீடுமாற்றம் ஏற்படக்கூடிய காலமாகும்.

### மீனம்

உடம்பில் கண் மற்றும் காதுகளில் கவனம் தேவை. தீராத நாட்பட்ட நோய்கள் தீருவதற்காகப் புதிய மருத்துவர்களின் உதவிகளை நாடுவது நல்லதாகும். புதிய நண்பர்களின் சேர்க்கை மூலம் காரணமற்ற பிரச்சினைகள் வந்துசேரக்கூடிய காலம் என்பதால் மிகுந்த எச்சரிக்கையுடன் இருத்தல் நல்லதாகும். தந்தையின் உடல்நிலையின் பாதிப்பால் வீண் மருத்துவச் செலவுகள் உண்டாகும். காதல் சம்பந்தமான விசயங்களில் நண்பர்கள் அல்லது உறவினர்களின் உதவிகளால் நல்ல தகவல்கள் வந்தசேரும் காலமாகும். நீண்டதூரப் பயணங்களை மேற்கொள்ள முயற்சிப்பீர்கள். குலதெய்வ வழிபாடு செய்துவருவதற்கான முயற்சிகளில் சில தடைகள் வரக்கூடும்.

Regd. as a News paper at the G.P.O.(QD/86/NEWS/2012)

## புதிய மேஜர்



லண்டன், மினசோட்டாவில் உள்ள டோசெட் ரவுனின் புதிய மேயராக மிகவும் இளம்வயது சிறுவன் தெரிவாகியுள்ளான். ஜேம்ஸ் ரவ்ட்ஸ் என்ற இச்சிறுவனின் வயது 3. மினசோட்டாவில் உள்ள சிறிய சுற்றுலா ரவுனிற்கு அவனது 6 வயது சகோதரனை பின்பற்றி மேயராக தெரிவாகியுள்ளான். துணிவுமிக்க இச்சிறுவன் ரவுனில் இடம்பெற்ற உணவு திருவிழாவில் பதவிப்பிரமாணம் செய்துகொண்டான்.

இவனது சகோதரன் 3 மற்றும் 4 வயதாக இருக்கும்போது இருதடவைகள் மேயராக பணியாற்றியுள்ளான். இதனால் இவர்களது குடும்பத்தினர் பெருமை அடைந்துள்ளனர். 22 குடியிருப்புக்களை கொண்ட டோசெட்டில் உள்ளவர்கள் ஒரு டொலர் கொடுத்து வாக்குகளை வாங்கி தொப்பி ஒன்றிற்குள் போட்டு நிரப்புவார்கள். அந்த வாக்குகளின் எண்ணிக்கையை கொண்டு தெரிவு நடைபெறும். தனது சகோதரனின் ஆதரவுடனும் ஆலோசனையுடனும் தனது புதிய பணியை ஆரம்பித்துள்ளான்.

## அதிர்ஸ்டம்




லண்டன். Phoenix என்ற இடத்தில் ஒரு தம்பதிகள் புதையல் ஒன்றை கண்டுபிடித்து உள்ளனர். இருவரும் தங்கள் வீட்டின் சமையல் அறையை தகர்த்துகொண்டிருந்தனர். அச்சமயம் ஒரு பாதுகாப்பு பெட்டகத்தை கண்டனர்.

இவர்கள் வீட்டிற்கு வந்தபோது ஒரு மருந்து அலுமாரியின் பின்னால் பாதுகாப்பு குறியீடு ஒன்றை கண்டதை ஞாபகப்படுத்தினர். பல தடவைகள் முயன்றதன் பின்னர் பெட்டகம் திறந்தது. உள்ளே? 51,080 டொலர்கள். பெரும்பாலானவை 100 டொலர் நோட்டுக்களும் அத்துடன் 1960 திகதியிட்ட ஒரு சோள மது போத்தலும் இருந்தது. தங்களால் நம்பமுடியவில்லை என அப்பெண் கூறினார். பெண் பெட்டகத்தை அணுக கணவர் எடி கத்தினார். பெட்டிக்குள் உடல் ஏதும் இருக்கலாம் என்பது அவரது யூகம்.

ஆனால் உள்ளே ஒரு புத்தகம் புத்தகத்திற்குள் ஒரு மர்மமனிதனின் கறுப்பு வெள்ளை படம். படத்தின் பின்னால் ஒரு செய்தி. "அலன், உனக்கு ஒரு புத்தகம். நீ கட்டாயம் வாசிக்க" என்பது அந்த செய்தி. "நான் சில பக்கங்களை கோடிட்டுள்ளேன்". இப்படிக்கு உனது நண்பன் வின்சென். பல பக்கங்களில் கோர்வையாக துப்புக்கள். துப்புக்கள் பல பொருட்களை அந்த வீட்டிற்குள் கண்டுபிடிப்பதற்கான திட்டம்போன்று காணப்பட்டது. புத்தகத்தின் ஏழாவது பக்கத்தில் அட்டை ஒன்றில் அரிசோனா மாநிலத்தின் படம். 11ஆவது பக்கத்தில் ஒரு வீட்டின் படம் அதன் கீழ் பயனுள்ள முடிவுகள் அங்கு வழங்கப்பட்டுள்ளன என்ற வாக்கியம். படத்தின் பின்னால்" மூன்றாக பிளந்தநிலையை சித்தரிக்கும் ஒரு மரம்." அதில் ஒரு மரம் மூன்றாகின்றது என்ற வாக்கியம். இன்னும் ஒரு பிங்கோ அட்டை அதில் மூன்று இலக்கங்கள் வட்டமிட்டபடி. தம்பதியர் இருவரும் பணத்தை என்ன செய்வதென்று தெரியாத ஒரு தர்மசங்கடமான நிலையில் உள்ளனர். புத்தக்தில் குறிப்பிடப்பட்ட அலன் என்பவர் எங்காவது இருந்தால் அனைத்தும் அவருக்கு சேர வேண்டிய தென அவர்கள் கருதுகின்றனர். ஆனால் சோளமதுவை தாங்கள் வைத்துக்கொள்ள போவதாக தெரிவித்தனர்.

## மயானம்



## சாதனைப் பெண்




கனடா - நியூ பிறவுன்ஸ்விக்கை சேர்ந்த 12வயது பெண் 15 கிலோமீற்றர் Northumberland




உள்ளே? 51,080 டொலர்கள். பெரும்பாலானவை 100 டொலர் நோட்டுக்களும் அத்துடன் 1960 திகதியிட்ட ஒரு சோள மது போத்தலும் இருந்தது. தங்களால் நம்பமுடியவில்லை என அப்பெண் கூறினார். பெண் பெட்டகத்தை




## அதிர்ஸ்டம்

அணுக கணவர் எடி கத்தினார். பெட்டிக்குள் உடல் ஏதும் இருக்கலாம் என்பது அவரது யூகம்.

ஆனால் உள்ளே ஒரு புத்தகம் புத்தகத்திற்குள் ஒரு மர்மமனிதனின் கறுப்பு வெள்ளை படம். படத்தின் பின்னால் ஒரு செய்தி. "அலன், உனக்கு ஒரு புத்தகம். நீ கட்டாயம் வாசிக்க" என்பது அந்த செய்தி. "நான் சில பக்கங்களை கோடிட்டுள்ளேன்". இப்படிக்கு உனது நண்பன் வின்சென். பல பக்கங்களில் கோர்வையாக துப்புக்கள். துப்புக்கள் பல பொருட்களை அந்த வீட்டிற்குள் கண்டுபிடிப்பதற்கான திட்டம்போன்று காணப்பட்டது. புத்தகத்தின் ஏழாவது பக்கத்தில் அட்டை ஒன்றில் அரிசோனா மாநிலத்தின் படம். 11ஆவது பக்கத்தில் ஒரு வீட்டின் படம் அதன் கீழ் பயனுள்ள முடிவுகள் அங்கு வழங்கப்பட்டுள்ளன என்ற வாக்கியம். படத்தின் பின்னால்" மூன்றாக பிளந்தநிலையை சித்தரிக்கும் ஒரு மரம். அதில் ஒரு மரம் மூன்றாகின்றது என்ற வாக்கியம். இன்னும் ஒரு பிங்கோ அட்டை அதில் மூன்று இலக்கங்கள் வட்டமிட்டபடி. தம்பதியர் இருவரும் பணத்தை என்ன செய்வதென்று தெரியாத ஒரு தர்மசங்கடமான நிலையில் உள்ளனர். புத்தக்தில் குறிப்பிடப்பட்ட அலன் என்பவர் எங்காவது இருந்தால் அனைத்தும் அவருக்கு சேர வேண்டிய தென அவர்கள் கருதுகின்றனர். ஆனால் சோளமதுவை தாங்கள் வைத்துக்கொள்ள போவதாக தெரிவித்தனர்.



## மயானம்




ஏறத்தாழ 60 இலட்சம் மனிதர்கள் புதைக்கப்பட்டுள்ளனர். பிரான்சில் மனித எலும்பு, மண்டை ஓடுகளால் சுவர் போல் அடுக்கப்பட்ட கல்லறைதான் உலகின் மிகப்பெரிய மயான பூமியாக விளங்குகிறது.

பிரான்ஸின் தலைநகரான பாரீஸில், டென்ஃபெர்ட் றொச்செரியோ என்ற இடத்திலேயே இந்த கல்லறை அமைந்துள்ளது. இங்கு ஏறத்தாழ 60 இலட்சம் மனிதர்கள் புதைக்கப்பட்டுள்ளனர்.

தோண்டி எடுக்கப்பட்ட மனித எலும்புகளும் மண்டை ஓடுகளும் விறகு போல சீராக நெருங்க அடுக்கி, சுவர் போல அமைக்கப்பட்டுள்ளது. அந்த அடுக்குகளுக்கு ஊடாகச் சென்று, பார்வையிட வசதியாக குறுகலான பாதையும் இந்த கல்லறைக்குள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

## சாதனைப் பெண்




கனடா - நியூ பிறவுன்ஸ்விக்கை சேர்ந்த 12வயது பெண் 15 கிலோமீற்றர் Northumberland நீரிணையை நீந்தி கடந்த மிக இளம் பெண் என கின்னஸ் புத்தகத்தில் இடம்பெறும் வாய்ப்பை பெற்றுள்ளாள். 12வயதுடைய புறூக்லின் டத்றைட் என்ற இவள் கேப் யுறிமெயின், நியூ பிறவுன் ஸ்விக்கிலிருந்து போடன் - காளெட்டோன், பிறின்ஸ் எட்வேட் ஐலன்ட் வரை நான்கு மணித்தியாலங்களில் நீந்தி கடந்துள்ளார்.

ஒரு தருணத்தில் சமுத்திர தண்ணீரை தாண்டி செல்வது கடினமாக இருந்ததென தெரிவித்தபோதிலும் ஆனால் அதையும் தாண்டி சென்று குறிப்பிடப்பட்ட நேரத்திற்கு ஒரு மணித்தியாலத்திற்கு முன்னதாக முடித்துள்ளாள். இது ஒரு அழகான பெரிய அனுபவம் என கூறினாள். நோவ ஸ்கோசியாவில் உள்ள தீராத நோயால் பாதிக்கப்பட்ட நீடித்த நிலையில் அல்லது விசேட தேவைகள் கொண்ட சிறுவர் முகாமான Bridadoon Village facility-ற்கு நிதி திரட்டும், கிட்டத்தட்ட 50 நீச்சலாளர்கள் பங்குபற்றும் அணியில் டத்றைட்டும் ஒருவர்.



## தாய்மை

பலப்பிட்டிய, ரன்தோம்பே என்ற பிரதேசத்தில் உள்ள வீட்டில் வளரும் பூனை நான்கு குட்டியை ஈன்றுள்ளது.

இந்த நிலையில், வீதியில் தனித்து காணப்பட்ட கீரிப்பிள்ளை குட்டியை வீட்டு உரிமையாளரான ஏ.எச்.சந்திசிறி என்பவர் வீட்டுக்கு கொண்டுவந்து, பூனைக்குட்டிகளுடன் விட்டுள்ளார்.

கீரிப்பிள்ளை குட்டி பூனையிடம் பால் குடிக்க ஆரம்பித்துள்ளது. பூனையும் தன் குட்டிகளைப் போல் கீரிப்பிள்ளைக்கும் பாலூட்டுகிறது. எல்லாவற்றையும் விஞ்சிவிட்டது தாய்ப்பாசம்.



இப்பத்திரிகை 378, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள அச்சகத்தில் ... லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் செப்ரெம்பர் 17 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.